2017 மார்ச் 13
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 13 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 041

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



சாதனை படைத்தார் ஹேரத் வங்கத்தை வென்றது இலங்கை 12»



ஹசனலி மீதான ஹக்கீமின் அணுகுமுறைகளும் வீசத் தொடங்கும் அனுதாப அலைகளும் 04»




வேலையற்ற பட்டதாரிகளின் கண்ணீர் கதைகள் 09»

# ஐ.நா. தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் இல்லை



## தேசிய சமாதானப் பேரவை தலைவர் ஜெஹான் பெரேரா

■ அ. அருண் பிரசாந்த்

ஐக்கிய நாடுகள் சபையினால் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கை விவகாரம் தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தில் கலந்து நீதிமன்ற விசாரணை குறித்து எந்தவொரு வலியுறுத்தலும் இடம்பெற்றிருக்காது என்று ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை அரசின் தூதுக்குழு சார்பில் கலந்த கொண்டவரும் தேசிய 11 »»»»

# பாதிப்பான தீர்மானங்களுக்கு ஜனாதிபதி இணங்க மாட்டார்

## இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா



■ அ. அருண் பிரசாந்த்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை விவகாரம் தொடர்பில் எத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றைக் கூட ஜனாதிபதி செயற்படுத்த மாட்டார் என்று அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். 11 »»»»

# ஜனாதிபதி, அமைச்சர்களின் சொத்து விபரங்களை வெளியிடவும்



## ஜே.வி.பி. கோரிக்கை

■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் அவர்களின் சொத்து விபரங்கங்களை வெளியிடவேண்டும் என்று ஜேவிபி கோரிக்கை விடுத்துள்ளது.

மறுக்கும் பட்சத்தில் தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி மக்கள் இது தொடர்பிலான தகவல்களை பெற வேண்டும் என்றும் அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. 11 »»»»

# பேருவளை ஜாமிஆ நளீமிய்யாவுக்கு விரைவில் பல்கலைக்கழக அந்தஸ்து

## 10 வது பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல

■ பீ.ஏ. முக்தார், பேருவளை

இலங்கையிலும் சர்வதேசத்திலும் புகழ் பரப்பிக்கொண்டிருக்கும் பேருவளை ஜாமிஆ நளீமிய்யா காலபீடத்திற்கு விரைவில் பல்கலைக்கழக அந்தஸ்த்தை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் அது மிக விரைவில் சாத்தியமாகும் என்றும் தெரிவித்த உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நீண்ட காலமாக முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்திருந்த ஒரு கைங்கரியம் தேசிய அரசாங்கம் மூலம் நிறைவேற்றப்படுவதாகவும் கூறினார்.

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட 10 ஆவது பட்டமளிப்புவிழாவில் 11 »»»»




# காத்தான்குடி படுகொலைகளை சர்வதேசம் கண்டிக்காததேன்?

## சரத் வீரசேகர எம்.பி. கேள்வி



■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்களை சுட்டுக்கொன்ற புலிகளை கண்டிக்காத சர்வதேசம் தமிழர்களை புலிகளிடமிருந்து காப்பாற்றிய எமது இராணுவத்தைக் கண்டிப்பது ஏன்? இராணுவத்தினர்மீது போர்க் குற்றச்ச்சாட்டுக்களை சுமத்துவது ஏன்?

- இவ்வாறு முன்னாள் எம்பி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கேள்வி எழுப்பியுள்ளார். 11 »»»»

# பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம்

## மஹிந்த தரப்பு தகவல்




■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

புதிய அரசமைப்பின்கீழ் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தந்த மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர்களின் கீழ் இந்த அதிகாரங்கள் வழங்கப்படும் என்றும் மஹிந்த தரப்பைச் சேர்ந்த கேகாலை மாவட்ட எம்பி கனக ஹேரத் தெரிவித்துள்ளார். 11 »»»»

# காத்தான்குடியில் குழு மோதல் இருவர் வைத்தியசாலையில்; எட்டு பேர் கைது

■ காத்தான்குடி ஏ.எல்.டீன்பைரூஸ்

காத்தான்குடி அப்துர் றவூப் மௌலவி தரப்பினருக்கும் ஸஹ்றான் மௌலவி தரப்பினரானதேசியதௌஹீத் ஜமாஅத்தின்ஆதரவாளர்களுக்கும் இடையில் மார்க்கசர்ச்சைமுரண்பாடுகாரணமாக ஏற்பட்டமோதல்களின் போதுவாள் வெட்டுக்கு இலக்காகி இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகபொலிசார் தெரிவித்தனர்.

மேலும் தெரியவருவதாவது,

காத்தான்குடியைதளமாககொண்டு இயங்கும் தேசியதௌஹீத் ஜமாஅத்தின் ஏற்பாட்டினில் அத்வைதிகளை மதம் மாறியவர்கள் என்றுசொல்வதேன் எனும் தலைப்பினில் மார்க்கப் பிரச்சாரமாநாடு ஒன்றுகடந்த (10ஆம் திகதி வெள்ளிக்கிழமை) மாலைகாத்தான்குடி கர்பலாவீதி (அலியார் சந்தியைஅண்மித்ததாக) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தமாநாட்டினைஏற்பாடுசெய்திருந்ததேசியதௌஹீத் ஜமாஅத்தினர் மாநாட்டுக்கான சகலஏற்பாடுகளையும் குறிப்பாக 11 »»»»



# நளீமிய்யா உதவிப் பணிப்பாளர் கைருல் பஷர் காலமானார்



■ பீ.ஏ. முக்தார், பேருவளை

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா காலபிடத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ.கைருல் பஷர் நளீமி நேற்று 12 ஆம் திகதி தனது 60 ஆவது வயதில் காலமானார்.

5 பிள்ளைகளின் தந்தையான இவரது ஜனாஸா 11 »»»»

## தமிழக மீனவர் துப்பாக்கி பிரயோகம்

# ஜி.பீ.எஸ். தரவுகளை வழங்க இந்திய அரசாங்கம் மறுப்பு

## விசாரணைகள் தாமதம்

## கடற்படை தளபதி

■ அ. அருண் பிரசாந்த்

தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட படகின் ஜி.பி.எஸ். தரவுகளை இந்திய கடற்படை வழங்க மறுப்பதாலேயே இதுதொடர்பிலான விசாரணையில் தாமதம் ஏற்படுகின்றது என்று கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜய குணரத்ன தெரிவித்தார்.

அத்தோடு, கைது செய்யப்படும் இந்திய 11 »»»»

# கிண்ணியாவில் டெங்கு தீவிரம் மேலும் இருவர் நேற்று பலி



■ கிண்ணியா நிருபர்கள்

கிண்ணியாவில் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இருவர் நேற்று அதிகாலை மரணமானார்கள்.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று 11 »»»»

# இந்திய மீனவர் வருகையின்றி கச்ச தீவு திருவிழா நிகழ்வு



■ அ. அருண் பிரசாந்த்

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றைய தினம் முதன் முறையாக இந்திய மீனவர்களின் பங்கு பற்றலின்றி இடம்பெற்றது. கச்சதீவு ஆலயம் புதுப்பிக்கப்பட்டதையடுத்து இடம்பெறும் முதலாவது திருவிழா என்பதால் இந்திய மீனவர்களின் வருகை அதிகமாக இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட 11 »»»»

நவமணி

www.facebook.com/NavamaniOfficial

# செப்.24க்கு முன் என் அனுமதியின்றி மாகாண சபையை கலைக்க முடியாது

## கிழக்கு முதல்வர் ஹாபிஸ் நஸீர்



(கல்முனை பி. முஹாஜிரீன்)

தமது அனுமதியின்றி கிழக்கு மாகாண சபையை எதிர்வரும் செப்டம்பர் 24 ஆம் திகதிக்கு முன்னர் கலைக்க முடியாது என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

இந்த சூழ்நிலையில் பலர் ஜோதிடக் காரர்களாக மாறி மாகாண சபை இன்று கலையும், நாளை கலையும் என ஆருடம் கூறிக் கொண்டு திரிவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டார்.

வாழைச்சேனை வை அஹமட் வித்தியாலயத்தில் இடம் பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்த இந்த கிழக்கு மாகாண ஆட்சியில் கடந்த ஆட்சியாளர்கள் செய்யாத பல சேவைகளை மக்களுக்கு நாம் செய்திருக்கின்றோம். கடந்த 2016 ஆம் ஆண்டு இதற்கு முன்னர் இருந்த மாகாண சபைகளுக்கு பெற்றுக் கொடுக்க முடியாத நிதியை நாம் இந்த மாகாணத்திற்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

பிரச்சினைகளை உருவாக்கி அதனூடாக மக்களை உணர்ச்சி வசப்படுத்தி மேற்கொள்ளப்படும் வியாபர அரசியல் செய்பவர்கள் அல்ல நாங்கள். அவ்வாறான அரசியல் செய்வதற்கான எந்த தேவையும் எங்களுக்கு இல்லை. மக்களுடைய பிரச்சினைகளை அடையாளங்கண்டு அவற்றை தீர்க்கும் அரசியலையே நாம் செய்து வருகின்றோம்.எமக்கு கையில் நிதி கிடைத்த பின் தான் எந்தவொரு திட்டத்திற்கும் நாம் அடிக்கல் நடுகின்றோம். நான் இந்த இடத்தில் ஒரு சவால் விடுக்க விரும்புகின்றேன் எங்கள் அமைச்சர்கள் மீது இருக்கும் ஓர் ஊழல் குற்றச்சாட்டை காட்டுங்கள். கடந்த காலத்தில் இருந்த ஊழல் குற்றச் சாட்டுக்களும் இன்று தேசிய அரசாங் கத்தில் இருக்கும் சிலர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. எனவே ஊழலற்ற ஆட்சியை முன்னெடுத்து தேசிய அரசாங்கத்துக்கே கிழக்கு மாகாண சபை முன்னுதாரணமாக இருக்கின்றது.

நாம் செயற்திறனாக இயங்கவில்லை என்று யாரும் எம்மீது குற்றம் சுமத்த முடியாது. எமது மாகாண சபைக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்கப்பட்ட நிதியில் ஒரு சதம் கூட வீணாக திரும்பிப் போகவில்லை. இன்று கிழக்கில் வளம் குறைந்த பாடசாலைகளாக இருந்த பல பாடசாலைகள் இன்று வளம் மிக்க பாடசாலைகளாக மாறி இருக்கின்றன. இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் மேலும் பல பாடசாலைகளையும் உள்ளீர்த்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் கடந்த 2014 ஆம் ஆண்டுவரை வெளி மாகாணங்களிலேயே நியமனம் பெற்று வந்தனர். ஆனால் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் அவர்களுக்கு சொந்த மாகாணத்திலேயே நியமனம் வழங்கி அந்த நடைமுறையை பாரிய போராட்டத்துக்கு மத்தியில் மாற்றியுள்ளோம்.

அவை எல்லாவற்றையும் விட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்து ஒரு நல்லாட்சி யை முன்னெடுத்து வருகின்றோம். அரசாங்கத்தில் இரண்டு கட்சிகள் முன்னெடுக்கும் ஆட்சிக்குள்ளேயே பல முரண்பாடுகள் பகிரங்கப்படுத்தப்பட்டு இன்று இரு பிரதான கட்சிகளின் அரசியல்வாதிகளே மேடைகளில் பகிரங்கமாக சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.ஆனால் நாம் நான்கு சுவர்களுக்குள் எமக்கு எழும் பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வு கண்டு இன,மத, மொழி பேதம் பாராது அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம். இதையெல்லாம் சகிக்காதவர்கள் தான் மாகாண சபை இன்று கலையும் நாளை கலையும் என்று கூறிவருகின்றார்கள். ஆனால் அவர்களின் பகற்கனவு எப்போது கலையும் என்று தான் தெரியவில்லை.

ஆனால் எமது மாகாண சபையின் செயற்திறனைக் கண்டு சில அமைச்சர் களே அச்சப்பட்டுள்ளமையே எமது இரண்டு வருட ஆட்சியின் சாதனை எனக் கருதுகின்றோம். கிழக்கு மாகாண சபையை நான் கையெழுத்திடாமல் கலைக்க முடியாது என்பதை முதலில் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மேலும் கூறினார்.

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி

(திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)

கந்தளாய். அக்போபுர பகுதியைச் சேர்ந்தவர் மாடு மேய்த்துக்கொண்டிருந்த வேளை மின்னல் தாக்கி கடந்த சனிக் கிழமை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அதே இடத்தைச்சே ர்ந்த எம்.ஜி.அருண சாந்த குமார திஸா நாயக்க (46 வயது) என்பவராவார். குறித்த நபரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ள தாகவும் அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

## பாகிஸ்தானிய கடற்படை கப்பல்கள் இலங்கை விஜயம்

பாகிஸ்தானிய கடற்படை கப்பல்க ளான நஸ்ர், மற்றும் சயிப் ஆகியன மார்ச் 12இல் நல்லெண்ண விஜயத் தினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.

இவ்விஜயமானது ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையில் காணப்படுகின்ற பாரம்பரிய நட்புறவினை வலுப்படுத்துவ தாக அமைகின்றது. F 22P வகையான பி.என்.எஸ்.சயிப் கப்பலானது சீன பாரம் பரியத்தினை சார்ந்த போர்க்கப்பலாகும். இக்கப்பலானது ஆயுதங்கள், சென்சார்கள் மற்றும் இயந்திரங்களை தாங்கிய பல் வேறு விதமான கடற்சார் பாதுகாப்பு திட்டங்களில் ஈடுபடுவதோடு பி.என். எஸ்.நஸ்ர் பாகிஸ்தானிய கடற்படை யின் முன்னணி போர்க் கப்பலாகும். இரு கப்பல்களும் பாரிய பன்னாட்டு பயிற் சிகளில் ஈடுபட்டுள்ளதுடன், 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது துரித நிவாரண நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளமை விஷேட அம்சமாகும். இதன்பொழுது இரு தரப்பு கடற்படை வீரர்களும் பல தொழில்சார் நடவடிக் கைகளில் ஈடுபட திட்டமிடப்பட்டுள்ள துடன் மார்ச் 13இல் வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பேருவளைக்கு விஜயம் செய்த உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு ஜாமீயா நளீமிய்யா கலாபீட பணிப்பாளரும் பன்னூலாசிரியருமான கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி எழுதிய முஸ்லிம் ஒப் ஸ்ரீ லங்கா என்ற ஆங்கில நூலின் பிரதியை நூலாசிரியர் வழங்கிவைத்தார். இதன்போது தேசிய ஊடக மத்திய நிலையத்தின் தலைவர் இம்தியாஸ் பாகிர் மாக்கார், ஜாமியா நளீமியா கலாபீட நிர்வாக சபைத் தலைவர் யாகூத் நளீம், கலாபீட பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முகம்மட் (நளீமி) சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப், இசாம் ஹனபி, இபாம் ஹனபி, உட்பட குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோர் நிற்பதை படங்களில் காணலாம். சீனன்கோட்டை இசாம் ஹனபியின் இல்லத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது நூல் கையளிக்கப்பட்டது. (பேருவளை பி.எம். முக்தார்)

# நாட்டின் முன்னேற்ற பணிகளுக்கு பெண்களின் பங்கு மகத்தானது

## மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார

(வெலிகம நிருபர்)

சமூக பொருளாதார ரீதியில் பெண்கள் இந்நாட்டின் அபிவிருத்திக்கு ஆற்றி வரும் சேவை அளப்பரியதாகும். பெண்களின் உளவளத்தை வலுவூட்டல் செய்ய தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என மகளிர் மற்றும் சி றுவர் அபிவிருத்தி அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்தார்.

மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட் டுத் திடலில் அண்மையில் நடைபெற்ற தேசிய மகளிர் தின வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் அமைச்சர் தொடர் ந்து பேசுகையில்:- பெண்களின் பங்களிப்பானது வீட்டினதும், நாட்டின தும் இயக்கத்திற்கும், அபிவிருத்திற்கும் இன்றியமையாததாகும். பெண்கள் தங்களுக்கான உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்கள். முற்காலத்திலிருந்தே பெண்கள் பல இன்னல்களை அனுப வித்து வருகின்றனர். பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சர்வ தேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை பெண்களின் விகிதாசாரத்தை எடுத்து நோக்கும் போது, தற்போதைய அரசிலமைப்பின் படி பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்க ளில் 13 உறுப்பினர்கள் மாத்திரமே பெண்களாக இருக்கின்றனர். இத் தொகையை அதிகரிக்க நாம் முயற்சிக்க வேண்டும். இன்று அரசாங்கத் துறைகளில் ஆணாதிக்கம் குறைந்து பெண்ணாதிக்கம் அதிகரித்து வருகிறது.

இதற்குக் காரணம் அரசாங்க போட்டி பரீட்சைகளில் பெண்கள் சித்தியடைவது அதிகரித்து காணப்படுவதாகும். அரசாங்க திணைக்களங்களில் மேலதிகாரிகளாக பெண்கள் பணி புரிகிறார்கள். நீதித் துறையில் 64 பேர் பெண் நீதிபதிகளாகவுள்ளனர்.முன்னைய அரசாங்க காலத்தில் பெண்ணுரிமைகள் மறுக்கப்பட்டன. நாட்டில் பெண்கள் துஷ்பிரயோகங்கள் சர்வ சாதாரணமாக இடம்பெற்றன. கூட்டு எதிர்க்கட்சியினர் கொழும்பில் பெண்கள் தினத்தை நடத்தி கோஷங்களை எழுப்பினர். அவர்கள் காலத்தில் பெண்கள் வன்முறைகளுக்கெதிராக நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்றும் தெரிவித்தார்.

## மேல் மாகாண வீதிகளில் சுற்றித் திரியும் மாடுகளைப் பிடிக்க நடவடிக்கை

(மினுவாங்கொடை ஐ. ஏ. காதிர்கான்)

மேல் மாகாண கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட வீதிகளில் சுதந்திரமாக உலாவித் திரியும், கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து, பாதுகாப் பாக பட்டிகளில் அடைத்து வைக்கும் திட்ட மொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து, இன்றி லிருந்து இத்திட்டத்தை அமுல்படுத்த வுள்ளன.

பொது மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் இடைஞ்சல்கள் ஏற்படுதல், போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்படுதல், வாகன விபத்துக்கள் ஏற்படுதல் உள்ளிட்ட ஏராளமான பிரச்சினை களுக்கு மக்கள் முகங்கொடுக்க நேரிட்டுள்ள தினாலேயே, இந் நடவடிக்கைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக, அமைச்சும் அதிகார சபையும் அறிவித்துள்ளன.



கண்டி - வத்துகாமம் பிரதான வீதி மடவள பஸாரில் குப்பை கூழங்களை பிரதேசசபை ஊழியர்களே அருகில் ஓடும் பலதொட்ட ஓயா நீரோடைக்குள்ளும் கானுக்குள்ளும் கொட்டி வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பொல்கொல்ல நீர்த்தேக்கத்துக்குச் செல்லும் நீர் அசுத்தமடைவதுடன் சுற்றுச்சூழலும் மாசடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இவ்விடத்தில் பிற பிரதேச ங்களிலிருந்து வாகனங்களில் குப்பை கூழங்களை பொலிதீன் பொதிகளில் கட்டி வீசி விட்டுச் செல்வதாலும் இந்நிலைமை ஏற்படுகின்றது.

(படம் - ஏ.எஸ்.ஏ. ருஷ்தி)

### நீத்தார் பெருமை

# சிரேஷ்ட விரிவுரையாளரான மௌலவி ஏ.எம்.எம். கௌஸ்



'கல்விக்கு உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை' என்பது பொன் மொழி. இதற்கிணங்க இறந்தும் இறவா புகழ்பெற்று வாழ எல்லோருக்கும் பாக்கியம் கிடைப்பதில்லை. இந்த வரிசையில் எமது மனக் கண் முன்னே தோன்றும் மனிதர், வெலிகாமம் கல்பொக்கையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளருமான மௌலவி அல்ஹாஜ் கௌஸ் அவர்கள். அவர் தனது 87 ஆவது வயதில் சென்ற 09.02.1977 அன்று வெள்ளிக்கிழமை இரவு இறையடி சேர்ந்தார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

இவர் 1930.04.17 ஆம் திகதி அப்துல் மஜீத் ஸபா உம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் வெலிகம அறபா தேசிய பாடசாலையில் கல்வி கற்றவராவார். இவர் பாடசாலைக் கல்வியுடன் பகுதி நேர மாணவராக மத்ரஸதுல் பாரி அறபுக் கல்லூரிக்குச் சென்று அங்கு மார்க்கக் கல்வியையும் கற்று அல் ஆலிம் பட்டத்தையும் பெற் றுக் கொண்டார். இவர் சிறுவயதிலே தன் தகப்பனை இழந்தார். இறைவனின் கிருபையால் இவர் கல்வி கற்று வெற்றி பெறக் காரணம் தன் தாயின் முயற்சியேயாகும்.

இவர் தான் கற்ற மார்க்கக் கல்வியை பயன்படுத்தி கல்வி கற்ற மத்ரஸாவிலே இமாமாக கடமை புரிந்துள்ளார். குர்ஆன் மத்ரஸாவில் முதர்ரிஸாகவும் இருந்துள்ளார். இவர் மார்க்கப் பற்றுள்ளவராவார்.

இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் முஸ்லிம் சேவையில் வாரா வாரம் ஹதீஸ் சொற்பொழிவுகளை பல வருட காலம் நிகழ்த்தியுள்ளார்.

இவர் அல் ஆலிம் இப்றாஹிம் தம்பதி யரின் மகளை 1961இல் திருமணம் முடித்தார். இவருக்கு இரு புதல்வர்களும் மூன்று புதல்விகளும் உள்ளனர். இவர் தன் மனைவிக்கு சிறந்த கணவராகவும் தம் பிள்ளைகளுக்கு சிறந்த முன்மாதிரி யான தகப்பனாகவும் இருந்தார். இவர் இரத்த உறவுகளையும் பேணி வந்தவராவார்.

இவருக்கு 1957 ஆம் ஆண்டு அரசாங் கத் தொழிலான ஆசிரியர் தொழில் கிடைத்தது. காலி மஹ்ஹருஸஉல்ஹிய்யா மத்திய கல்லூரியில் ஆசிரியராக நான்கு வருடங்கள் கடமை புரிந்தார். அங்கு கல்வி கற்பிக்கும் காலங்களில் தன் அன்பினாலும் பண்பாலும் மாணவர் களை ஆதரித்த சிறந்த ஆசானாக விளங்கினார். இவர் கல்வியில் பின் தங்கிய மாணவ மாணவிகளை ஊக்குவித்து பல உதவிகளையும் செய்து முன்னேற வைத்தார். இதனால் இவர் மாணவ மாணவிகளின் பெற்றோர் மத்தியிலும் கூட நற்பெயரைக் பெற்றுக் கொண்டதோடு, அவர்களின் மனதில் நீங்காத ஓர் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவர் 1961 இல் கண்டி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாள ராக பதவி உயர்வு பெற்று கடமை புரிந் தார். பின் பண்டாரவளை கஹகொல்லை முஸ்லிம் பாட சாலையில் அதிபராக கடமை புரிந்தார்.

பின்னர் 1964 ஆம் ஆண்டு அட்டாளச்சேனை ஆசிரியர் பயற்சிக் கலாசாலையில் சிரேஷ்ட விரிவுரையாளராக 10 வருடங்கள் கடமை புரிந்தார். இவர் தம் ஆசிரியர் தொழிலினூடாக இஸ்லாமிய வாழ்க்கை முறையை ஆசிரியர்கள் மத்தியில் அமுல்படுத்தத் தயங்கவில்லை.

இவரின் மாணவர்களாகிய ஆசிரியர் கள் இலங்கையின் நாலா புறங்களிலும் கல்வி என்னும் ஒளியை பரப்பி கொண்டிருக்கின்றனர்.

இவர் 1973ம் ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெறும்வரை களுத்தறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கான அறபு வட்டாரக் கல்வி அதிகாரியாக கடமை புரிந்தார். இவர் இப்பணியை 17 வருட காலம் கடமை உணர்வோடு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் அரசாங்கத் தொழிலிலிருக்கும் காலங்களில் பல உயர் பதவிகளை அரசாங்கம் வழங்கியது.

1990ஆம் ஆண்டு தொழிலிருந்து ஓய்வு பெற்றார். பின் அவர் தமது ஊரான வெலிகமையில் கணக்காளராக இறுதி வரை சேவை செய்தார். இச் சேவையால் வியாபாரிகளின் மத்தியிலும் வர வேற்பையும் மரியாதையையும் பெற்றவராக இருந்தார்.

இவர் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வெலிகம கிளை உறுப்பின ராகவும் இருந்துள்ளார். இவரை இரு முறை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கௌரவித்து விருதும் வழங்கி யது. இவர் மார்க்க விடயங்களையும் உறுதியாகக் கடைபிடித்தார்.

இவர் ஓர் சமூகப்பற்றுள்ளவராவார். அமைதியான சுபாவம் பிறருக்கு உதவு தல், கிழ்படிவு இன்முகம் கலந்த குணம் கொண்டவர் என்றால் மிகையில்லை.

இவருக்கு தமது ஊர்ப் பள்ளி நிர்வாகத்தால் சில பொறுப்புக்களும் வழங்கப்பட்டன. அவர் அதை கடமையுணர்வுடன் நிறைவேற்றினார். எவருடனும் சிரித்த முகத்துடன் ஏழை பணக்காரர் என்று பாகுபாடின்றி பழகி பல வழிகளிலும் அவர்களுக்கு உதவியதால் ஊர் மக்களிடத்தில் நற் பெயரையும் துஆ பிரார்த்தனையைபெற்றுக் கொண்டார் என்பதற்கு அன்று வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு அண்ணாரின் ஜனாஸாவில் கலந்து கொண்ட மக்கள் திரளின் காட்சி பகரும் என்பது குறிப்பிடத்தக்கது.

யா அல்லாஹ் மௌலவி அல்ஹாஜ் கௌஸ் தனது வாழ்நாளில் செய்த பாவங்களை மன்னித்து, சேவைகளை ஏற்று உயர்ந்த பிர்தௌஸ் என்னும் சுவர்க்கத்தை வழங்குவானாக! ஆமீன்.

எம்.ஜீ. தும்ரா கான் , வெலிகம

## இந்திய பஞ்சாயத்து சபைகள் போல்

# எமது உள்ளூராட்சிமன்றங்களுக்கும் அதிக அதிகாரங்கள் வழங்கவேண்டும்

### கிழக்கு விரிவுரையாளர் சிராஜ் மஷ்ஹூர்



(அப்துல்சலாம் யாசீம்)

இந்தியாவில் பஞ்சாயத்து சபைகளுக்கு அதிகாரம் உள்ளது போல இலங்கையிலும் உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்துறை விரிவுரையாளர் சிராஜ் மஷ்ஹூர் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பும் தேர்தல் முறை மாற்றம் தொடர்பான கருத்தாடல் நிகழ்வு நேற்று ஹொரவ்வபொத்தான பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் சமகாலத்தில் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக பல விடயங்கள் பேசப்படுகின்றன. அதில் முக்கியமாக அதிகாரப்பகிர்வு விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய அதிகாரங்கள் மாகாண அதிகாரங்கள் என்று தான் அதிகம் கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனாலும் மூன்றாவது மட்டமான உள்ளூராட்சி மன்றங்கள் அதிக கணவம் செலுத்த பார்க்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக செய்யப்படுகின்ற சேவைகள் தான் அதிகம் மக்களுக்கு நேரடியாக சென்றடைகின்றது.

மாகாண அதிகாரம் என்று வருகின்ற போது பெரும்பான்மையினத்தவருக்கே அதிகளவில் 07 மாகாணங்கள் இருக்கின்றது. சிறுபான்மை சமூகத்தினரை பொறுத்தவரை குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் அந்த அதிகாரங்கள் இருக்கின்றது.

ஆனாலும் தென் இலங்கையில் வாழுகின்ற முஸ்லிம் மக்கள் மலையக தமிழர்கள் இதில் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகின்றனர். அவர்களுக்கு இந்த உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் அதிகாரப்பகிர்வு என்ற அம்சம் தான் மிகவும் பயன்மிக்கதாக அமையும். அதேபோல சிறுபான்மை சமூகங்களை பாதுகாக்க கூடிய வகையிலே சிறுபான்மை கொமிஷன் (மைனொரிட்டி) என்ற ஆணைக்குழு இந்தியாவில் உள்ளது போல இங்கும் அமைக்கப்படுவது அதிகம் பிரயோசனமானது.

அதேபோல செனட் சபை நாட்டில் எல்லா மக்களுக்கும் தீர்வை பலப்படுத்துவதாக இருக்கும். இதனையடுத்து தேர்தல் முறையிலே எல்லை நிர்ணயம் சிக்கலான விவாதப்பொருளாக மாறியிருக்கின்றது. எல்லை நிர்ணயம் என்று வருகின்ற போது அதிலே உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் தான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. அது அரச வர்த்தமானியிலே பிரசுரிக்கப்படவிருக்கின்ற சூழலிலே இருக்கின்றோம்.

இந்த சந்தர்ப்பத்திலே சிறுபான்மை சமூகத்தினருடைய பிரதிநிதிகள். அரசியல் கட்சிகள் மற்றும் சிறிய அரசியல் கட்சிகள் எல்லோரும் இணைந்து கோரிக்கையொன்றினை சொல்லி வருகின்றார்கள். இந்த வட்டாரப்பிரிப்பு. எல்லை நிர்ணயம் அதிக சர்ச்சைக்குறிய விடயமாக இருக்கின்றது. அதனால் நாங்கள் கனிசமான அளவு நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றோம்.

அதில் நியாயங்கள் காணப்படுகின்றது. ஆகவே தான் இந்த எல்லை நிர்ணயம் சரியாக செய்யப்படவேண்டும். இல்லாவிட்டால் சட்டரீதியான தீர்வுகளை நோக்கி செல்ல வேண்டிவரும் எனவும் தெரிவித்தார். இந்நிகழ்வினை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் ஹொரவ்பொத்தானை கிளை. நவீன தொழிநுட்பக்கற்கைகள் நிறுவகம், கல்விக்கான சக வாழ்வு மன்றம் மற்றும், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் போன்ற அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவில் பொலிஸ் உயரதிகாரிகள் சிலர் இடமாற்றம்



(அஷ்ரப் ஏ சமத் )

இலங்கை பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதிக்கு இணங்க இலங்கையிலுள்ள உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் உடனடியாக இடமாற்றப்பட்டுள்ளனர்.

இவ் இடமாற்றங்கள் இம்மாதம் 11 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான கே.எஸ்.வி.ஆர் டயஸ், பி.குணதிலக்க, எல்.எம். எப்.ஆர்.ஜே. சில்வா, பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பி.எம் குணரத்தின, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் எஸ்.ஏ.ஆர்.பி ஜயதிலக்க, ஜே.ஏ.பி.பி.பி. பெரேரா ரீ.ஜே.பல்லியக்கார, பொலிஸ் அத்தியட்சகர்களான பி.ஆர்.பி. சேனாநாயக்க , ஜே.கே.பி. அபேன்ஸ், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் - எல்.எப். கே. சில்வா கல்கிசையிருந்து மன்னாருக்கும், எம்.ரீ.எஸ்.வை ஜயசேகர மன்னாரிலிருந்து கல்கிசைக்கும், எப்.டபிள்யு முத்துமால , ரீ.எஸ்.பெரியப்பெரும, எம்.எம்.எல்.அமரசேன ஆகிய உயர் அதிகாரிகளே இடமாற்றப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## கடந்த இரு மாதங்களில் கொழும்பில் 49 ஆர்ப்பாட்டங்கள்

இந்த வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் கொழும்பு மாநகரில் 49 ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. பல்வேறு கோரிக்கைகள் மற்றும் வேண்டுகோள்களை முன்வைத்தும் அரசின் சில தீர்மானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த அனைத்து ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதிகளவிலான ஆர்ப்பாட்டங்கள் கோட்டை புகையிரத நிலையத்தை மையப்படுத்தி இடம்பெற்றுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக நாட்டின் பொருளாதார நகரமான கொழும்பு மாநகரின் போக்குவரத்திற்கும் தடங்கல் ஏற்பட்டிருந்தது.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களுக்குள் நடைபெற்ற 49 ஆர்ப்பாட்டங்களில் பெரும்பாலானவை பல்கலைக்கழக மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாகவும் தெரிவிக்கப்பட்டது.

காலி வீதி, கொள்ளுபிட்டி சந்தி, லோட்டஸ் வீதி, செரமிக் சந்தி, ஒல்கொட் மாவத்தை, லேக்ஹவுஸ் சுற்றுவட்டம் மற்றும் பாராளுமன்ற சுற்றுவட்டம் ஆகிய பகுதிகளே ஆர்ப்பாட்டங்களுக்காக அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## உணவு பற்றாக்குறையால் சிறுவர்கள் உயிரிழக்கும் அபாயம்

உணவு பற்றாக்குறை காரணமாக இவ்வருடத்தின் ஆரம்பத்தில சுமார் 1.4 மில்லியன் சிறார்கள் உயிரிழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக யுனிசெப் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

1945 ஆம் ஆண்டுக்கு பின்னர் தற்போது பாரிய மனிதாபிமான பற்றாக்குறைக்கு முகம் கொடுத்துள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக் காட்டியது.

ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கை பிரிவு தகவலை வெளியிட்டுள்ளதோடு, சுமார் 20 மில்லியன் மக்கள் தற்போது உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டது.

அவர்களில் அதிகமானோர் யேமன், சோமாலியா, தென் சூடான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த நிலைமையிலிருந்து மனிதவுயிர்களை காப்பாற்றும் முகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் வந்துள்ளதாக அப்பிரிவு சுட்டிக்காட்டியது.

## எச்1என்1 வைரஸ்; வவுனியாவில் தாக்கம்

எச்1என்1 வைரஸ் பன்றிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளமையால் சிகிச்சைகளை பெற்றுகொள்வதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த வைரஸினால் பாதிக்கப்பட்ட 22 பேர் தற்போது வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

வைரஸினால் பாதிக்கப்பட்டவரின் தும்மல் மூலமாகவும் குறித்த நோய் பரவக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் தெரியவந்துள்ளது. '

இதனால் கர்ப்பிணி பெண்கள், சிறு குழந்தைகள் மற்றும் வயோதிபர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், அவ்வாறு காய்ச்சல் ஏற்பட்டவுடன் உடனடியாக அரச வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளுமாறும் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## பொதுநலவாய வர்த்தக நடவடிக்கைகளுக்கு இலங்கை பூரண ஒத்துழைப்பு வழங்கும்

### லண்டன் மாநாட்டில் றிஷாத் பதியுதீன்





பொதுநலவாய நாடுகளின் சர்வதேச வர்த்தக முயற்சிகளுக்கு இலங்கை தொடர்ந்தும் பூரண ஒத்துழைப்பை வழக்குமென அமைச்சர் றிஷாத் பதியுதீன் லண்டனில் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் வர்த்தக அமைச்சர்களின் அங்குரார்ப்பண மாநாடு லான் செஸ்டர் ஹவுஸில் ஆரம்பமான போது இலங்கையின் பிரதிநிதியாக பங்கேற்ற கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் றிஷாத்துடன் அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் இந்த மாநாட்டில் இணைந்துகொண்டார்.

பொதுநலவாய நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் இலங்கையுடனான சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு பொதுநலவாய நாடுகள் பல்வேறு வழிகளிலும் உதவியளிப்பதை விஸ்தரிக்குமாறும் அமைச்சர் வேண்டிக் கொண்டார்.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லாண்ட் உடன் தங்களது சந்திப்பு மகிழ்ச்சியளிக்கின்றது என அமைச்சர் றிஷாத் நேற்று காலை தொலைபேசியில் தெரிவித்தார்.

அமைச்சர் இம்மாநாட்டில் உரையாற்றிய போது கூறியதாவது,

சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளுக்கு பொதுநலவாய நாடுகளிலிருந்து இலங்கை சாதகமான உதவிகளைப் பெற்று வருகின்றது.

பொதுநலவாய நிலைப்பாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்ட உறவுகள் இருக்கின்றன. தற்போது லண்டனில் நடைபெறும் நிகழ்வு அதற்கு முன்னோடியாக விளங்குவதுடன் இலங்கையின் வர்த்தகம் தலைத்தோங்குவதற்கும் உதவுமென நம்புகின்றேன்.

விஷேடமாக வளர்ச்சிப்பாதையிலான நிகழ்ச்சி நிரல் என்ற இந்த மாநாட்டின் எண்ணக்கரு எங்களது தேசிய அரசாங்கத்தின் கைத்தொழில் மற்றும் வர்த்தக மறுசீரமைப்பு நோக்கிற்கு உதவியாக அமையும்.

அத்துடன் வர்த்தக முன்னேற்றம் முதலீடு மற்றும் தொழில் உருவாக்கத்திற்கும் இதன் பங்களிப்பு உதவுமென நான் நம்புகின்றேன். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

சுதந்திர வர்த்தக உடன்பாட்டுப் பேச்சுவார்த்தைகள் ஏற்றுமதி மூலோபாய கருத்தாடல் திட்டங்களை வடிவமைப்பு தொடர்பிலும் இந்த தொழில்நுட்ப உதவிகள் அடங்குமெனவும் ஏற்றுமதி, இறக்குமதி வங்கிகளை அமைப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## சுற்றிவளைப்பில் ஆயிரத்திற்கும் அதிகமான குற்றவாளிகள் கைது

நாட்டின் பல பாகங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புக்களில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் உட்பட ஆயிரத்து 246 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நடவடிக்கைக்காக 11 ஆயிரத்து 795 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களுள் 110 குற்றவாளிகளும், வான்படையில் இருந்து தப்பிச் சென்ற 4 பேரும் கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற 3 பேரும் உள்ளடங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கைது செய்யப்பட்டவர்களின் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு, கடந்த இரண்டு தினங்களாக முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 567 பேரும், பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 109 பேரும், கஞ்சா போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த 45 பேரும் ஹெரொயின் வைத்திருந்த 26 பேரும் கைது செய்யப்பட்டனர்.

## 2ஆம் மாடியிலிருந்து விழுந்த கார்; எவருக்கும் பாதிப்பில்லை



கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் பிரபலமான வர்த்தக கட்டிடம் ஒன்றின் இரண்டாவது மாடியில் இருந்து கார் ஒன்று கீழே விழுந்துள்ளது. இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சம்பவம் நடைபெற்ற போது குறித்த காரின் உள்ளே கணவன், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் இருந்துள்ளனர். இதேவேளை, வாகனத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி சுற்றாடல் விருதுக்கான விண்ணப்பம் கோரல்

2017 ஜனாதிபதி சுற்றாடல் விருதுக்கான விண்ணப்பங்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கோரப்பட்டுள்ளன.

சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் இலங்கை பிரஜைகளை தேசிய மட்டத்தில் பாராட்ட வேண்டுமென்ற ஜனாதிபதியின் யோசனைக்கு அமைய இந்த விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விருதுக்கான விண்ணப்பங்களை மும்மொழிகளிலும் அனுப்பிவைக்கமுடியும். இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இவற்றிற்கான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

www.cea.lk என்ற மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக அல்லது பிரதான அலுவலகத்தில் அல்லது மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களில் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 011-2872419 அல்லது 011-2872278 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளமுடியும்.

## ஆசிய பசுபிக் அபிவிருத்தி மாநாட்டில் விரிவுரையாற்ற இலங்கைக்கு வாய்ப்பு



ஆசிய பசுபிக் பிராந்திய அபிவிருத்தியின் நிதி நடவடிக்கை தொடர்பில் நான்காவது உயர்மட்ட பேச்சுவார்த்தையில் பிரதான விரிவுரையினை மேற்கொள்ள இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசுபிக் வலய அபிவிருத்தி மற்றும் சமூக ஆணைக்குழுவின் நிறைவேற்று செயலாளர் ஷம்ஷாதி அக்தார் கடந்த வெள்ளிக்கிழமை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த பிரதான விரிவுரையினை நடாத்துவதற்கு இலங்கைக்கு கிடைத்துள்ள வாய்ப்பானது மிகவும் முக்கியமான சந்தர்ப்பம் என்றும் குறிப்பிட்டார். குறித்த மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28, 29 ஆம் இரு தினங்களில் தாய்லாந்து பெங்கொக் நகரில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பங்குபற்றவுள்ளார்.

NAVAMANI DAILY நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
13TH MARCH 2017 - MONDAY

# அளுத்கமை கலவரத்திற்கு 1000 நாட்கள் இன்னும் நீதி கிடைக்கவில்லையே

அளுத்கமையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்திய கலவரத்துக்கு மார்ச் 14ஆம் திகதி சனிக்கிழமையுடன் ஆயிரம் நாட்களாகின்றன.

மூன்று பேரது உயிரைப் பலியெடுத்து மற்றும் மூவரை அங்கவீனமாக்கி பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு அழிவை ஏற்படுத்தி நீண்ட காலமாக நேசத்துடன் வாழ்ந்து வந்த சிங்கள முஸ்லிம் மக்களுக்கு மத்தியிலே கசப்புணர்வினை உருவாக்கிய இக்கலவரம் இலங்கை முஸ்லிம்களின் மனதில் ஒரு பெரும் வடுவாகவே இன்றும் உள்ளது.

பொதுபலசேனாவின் தூண்டுதலினால் நடைபெற்ற இந்த கலவரத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்ற அங்கலாய்ப்பு முஸ்லிம் சமூகத்திடம் இன்றும் காணப்படுகிறது. இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என முஸ்லிம்கள் தரப்பில் மட்டுமன்றி நாட்டின் இன சௌஜன்யத்தை, நல்லிணக்கத்தை விரும்பும் சிங்களவர்களும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

கடந்த அரசு அவ்வாறான ஒரு கோரிக்கை குறித்து கவனம் எடுக்காத போதும் 95 வீதமான முஸ்லிம்களது ஏகோபித்த ஆதரவுடன் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசும் அது குறித்து கவனம் எடுக்காதிருப்பது குறித்தே முஸ்லிம் தரப்பினர் வியப்புத் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அரசின் பங்காளிகளாக இருக்கும் முஸ்லிம் கட்சிகளும் மற்றும் அரசில் அங்கம் வகிக்கும் தேசிய கட்சிகளின் முஸ்லிம் பிரதிநிதிகளும் மௌனம் காத்தே வருகின்றனர். அளுத்கம சம்பவத்தில் கொல்லப்பட்ட மூன்று முஸ்லிம்களுக்கும் நீதி கிடைக்குமா? என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. அவர்கள் தொடர்பாக தொடரப்பட்டுள்ள வழக்குகள் கூட திட்டமிட்ட முறையில் காலம் தாழ்த்தப்படுகிறது. பொலிஸார் இந்த விடயத்தில் அசமந்தப் போக்குடனேயே நடக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுகின்றது.

அளுத்கம சம்பவம் தொடர்பாக அதன் பிரதான சூத்திரதாரியான கலபொட ஞானசார தேரருக்கு எதிராக போடப்பட்டுள்ள 40க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கூட விசாரிக்கப்படாத நிலையில் இருக்கின்றது.

ஆர்ஆர்சி அமைப்பின் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணி சிராஷ் நூர்தீன் அளுத்கம சம்பவத்திற்கு 1000 நாட்கள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் அளுத்கம சம்பவத்துடன் தொடர்பான விடயங்கள் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறும் வன்செயல்கள் தொடர்பான வழக்குகளில் சந்தேக நபர்களை ஆஜர்படுத்தலில் பொலிஸார் காட்டும் அசமந்தப் போக்கு காரணமாக நீதி மறுக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம்கள் தொடர்பான பல வழக்குகள் இதன் காரணமாக விசாரிக்கப்படாது ஒத்திப்போடப்பட்டு வருவதனை நாம் ஊடகங்களின் ஊடாக அவதானித்து வருகிறோம்.

முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை நிறுத்துவோம். நாட்டில் சட்டமும், நீதியும் நிலைநாட்டப்படும் எனக் கூறி பதவிக்கு வந்த அரசாங்கம் இன்று இந்த விடயங்களில் மௌனம் காப்பது ஏன்? முஸ்லிம்களுக்கு எதிராக, இஸ்லாத்துக்கு எதிராக பகிரங்கமாக செயற்பட்டு வருவோர் பற்றி முறைப்பாடுகள் செய்தும் கூட விசாரணைகள் நடத்தப்படாதிருப்பது ஏன்? இந்த நாட்டில் சட்டம் எல்லோருக்கும் சமம் என்று கூறினாலும் இந்த விடயங்களில் ஏன் இவ்வாறான போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது.

அரசாங்கம் இந்த விடயங்கள் குறித்து நீதியாக நடக்க தவறினால் எதிர்காலத்தில் இவற்றின் விளைவுகள் பாரதூரமாக அமையலாம். குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு இது தவறான சமிக்ஞையை வழங்குவதாக அமையலாம். எனவே இந்த விடயங்களில் முஸ்லிம் தலைமைத்துவம் ஆழமாக அக்கறை செலுத்தி நீதியை நிலைநாட்டுவதற்கு அரசுக்கு அழுத்தம்கொடுக்க வேண்டும்.

---

ஹஸனலி மீதான ஹக்கீமின் அணுகுமுறைகளும்

# வீசத் தொடங்கும் அனுதாப அலைகளும்

எம்.எம்.எம்.நூறுல்ஹக்
சாய்ந்தமருது - 05

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தை ரவூப் ஹக்கீம் ஏற்றதன் பின்னர் அக்கட்சி பல பிளவுகளைச் சந்தித்திருக்கின்றது. அந்தப் பிரிவினைகள் பெரிதாக வெற்றி பெறாத போதிலும் சிலருக்கு சிறியளவிலான அனுகூலங்களை அளித்திருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். என்றாலும் அது மு.காவின் வாக்கு வங்கியில் பாரிய தாக்கத்தைச் செலுத்தி, கட்சியை வீழ்த்திவிடும் அளவுக்கு அடைவுகளைப் பெறாமல் இருந்ததுதான் இன்றுவரை மு.காவுக்கு பெரும் ஆறுதலான விடயமாகும்.

தலைவர் ரவூப் ஹக்கீமின் காலத்தில் கண்ட பிளவுகளில் இருந்து சற்று வித்தியாசமாகவும் பாரியதொரு பின்விளைவுகளை ஏற்படுத்திவிடுமா என்கின்ற அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும் ஹஸனலியின் முன்னெடுப்பு அமைந்துவிடும் அபாயத்தையும் எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாதென்ற அசைவையும் அது கொண்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் ஹஸனலியின் பதவிநிலைப் பறிப்பும் அதனைத் தொடர்ந்து அவர் மக்கள் மன்றின் முன் தோன்றி இரு மாபெரும் முறையீட்டுப் பொதுக் கூட்டங்களை தனது பிறந்த ஊரான நிந்தவூரிலும் தனது தேர்தல் மாவட்டமான அம்பாறையில் அமைந்திருக்கும் பொத்துவில் தொகுதியின் இன்னுமொரு ஊரான பொத்துவில் பிரதேசத்திலும் முறையே 03,10 மார்ச் 2017 ஆகிய இருதினங்களில் ஹஸனலி நடாத்தியிருந்தமை நாமறிந்ததே.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஹஸனலி மீது வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் இரண்டு குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார். ஒன்று கடந்த 2012இல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மகிந்த அணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு தலைவர் ரவூப் ஹக்கீம் தீர்மானித்திருந்த முடிவுக்கெதிராக ஹஸனலி நடந்துகொண்டமை குறித்து தேர்தல் மனுவை பூர்த்தி செய்யும் காலத்துக்கு அண்மைய மூன்று நாட்கள் காணாமல் போயிருந்தார் என்பதாகும்.

இரண்டாவது குற்றச்சாட்டு கடந்த 2015இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து கட்சிக்குக் கிடைத்திருந்த 2 தேசியப்பட்டியல் உறுப்புரிமைகளில் தனக்கொன்று வழங்கப்பட வேண்டும் என்று கடும் பிடிவாதமாக இருந்தார் ஹஸனலி என்பதாகும். இவ்விரு குற்றச்சாட்டுக்கள் தவிர மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் வேறெந்த குற்றச்சாட்டுக்களையும் ஹஸனலி மீது சுமத்தியதாக இதுவரை வெளிப்படுத்தாமையினால் இது தவிர்ந்த வேறு தவறுகளை ஹஸனலி மீது தலைவர் ஹக்கீம் காணவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இதில் முதலாவது குற்றச்சாட்டாக தலைவர் முன்வைப்பதான கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது மகிந்த அணியுடன் இணைந்து போட்டியிடுவதை தடுத்தவர் அல்லது ஒளிந்துகொண்டவர் ஹஸனலி என்ற குற்றச்சாட்டை நோக்குகையில், அது போதிய வலுவைக் கொண்ட தவறென்று கருதமுடியாததாகவே அரசியல் களத்திலும் அரசியல் விமர்சகர்களிடத்திலும் நோக்கப்படுகின்றது.

ஏன் இவ்வாறு குறிப்பிடுகிறோம் என்றால் மு.கா மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு பின்னர் மகிந்த அணியுடன் இணைந்து கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர். இதன்மூலம் முதல் இரண்டரை வருடங்களுக்கு மகிந்த அணியைச் சேர்ந்த ஒருவரும் பின்னருள்ள இரண்டரை வருடங்களுக்கு மு.காவைச் சார்ந்த ஒருவரும் முதலமைச்சர்களாக பதவி வகிப்பதென்ற இணக்கத்தின் பெயரில் ஆட்சி அமைத்தனர். இதற்கமையவே இன்று கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக மு.காவைச் சார்ந்த பொறியியலாளர் ஹாபிஸ் நஸீர் அஹமட் இருக்கிறார்.

இந்நிலைமையை வைத்து ஆராய்கையில், ஹஸனலி அன்று ஒளிந்துகொண்டமையையோ அல்லது மு.கா தனித்துத்தான் போட்டியிட வேண்டும் என்ற அழுத்தத்தை தலைவர் மீது பிரயோகித்தமையையோ எந்த விதமான பாதகங்களுக்கும் வழிவகுக்காது முஸ்லிம் காங்கிரஸை உயர்த்திப் பார்க்கவும் சாதிக்கச் செய்யவும் பக்கபலமாக இருந்திருக்கின்றது. ஆயின் ஹஸனலி மீது தலைவர் ஹக்கீமால் சுமத்தப்படுகின்ற இந்த குற்றச்சாட்டு சமூக ரீதியான இழப்புக்களை ஏற்படுத்துவதற்கு காலாக அமைந்ததல்ல என்பது வெள்ளிடை மலையாகும்.

> **ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஹஸனலி மீது வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் இரண்டு குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார். ஒன்று கடந்த 2012 இல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மகிந்த அணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு தலைவர் ரவூப் ஹக்கீம் தீர்மானித்திருந்த முடிவுக்கெதிராக ஹஸனலி நடந்துகொண்டமை குறித்து தேர்தல் மனுவை பூர்த்தி செய்யும் காலத்துக்கு அண்மைய மூன்று நாட்கள் காணாமல் போயிருந்தார் என்பதாகும்.**
>
> **இரண்டாவது குற்றச்சாட்டு கடந்த 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து கட்சிக்குக் கிடைத்திருந்த 2 தேசியப்பட்டியல் உறுப்புரிமைகளில் தனக்கொன்று வழங்கப்பட வேண்டும் என்று கடும் பிடிவாதமாக இருந்தார் ஹஸனலி என்பதாகும். இவ்விரு குற்றச்சாட்டுக்கள் தவிர மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் வேறெந்த குற்றச்சாட்டுக்களையும் ஹஸனலி மீது சுமத்தியதாக இதுவரை வெளிப்படுத்தாமையினால் இது தவிர்ந்த வேறு தவறுகளை ஹஸனலி மீது தலைவர் ஹக்கீம் காணவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.**



எனினும் மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீம் இதனைப் பாரியதொரு தவறாக சித்தரிக்கின்ற போக்கு வெளிப்படையில் நடுநிலையாகவும் நேர்மையாகவும் சிந்திக்கும் எவரிடமும் தவறென்று ஆகாத நிலையில், தலைவரிடம் மாத்திரம் குற்றமெனக் காணப்படுகின்றதென்றால் அது அவரது எதிர்பார்ப்புக்களுக்கு மாற்றமான ஒன்றாக அந்நிகழ்வு அமைந்திருக்க வேண்டும்.

இன்றைய நிலையில் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் சமூகம் பெறக் கூடிய உச்சபட்ச அடைவுப் பெறுபேறென்பதுஒரு முஸ்லிம் முதலமைச்சர் பெறுவதன்றி வேறில்லை. அப்படியாயின் அவ்வாறான சூழல்சாத்தியப்பட்டதன்பின்னரும் ஹஸனலி மீது தலைவர் ஹக்கீம் இது குறித்துகுற்றம் சுமத்துவதென்பது தலைவரின் எதிர்பார்ப்பு முஸ்லிம் சமூகம் சார்ந்த கிழக்கு மாகாண சபையின் உச்சபட்ச அடைவாகவும் அடையாளமாகவும் இருக்கக்கூடிய முதலமைச்சர் பதவிக்கு அப்பாலானது என்பதைக் கோடிட்டுக் காட்ட போதுமானதாகும்.

மு.கா தலைவரிடம் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவி தவிர்ந்த வேறு எதிர்பார்ப்புக்கள்தான் இருந்திருக்க முடியும்.அவை ஒருபோதும் முஸ்லிம் சமூகத்தின் நலன் பற்றிய ஒன்றாக இருக்கமுடியாதென்பது மிகத்திட்டவட்டமானது. இதற்கப்பால் அவரது உள்நோக்கத்தில் புதைந்துகிடந்த அவர் நலன் சார்ந்த விடயங்களை இவ்விடத்தில் கிளறிவிடுவதைப் பார்க்கிலும் அவர் சுட்டுகின்ற குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்ற முடிவுக்கு வருவதே நமக்கு இவ்விடத்தில் முதன்மையானதாகும். ஆகவே ஹஸனலி மீது தலைவர் ஹக்கீம் முன்வைக்கின்ற முதலாவது குற்றச்சாட்டு போதியளவான வலுவைக் கொண்டதல்ல என்பது நிரூபணமாகின்றது.

தலைவர் ஹக்கீம் ஹஸனலி மீதுஇரண்டாவதாக முன்வைக்கும் குற்றச்சாட்டு, ஹஸனலி இம்முறையும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையைக் கோரியதென்பதாகும். இதற்கு ஹஸனலி தரப்பிலிருந்து சொல்லப்படுகின்ற பதிலாவது, கடந்த பொதுத் தேர்தலின் போது நான் போட்டியிட வேண்டுமென்று தலைவரிடம் கேட்ட போது நீங்கள் தேர்தலில் போட்டியிடத் தேவையில்லை, உங்களுக்குத் தேசியப்பட்டியல் வழங்கப்படும் என்ற வாக்குறுதியாகும்.

ஆகவே நான் தேசியப் பட்டியலை தலைவரிடம் இம்முறை கேட்கவில்லை என்பதை ஆணித்தரமாக ஹஸனலி.பகிரங்கப்படுத்தி வருகிறார்.ஹஸனலியின் இக்கூற்றை தலைவர் ரவூப் ஹக்கீம் நான் இவ்வாறு ஹஸனலிக்கு வாக்குறுதி அளிக்கவில்லை என்று இந்தக் கட்டுரை வரையப்படும் கணம் வரை அவர் வெளிப்படையாக மறுக்கவில்லை.மாறாக அவர் ஹஸனலியின் இக்கூற்றை ஏற்பது போன்று பேசிவருவது நமது அவதானங்களை எட்டத்தவறவில்லை.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களில் ஒருவரான யூ.ரீ.எம் அன்வரின் இடத்தில் அவர் முன்னிலையில் தலைவரிடம் ஹஸனலி நான் உங்களிடம் தேசியப்பட்டியல் கேட்டேனா என்று கேட்டதற்கு தலைவர் ஹக்கீம் நீங்கள் கேட்கவில்லை, நான்தான் தருவதாகச் சொன்னேன் என்று சொல்லியிருந்தார். இதனை இரண்டு சாட்சியங்களின் வழியாக ரவூப் ஹக்கீமே ஏற்றுக்கொள்வதாகநிரூபிக்கப்படுகின்றது.

ஒன்று அன்வரின் முன்னிலையில் சொல்லப்பட்டதென்பதனால் அவரும், மற்றும் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரியவை சமரச நோக்கில் சந்தித்த வேளை சல்மானின் நாடாளுமன்ற உறுப்புரிமை இராஜினாமாக் கடிதம் ஒன்று தலைவரினால் ஹஸனலியிடம் கையளிக்கப்பட்டிருந்தமையாகும். ஆக இவ்விரு சாட்சியங்களும் ஹஸனலிக்கு தேசியப்பட்டியல் தருவதென்பது தலைவரின் முடிவே அன்றி ஹஸனலியின் விடாப்பிடியான எதிர்பார்ப்பு அல்ல என்பதைத் தெளிவாக காட்டுகின்றது.

தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை ஹஸனலிக்கு வழங்கமுடியாத நெருக்குவாரங்கள் அல்லது நியாயமான காரணங்கள் ஏதேனும் இருப்பின் அதனை மனம்விட்டு ஹஸனலியிடம் விளக்கிக்கூறி தேசியப்பட்டியல் உறுப்புரிமையை விட்டுத்தர அவரிடம் வேண்டியிருந்தால், அதனை அவர் மறுத்து, தலைவர் ஹக்கீம் கூறுகின்ற நியாயமான காரணங்களை ஏற்காது மல்லுக்கு நின்று தனக்கு தேசியப்பட்டியல் உறுப்புரிமை தந்தே ஆக வேண்டுமென்று அடம் பிடித்திருந்தால் ஹஸனலி மீது தேசியப் பட்டியல் குற்றச்சாட்டை தலைவர் முன்வைப்பதில் நியாயமிருக்கின்றதென்று ஏற்றுக்கொள்ள முடியும்.

அவ்வாறில்லாது எழுந்தமானமாக தேசியப்பட்டியல் கேட்டு தன்னோடு ஹஸனலி சண்டை பிடித்தார் என்றும் இன்று கட்சிக்கெதிராக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சூழ்ச்சியே தேசியப்பட்டியல்தான் என்றும் தலைவர் சொல்லி சத்தியத்தை மக்களிடமிருந்து மறைப்பதற்கு கபட நாடகம் ஆடுகின்றாரோ என்கின்ற சந்தேகத்தை நம் மத்தியில்வலுக்கச் செய்கின்றது.

உண்மையில் ஹஸனலி தேசியப்பட்டியல் தனக்கு தரப்படவில்லை என்பதை மையப்படுத்தி அதனை ஒரு பிரச்சனைக்கான களமாக மாற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சின்னாபின்னப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்தையோ, அல்லது தலைவரின் வாக்குறுதி மீறலை மக்கள் மயப்படுத்தி அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற தீய நோக்கத்தையோ ஹஸனலி முன்னிறுத்தியிருக்கவில்லை. மாறாக தலைவர் தேசியப் பட்டியல்தான் ஹஸனலியுடைய பிரச்சனையும் கூட என்று வெளிக்காட்ட முனைகின்ற போதுதான் அது உண்மைக்கு புறம்பானதென்று நிரூபிப்பதற்காக வேண்டி ஹஸனலியும் அது குறித்து பேசவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றார்.

ஹஸனலியைப் பொறுத்தவரை தான் வகித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நாயகம் என்கின்ற முழுமையான அதிகாரங்களைக் கொண்ட பதவி குறைக்கப்படாத நிலையில் நிரப்பமாகத் தரப்பட வேண்டும் என்பதை முன்னிலைப்படுத்தி தனது கோரிக்கைகளை முன்வைத்து வந்திருந்தார். இதனை கடந்த 11.02.2017இல் நடைபெற்ற மு.காவின் பேராளர் மாநாட்டுக்கு முந்திய கட்டாய உயர்பீட கூட்டத்தில் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மு.கா கட்சியின் பதவி பிரேரித்தல்களும் அதற்கான கருத்தாடல்களும் எழுந்த போது முன்னர் இருந்த செயலாளர் பதவிக்கான அதிகாரங்களை குறைப்பதிலும் தலைவர் விரும்புகின்ற ஒருவரே செயலாளராகத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்கின்ற ஒரு விடாப்பிடியான முனைப்பிலும் தலைவர் தன்னை உட்படுத்தி நின்றார்.இந்த நிலையை அவதானித்த ஹஸனலி தனக்கு செயலாளர் பதவி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. அப்பதவியின் முக்கியத்துவம் குறைந்துவிடக் கூடாது என்பதில் கரிசனையைச் செலுத்தினார்.

அதன் விளைவாக கருத்துத் தெரிவித்த ஹஸனலி, அதிகாரங்களுடன் கூடிய செயலாளராக நான் இருப்பது தான் உங்களின் பிரச்சனை என்றால், அதற்காக வேண்டி அப்பதவியின் அதிகாரங்களில் கைவைக்காது அரசியல் பிரதிநிதித்துவமும் முழு மந்திரிப் பதவிக்குரியதாகவும் அப்பதவி நிலையிலிருப்பவர் இருப்பதாக அமைய வேண்டும். ஆதலால் அந்தப் பதவியை முன்னர் போன்று அதனை அரசியல் அதிகாரமுடையதாக தொடர்ந்து பேணுவதற்கு அனுமதிக்கவேண்டும்.

மற்றும் கிழக்குக்கு வெளியே தலைமைத்துவம் இருக்கும் இந்நிலையில்அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வேறு யாரையேனும் நீங்கள் நியமித்துக் கொள்ளலாம் என்ற தனது கருத்தை ஹஸனலி இடித்துரைத்திருந்தார். இக்கூற்றுக்களில் உள்ள நியாயங்களை தலைவரோ அல்லது அங்கு சமூகம் தந்திருந்த உயர்பீட உறுப்பினர்களோ சட்டை செய்துகொள்ளாது தலைவரின் அவாவுக்கு இசைவாக கையுயர்த்திக் கொள்ளும் வண்ணமே செயலாற்றியிருந்தனர்.

ஹஸனலியின் முன்வைப்பும் கோரிக்கையும் பிழையானது அல்லது நேர்மையற்றது என்பதை யாரும் அங்கு மறுதலிக்காது தலைவர் கோரிநின்ற உட்கிடையான செயலாளர் அதிகாரத்துவத்தை தான் பிரயோகித்துக்கொள்கின்ற நிலையை தனதாக்கிக் கொள்வதில் அவரது கரிசனை மற்றும் முழு கவனமும் குவிக்கப்பட்டிருந்தது. அதுவே அங்கு வெற்றியையும் கண்டிருக்கின்றது.

இங்கு நாம் இரு விடயங்களின்பக்கம் நமது கவனங்களைச் செலுத்த வேண்டியிருக்கின்றது.ஒன்று தேசியப் பட்டியல் தருவேன் என்று உறுதியளித்து ஹஸனலியை நம்பவைத்தும் மற்றும் பேராளர் மாநாட்டின் போது அதிகாரங்களுடன் கூடிய செயலாளராக உங்களை மீண்டும் நியமிப்பதென்ற பொருந்துதலின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழுத் தலைவரிடம் சமரசம் செய்ய ஹஸனலியை உடன்படவைத்திருந்தார். இந்த வாக்குறுதிகளில் எதனையுமே சரியாக நிறைவேற்றாத நிலையில் தலைவர் விரும்பியவாறு செயலாளரின் அதிகாரங்களையும் தன்வசப்படுத்தியதன் பிற்பாடு தவிசாளர் பதவிக்கு ஹஸனலி உடன்பட வேண்டுமென்று தலைவரும் உயர்பீட உறுப்பினர்களும் வலியுறுத்தியிருந்தனர்.

உண்மையில் ஹஸனலிக்கு ஏலவே வாக்குறுதியளித்திருந்தன் பிரகாரம் எதனையும் செய்யாது அநீதி இழைத்த முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் அவரை ஒரு பொறிக்குள் தள்ளி சமூகத்துக்குள் அவரது பெயரை களங்கப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட இன்னொரு முயற்சியாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது.

ஏனென்றால் ஏற்கெனவே மு.காவின் தவிசாளராக இருந்த பஷீர் சேகுதாவூத் அப்பதவியிலிருந்தும் கட்சியின் உயர்பீட உறுப்புரிமையிலிருந்தும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த அந்தச் சூழலில் அப்பதவியை ஏற்குமாறு ஹஸனலியை வற்புறுத்துவதும் கோருவதும் விவேகத்தின் வழியன்றி ஓர் அரசியல் தந்திரோபாயத்தின் காய் நகர்த்தலாகவே அது அமைந்திருந்தது.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட ஒருவர் ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் குற்றமற்றவர் என காணப்படின் அவருக்கு மீண்டும் அப்பதவியை வழங்குவதே நியாயமான நடைமுறையாகும்.அல்லது அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்ட பின்னரும் அப்பதவியில் அமர்த்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட வேண்டும்.அல்லது அவர் குற்றமுடையவர்தான் என நிரூபிக்கப்பட்டு தவிசாளர் பதவியிலிருந்தும் உயர்பீட உறுப்புரிமையிலிருந்தும் நிரந்தரமாக நீக்கப்பட்டதன் பிற்பாடுதான் அப்பதவி காலியான வெற்றிடமாக மாறும். அதற்குத்தான் இன்னொருவரை நியமிக்கலாம்.

(தொடர் 11ஆம் பக்கம்)

# தம்புள்ளை பள்ளியை அகற்றுவதற்கு முஸ்லிம் எம்.பி.க்கள் துணை போகக் கூடாது

## உலமா கட்சித்தலைவர்



(கல்முனை எஸ். அஷ்ரப்கான்)

தம்புள்ள பள்ளியை உடைத்து இடம் மாற்றுவதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக்கூடாது என மீண்டும் சொல்கின்றோம் என உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, புனிதப்பிரதேசத்துள் பள்ளிவாயல்களோ கோயில்களோ இருக்கக்கூடாது என்பதற்காகவே தம்புள்ள பள்ளியை உடைக்க வேண்டும் என சிங்கள பேரினவாதம் துடிக்கிறது. இது நடைபெறுமானால் நாளை கண்டி பள்ளிவாயலையும் இடம் மாற்ற சொல்வார்கள் என எச்சரிக்கிறோம்.

தம்புள்ள பள்ளிவாயல் சம்பந்தமாக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே கருத்தை முன் வைக்கும்படியும் அக்கருத்து என்பது பள்ளியை எக்காரணம் கொண்டும் இடம் மாற்றக்கூடாது என்றே இருக்க வேண்டும். இதையும் மீறி இனவாத அரசு அப்பள்ளியை அகற்றத்தான் வேண்டும் என்றால் பள்ளியை அவர்களே உடைக்கட்டும். அதன் பின் இதற்கெதிராக மேற்படி பள்ளி நிர்வாகம் நீதிமன்றத்தை நாட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம். முஸ்லிம்கள் தமது பள்ளியை புனிதஸ்தலம் என்ற காரணத்துக்காக இடம் மாற்ற அனுமதிக்க மாட்டார்கள் என்பதை இனி வரப்போகும் இனவாதிகளும் புரிந்து கொள்ளுமளவு இதில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமைப்பட்டு செயலாற்ற வேண்டும்.

பள்ளியை உடைத்தால் இந்த நல்லாட்சியின் காலத்தில்தான் பள்ளி உடைக்கப்பட்டது என்பது ஜனாதிபதி மைத்ரிக்கும் பிரதமர் ரணிலுக்கும் வரலாற்று களங்கம் ஏற்படுமென்பதால் உடைக்க முற்படமாட்டார்கள். ஆனால் முஸ்லிம் எம்பீக்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்து பள்ளியை அவர்கள் அனுமதியுடன் அகற்றவே முயற்சிப்பார்கள். இத்தகைய சமூக துரோகத்துக்கு முஸ்லிம் எம்பீக்கள் துணை போகக்கூடாது.

இன்றைய பாராளுமன்றத்தில் அனைத்து முஸ்லிம் எம்பீக்களும் ஆளும் கட்சியில் இருப்பதால் இது விடயத்தை பாராளுமன்றத்தில் எதிர்த்து பேச முஸ்லிம் எவரும் எதிர்கட்சியில் இல்லை என்பது முஸ்லிம் சமூகத்தின் கைசேதமாகும்.

ஆகவே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக நல்லாட்சிக்கு வாக்களித்தது தம்புள்ள பள்ளிவாயலை இடம் மாற்றாமல் அதே இடத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும் என உலமா கட்சி கேட்டுக்கொள்கிறது.

# மக்கள் சக்தி எங்களுடன் இருப்பதால் நாங்கள் சளைக்காமல் சாதிக்கிறோம்

## மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக்



(ஹாஹூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மக்கள் சக்தி எங்களுடன் இருப்பதால் நாங்கள் எந்நேரமும் மக்களுக்காகப் பாடுபட்டு பல விடயங்களைச் சளைக்காமல் சாதிக்கிறோம் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் செயலாளர் ஜே. சர்வேஸ்வரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை மீராவோடை உதுமான் பாலர் பாடசாலைக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வில் அவர் உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் ஒரு சமூகத்தினுடைய தேவைப்பாட்டை அறிந்து கொண்டு அந்த சமூகத்திற்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதுதான் அரசியல் தலைமைகளின் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால் இப்போதுள்ள அரசியல் கலாசாரம் தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் மக்களைத் தேடுவதும், தேர்தல் முடிந்த பின்பு தங்களது பிரதிநிதிகளை மக்கள் தேடுவதுமான நிலைமை இருக்கின்றது. மக்கள் பிரதிநிதிகளான நாங்கள் மக்களுடன் மக்களாக இருந்துகொண்டு அவர்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். அது அபிவிருத்தி சம்பந்தமாகவோ அல்லது சமூகத்தினுடைய அரசியல் அதிகாரங்களைப் பற்றி பேசுகின்ற விடயங்களாகவோ அல்லது எதுவாக இருந்தாலும் எங்களுக்கு ஆதரவாக இருக்கின்றவர்கள் எங்களை தெரிவு செய்த மக்கள் என்கின்ற பெரும் சக்தியாகும். அந்த வகையில் தான் அதிகளவான அபிவிருத்திப் பணிகளை கல்குடாப் பிரதேசத்தில் மேற்கொண்டு வருகின்றோம். அது மாத்திரமல்லாமல் இந்த வருடமும் மாகாண சபை மூலம் கூடுதலான ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்குடாப் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 9 கிலோமீற்றர் தூரமுடைய வீதிகள் காபட் வீதிகளாக புனர்நிர்மாணம் செய்வதற்கு எங்களுக்கு அங்கிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. நான் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு 600 கிலோ மீற்றர் காபட் வீதிகள் புனர் நிர்மாணம் செய்வதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்தார். கிழக்கு மாகாண முதலமைச்சர் தீர்மானத்திற்கமைவாக கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 9 கிலோமீட்டர் வீதிகள் காபட் வீதிகளாக புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

# கல்குடா இளைஞர் கழக கூட்டம்

(வாழைச்சேனை நிருபர்)

கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலக பிரிவில் உள்ள இளைஞர் கழகங்களுக்கான கௌரவிப்பும் 2017ஆம் ஆண்டுக்கான இளைஞர் சம்மேளன பொதுக்கூட்டமும் கடந்த சனிக்கிழமை மாவடிச்சேனை அல் இக்பால் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி எம்.ஐ.எம்.றம்ஸி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஏ.ஹமீர், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் எம்.பி.சித்தீக், மாவடிச்சேனை அல்- இக்பால் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹரீஸ், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.எம். திபாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு இளைஞர்களின் இலக்கும் அதனை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளும் என்ற தலைப்பில் கோறளைப் பற்று மத்திய உதவி பிரதேச செயலாளர் எஸ்.எம்.அல் அமீன் உரையாற்றினார்.

இதன் போது 2016ஆம் ஆண்டு கலை கலாச்சாரம் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் சிறந்து விழங்கிய இளைஞர் கழகங்களுக்கு அதிதிகளால் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## பெயர் மாற்றம்

பொதுத்துவில் -27 அல்ஹுதா வீதி விக்டர் தோட்டம் 2 எனும் முகவரியில் வசிக்கும் ஜயூப்கான் பாத்திமா அம்னா என மாற்றிக்கொண்டேன் என இலங்கை ஜனநாயகசோசலிசக்குடியரசின் அனைத்துப் பொதுமக்களுக்கும் பகிரங்கமாகத் தெரியப்படுத்துகிறேன். இதன் பின்னர் இனிவரும் சகல ஆவணங்களிலும் ஐ.பாத்திமா அம்னா எனக்கையொப்பமிடுவேன் என உறுதியளிக்கிறேன்.

- ஐ.பாத்திமா அம்னா

## பெயர் மாற்றம்

நிந்தவூர்-04 அமீர் மேர்சா வீதி, இலக்கம் 411/2 இல் தற்போது வசித்து வரும் பொகவந்தலாவ, செபல்டன் பிளஸ் தோட்டத்தைச் சேர்ந்த இராசைய்யா பிரியதர்சினி ஆகிய நான் 2016.05.31 இலிருந்து எனது பெயரை இராசைய்யா ஆயிஷா என மாற்றிக்கொண்டேன் என்றும் இனி மேல் சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்தி ஒப்பமிடுவேன் என்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

- இ. ஆயிஷா


## விலைமனு அறிவித்தல்

**Lanka Mineral Sands Limited**

(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

### பெறுமதிமிக்க கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்

**கேள்வி இல: LMS/MKT/TDR/17/02**

இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, கேள்விமனு சபை திணைக்களத்தின் தலைவர், பின்வரும் கனரக கனிம மணல் பொருட்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களிடமிருந்து கேள்விமனு கோருகிறார். வாங்குவதற்கு சாத்தியமுள்ளோர், அனைத்து பொருட்களுக்கும் கேள்விமனு வழங்க வேண்டும்.

| | பொருள் | விற்கப்படும் அளவு | மனு பத்திரம் | கேள்வி மனு மூடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|---|---|
| 1 | **DRY ILMENITE** (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATION PROVIDED) | **11,000 MT** (தொகையாக விநியோகிக் கப்பட்டுள்ளது ) | **19,704,960.00** இலங்கை ரூபா அல்லது **132,000.00** அமெ. டொலர் | **04.04.2017** பிற்பகல் 02 மணி |

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பொருளின் விபரங்களை உள்ளடக்கிய கேள்விமனு ஆவணம் இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது. அத்தோடு, ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்துகொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளரை பின்வரும் இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும், +94 11 2883951-2, +94 11 2883965 அல்லது சந்தைப்படுத்தல் பிரிவை தொடர்பு கொள்ளுங்கள் +94 11 2883954, தொலைநகல் +94 112882668, மின்னஞ்சல்: ilmenite@slt.lk

**தவிசாளர்**
**அமைச்சின் கேள்விமனு சபை**
**இலங்கை கனிம மணல்கள் நிறுவனம்**
**341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை**


# காத்தான்குடியில் இரத்ததான முகாம்



(காத்தான்குடி பழுலுல்லாஹ் பர்ஹான்)

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி ஊடாக தாருல் அதர் அத்தஅவிய்யா தஃவா அமைப்பின் ஏற்பாட்டில் 'உதிரம் கொடுப்போம் உயிர் காக்க உதவுவோம் எனும் தொனிப்பொருளில் 12ஆவது மனித நேயம் பேணும் இரத்ததான முகாம் நேற்று புதிய காத்தான்குடி-02 ஜாமிஉல் அதர் ஜும்மா பள்ளிவாயலில் இடம்பெற்றது.

தாருல் அதர் அத்தஅவிய்யா அமைப்பின் தலைவர் வை.பீ.ஏ. றஊப் தலைமையில் இடம்பெற்ற மேற்படி இரத்ததான முகாமில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறுக், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபிர், காத்தான்குடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.நஸீர்தீன், தாருல் அதர் அத்தஅவிய்யா அமைப்பின் மார்க்கப் பிரச்சாரகர் மௌலவி பீ.எம்.அஸ்பர் (பலாஹி), காத்தான்குடி நகர சபையின் சன சமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி. உருத்திரகாந்தன், தாருல் அதர் அத்தஅவிய்யா அமைப்பின் பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம்.நிஸார் உட்பட ஊர் பிரமுகர்கள், கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள், ஆண், பெண் சகோதர, சகோதரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் விவேக் மற்றும் காத்தான்குடி இரத்த வங்கி அதிகாரி எம்.எம்.எம்.அய்யாஷ், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர் ஏ.எஸ்.எம்.ஸப்ரான் ஆகியோரினால் பரிசோதிக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் தங்களது இரத்தத்தை தானமாக வழங்கினர். இங்கு 150இற்கும் மேற்பட்டவர்கள் தங்களது இரத்தத்தை காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி ஊடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவுக்கு தானமாக வழங்கியுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் விவேக் தெரிவித்தார்.

# அஹதிய்யா ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

(யு.எல்.முஸம்மில் குருநாகல்)

குருநாகல் மாவட்ட அஹதிய்யா ஆசிரியர்களுக்காக வழிகாட்டல் கருத்தரங்குகளை நடாத்த குருநாகல் மாவட்ட அஹதிய்யாப் பாடசாலைகள் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

சியம்பலாகஸ்கொடுவ தாருல் அர்கம் கலாசார நிலையத்தில் மார்ச் 26, ஏப்ரல்10 ஆகிய தினங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4 வரை நடைபெறும் இக்கருத்தரங்கு அனுபவம் வாய்ந்த துறைசார் வளவாளர்களை கொண்டு நடாத்தப்படும். மார்ச் மாதம் 26ஆம் திகதி பிக்ஹுல் இஸ்லாம் அஃலாக் ஆகிய பாடங்களுக்கும், ஏப்ரல் 10ஆம் திகதி சீராவும் தாரீக்கும், குர்ஆனும் சுன்னாவும், அறபு மொழி ஆகிய பாடங்களுக்கும் வழிகாட்டல் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறும். குருநாகல் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி பீ.எம்.பாரூக் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் ஒவ்வொரு நாளும் கலந்து கொள்வோர்களுக்கான சாதன்றிதழ்களும் பாடங்களுடன் வெவ்வேறாக வழங்கப்படும் என அதன் செயலாளர் ஏ.ஆர்.எம்.நிஸாம் தெரிவித்தார்.


## கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

### கம்பனி பதிவாளர் திணைக்களம்

### வழங்குநர்களை பதிவு செய்தல்

2017 ஆம் ஆண்டில், இந்தத் திணைக்களத்துக்கு பின்வரும் பொருட்கள். சேவைகளை வழங்குவதற்கு, வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| இலக்கம் | பொருளின் பெயர் |
|---|---|
| 01 | குளிரூட்டிகளை சீரமைத்தலும். சேவை வழங்கலும் |
| 02 | மின்னியல் தொழிலாளர்களின் சேவையை வழங்கல் |
| 03 | 19 லீட்டர் குடிநீர் போத்தல்களை வழங்கல் |

■ பதிவுகளை மேற்கொள்வதற்கு, இந்த அலுவலகத்திலிருந்து பெற்ற விண்ணப்பங்களில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பப்படிவத்தை ரூ. 200 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பணம் செலுத்தியதன் பின்னர் வழங்கப்படும் பற்றுச்சீட்டை, விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒரு விண்ணப்பப்படிவத்தை ஒரு பொருளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

■ விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.03.28 ஆகும். விண்ணப்பங்கள் அன்றைய தினம் 03.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது திணைக்களத்தின் 04 ஆம் மாடியிலுள்ள கணக்காளர் பிரிவில் உள்ள கேள்விமனு பெட்டியில் இடப்பட வேண்டும். பதிவுத் தபாலில் கேள்விமனு அனுப்புவதாயின், உறையின் இடதுபக்க மேல் மூலையில், வழங்குநர்களை பதிவு செய்தல் - 2017 என்று குறிப்பிடல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி -**

**கம்பனிகள் பதிவாளர் நாயகம்**
**கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**
**சமாகம் மெதுர**
**இலக்கம்: 400, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

# பெண்களை வழிநடத்த வன்முறையற்ற ஆண்கள் சமூகம் உருவாக்கப்பட வேண்டும்

## தெ.கி.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் மஸ்றூபா ஹமீம்




(மருதமுனை நிருபர்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் ஒழித்து மனிதாபிமான முறையில் பெண்களை வழிநடாத்த வன்முறையற்ற ஆண்கள் சமூகம் உருவாக்கப்படவேண்டும். அதேபோன்று அகிம்சை வழியில் சென்று ஆண்களின் மனங்களை வென்று பெண்களுக்கு எதிராக வன்முறைகளுக்குத் தீர்வு காண பெண்களும் முன்வரவேண்டும்.என தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் எம்.எம்.மஸ்றூபா ஹமீம் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மருதமுனை அல்-மதீனா வித்தியாலயத்தில் அதிபர் ஏ.ஆர் நிஃமத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய போதே நூலகர் எம்.எம்.மஸ்றூபா ஹமீம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சர்வதேச மகளிர் தினம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் இன்று வரை நிறைவேறவில்லை மாறாக வருடாவருடம் அந்த நாள் மட்டும் நினைவு கூரப்படுகின்றது. எத்தனையோ பெண்கள் ஆண்களின் வன்முறையால் பாதிக்கப்பட்டு வாழ்விழந்து சமூகத்தால் ஒதுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு ஆண்களின் அதிகாரத்துடன் ஆளப்பட்டதாலும்,பெண்பிள்ளைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டதாலுமே சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிப்பதற்கான சர்வதேச அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆனால் அந்த அங்கீகாரம் சரியாக பெண்களைச் சென்றடையவில்லை மாறாக வீட்டு வன்முறைகளும்,நாட்டு வன்முறைகளும்,அலுவலக வன்முறைகளும் தொடர்ந்து கொண்டே இருப்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

இன்று பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளும், பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவிகளும் பல்வேறுபட்ட வகையில் பாலியல் மற்றும் ஏனைய துன்புறுத்தல்களுக்குள்ளாகி சீரழிய வேண்டிய நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.சொந்த வீடுகளில் கூட குடும்பத்தினரால் பெண்பிள்ளைகள் வன்முறைக்குள்ளாகின்றனர்.இவ்வாறான நிலையில் சர்வதேச மகளிர் தினம் தேவையா? என்ற கேள்வி கூட எழுகின்றது.

ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் அதே போன்று பாடசாலைக்கும் பல்கலைக் கழகத்திற்கும் செல்கின்ற மாணவிகள் மிகவும் அவதானமாக நடந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றார். இந்த நிகழ்வில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# திருமலையில் யொவுன்புற விசேட முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம்

இவ்வாண்டுக்கான யொவுன்புற தேசிய வேலைத்திட்டம் திருகோணமலை மெக்கேசஸர் விளையாட்டு மைதான பிரதேசத்தில் இம்மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. குறித்த வேலைத்திட்டம் தொடர்பான விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேராவின் தலைமையில் நடைபெற்றது.

உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 6000இற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவ்வேலைத்திட்டம் குறித்த ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம் பொறுப்பு சார்ந்தது அல்ல. இளைஞர் யுவதிகளை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடியவர்களாக மாற்றுவதுடன் சிறந்த தலைவர்களாக மாற்றுவதே இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாக அமைவதாகவும் இதன்போது அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்தார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப், கிழக்கு மாகாண அமைச்சர் சி.தண்டாயுதபானி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி எரன்திக, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார, துறைசார் திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






கொழும்பு-12 வாழைத் தோட்டம் அல்-ஹிக்மா கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையின் அதிபர் கே.எம்.எம். நாளிர் தலைமையில் மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பி.என்.ஏக்கநாயக்கவும் கௌரவ அதிதிகளாக பிரீத் குளோபல் மற்றும் அக்கம் வேல்ட் தனியார் நிறுவனங்களின் தலைவர் சிஹாப் ஸரீம், லங்கா அக்றோ புறோசசிங் தனியார் நிறுவனத்தின் பொது முகாமையாளர் எம்.எஸ்.எம்.ஷாமில், டயமண்ட் பெஸ்ட் ஃபூட் தனியார் நிறுவனத்தின் ஏ.எஸ்.எம்.நாபாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.இதன்போது போட்டி நிகழ்வுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# மனதைப் பூரணமாக்குவதே கல்வி!



கல்வி என்பது என்ன, அது புத்தகப் படிப்பா, இல்லை. பலவகைப்பட்ட அறிவைத் தேடிக் கொள்வதா, அதுவும் இல்லை. சங்கல்பத்தின் போக்கையும், வெளிப்பாட்டையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, பயனளிக்குமாறு செய்கின்ற பயிற்சியே கல்வி. கல்வி என்பது ஏராளமான உண்மைகளை மனதில் நிறைப்பதல்ல. மனதைப் பூரணமாக்கி முழுவதுமாக அதை அடக்குவதே கல்வியின் நோக்கம்.

என்னைப் பொறுத்தவரையில் கல்வியின் சாரம் மன ஒருமைப்பாடே தவிர, தகவல்களைச் சேகரிப்பதல்ல. நான் மீண்டும் படிக்க நேர்ந்தால், ஒருபோதும் தகவல்களைச் சேகரிக்க மாட்டேன். முதலில் மன ஒருமைப்பாட்டையும் பற்றின்மையையும் வளர்த்துக்கொண்டு, பின் அந்தப் பரிபூரணமான கருவியால் நான் விரும்பும்போது தகவல்களைச் சேகரித்துக் கொள்வேன். குழந்தையை வளர்க்கும்போது இந்த இரண்டு ஆற்றல்களையும் அவர்களிடம் வளர்க்க வேண்டும்.

வாழ்நாள் முழுவதும் உங்களால் ஜீரணிக்க முடியாமல் உள்ளிருந்து தொந்தரவு தரக்கூடிய செய்திகளை மூளைக்குள் திணிப்பதல்ல கல்வி. வாழ்க்கையை வளப்படுத்துகின்ற, மனிதனை உருவாக்குகின்ற, குணத்தை மேம்படுத்துகின்ற, கருத்துகளை ஜீரணம் செய்யத்தக்க கல்வியே நாம் வேண்டுவது.

நீங்கள் ஐந்தே ஐந்து கருத்துகளை நன்கு கிரகித்து, அவை உங்கள் வாழ்க்கையாக, நடத்தையாகப் பரிணமித்து நிற்கச் செய்ய முடியுமானால், ஒரு வாசிகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்தவனைவிட நீங்கள் அதிகமான கல்வி பெற்றவர். செய்திகளைச் சேகரிப்பதுதான் கல்வி என்றால், நூலங்கள் அல்லவா மாபெரும் மகான்கள்; கலைக் களஞ்சியங்கள் அல்லவா ரிஷிகள்!

சிறந்த குணத்தை உருவாக்குகின்ற, மன வலிமையை வளர்க்கின்ற, அறிவை விரியச் செய்கின்ற, ஒருவனைச் சொந்தக் கால்களில் நிற்கச் செய்கிற கல்வியே தேவை. சராசரி மக்களை அன்றாட வாழ்க்கைப் போராட்டத்துக்குத் தயார் செய்யாத கல்வி, ஒழுக்க வலிமையைத் தராத கல்வி, பிறர் நலம் நாடுகின்ற உணர்வைத் தராத கல்வி, சிங்கம் போன்ற தைரியத்தைக் கொடுக்காத கல்வி, அதைக் கல்வி என்று சொல்ல முடியுமா? ஒருவனைத் தன் சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்வதே உண்மையான கல்வி.

தொழிற்கல்வி வேண்டும். தொழில் வளம் பெருகுவதற்கான எல்லாவற்றையும் செய்ய வேண்டும். மக்கள் வேலை தேடி அலைவதை விட்டுவிட்டு கைத்தொழிலில் ஈடுபட்டு நாலு காசு சம்பாதிக்கத் தகுதி உடையவர்களாக வேண்டும்.

யாருடைய நம்பிக்கையையும் குலைக்க முயற்சிக்காதீர்கள், முடிந்தால் அதைவிடச் சிறந்த ஒன்றை அவனுக்குக் கொடுங்கள். முடிந்தால் ஒருவன் எங்கு நிற்கிறானோ, அங்கிருந்து அவனை முன்னுக்குத் தள்ளுங்கள். அதைச் செய்யுங்கள். மாறாக, அவனிடம் இருப்பதையும் கெடுக்காதீர்கள்.


ஒரு நொடியில் தம்மை ஆயிரம் பேராக மாற்றிக்கொள்ள யாரால் முடியுமோ, அவர்தான் உண்மையான ஆசிரியர். யாரால் மாணவனின் நிலைக்கு உடனே இறங்கி வர முடியுமோ, தன் மனதை மாணவனின் மனதுக்கு மாற்ற முடியுமோ, யாரால் மாணவனின் கண்களால் பார்க்கவும் அவனது காதுகளால் கேட்கவும் அவனது மனதின் மூலம் புரிந்து கொள்ளவும் முடியுமோ அவர்தான் உண்மையான ஆசிரியர். இத்தகைய ஆசிரியரால்தான் கற்றுத் தர முடியும், மற்ற யாராலும் முடியாது. உங்கள் பல்கலைக்கழகங்களைப் பாருங்கள். ஐம்பது ஆண்டுகளாக இருந்து அவை என்ன செய்துவிட்டன? சுய ஆக்கம் உடைய ஒருவனைக்கூட அவை படைக்கவில்லை. அவை வெறும் பரீட்சை நடத்தும் குழு, அவ்வளவுதான். உண்மையான கல்வி என்பது தகவல்களைச் சேகரிப்பதல்ல; அது மனதின் இயல்பான ஆற்றலை வளரச் செய்வது என்பதை மறந்துவிடாதீர்கள்.

# இலங்கையில் கணனியை கற்கும் ஆர்வம் அதிகம்..!

கடந்த 10 வருடத்தில் இலங்கையில் வீட்டு கணனிப் பாவனை நூற்றுக்கு மூன்று வீதத்திலும், கணினி அறிவுமட்டம் நூற்றுக்கு 11 வீதத்தாலும் அதிகரித்துள்ளதாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.இலங்கையில் வீடுகளின் கணனி பாவனை ஆரம்பித்து தற்போது வரையில் 15 வருடங்களுக்கும் குறைவான காலப்பகுதியே நிறைவடைந்துள்ளது.

இலங்கை வீட்டு பாவனைக்காக நூற்றுக்கு 67 வீதமானோர் தமது முதலாவது கணனியை 2010 - 2014ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் கொள்வனவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. எனினும் இந்த வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்களின் பிரிவுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஆய்வுக்கு அமைய இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்விற்கமைய இலங்கையில் நூற்றுக்கு 24.6 வீதமானோர் குறைந்த பட்சம் ஒரு கணனியையேனும் பயன்படுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது. இலங்கையில் 20 - 24 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு அதிக கணனி அறிவு உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது நூற்றுக்கு 69.1 வீதமாகும். 15 - 19 வயதிற்கு இடைப்பட்டோரிடம் 57.2 வீத கணனி அறிவு உள்ளது. இந்நிலையில், பெண்களின் கணனி அறிவை விடவும் ஆண்களின் கணனி அறிவு அதிகம் என தெரியவந்துள்ளது.50 வயதை கடந்தவர்களில் ஆண்களுக்கே அதிக கணனி அறிவு உள்ள போதிலும், 50 வயதுக்கு அதிகமான பெண்களிடம் விரைவில் கணனியை கற்கும் அறிவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.மாகாண ரீதியில் பார்க்கும் போது மேல் மாகாணத்தில் அதிக கல்வியறிவு உள்ளது. அதில் கொழும்பு மாவட்டத்தில் நூற்றுக்கு 47.1 வீதம் வரை அதிகரித்துள்ளது.இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நூற்றுக்கு 38 வீதம் கொழும்பு மாவட்டத்தில் காணப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் கணனியறிவு நூற்றுக்கு 30 வீதம் காணப்படுகின்ற நிலையில் அதிக கணனியறிவு குறைந்த மாவட்டமாக முல்லைத்தீவு காணப்படுகின்றது. அது நூற்றுக்கு 8.9 வீதமாக பதிவாகியுள்ளது.

# பிரபல்ய பாடசாலைகளின் மோகம் தணியுமா?



(எம்.எம்.ஏ ஸமட்)

ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகளில் கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதும் ஒன்று. இலங்கையின் அரசியலமைப்பிலும் அதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் எப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் இந்நாட்டுப் பிரஜைகள் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய கல்வி வாய்ப்பைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரினதும், சமூகத்தினதும் தார்மீகப் பொறுப்பாகும்.

சமகாலத்தில் அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு பெற்றோரும், பாதுகாவலர்களும் அவர்களை அர்ப்பணிக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால்,அப்பொறுப்பை நிறைவேற்றுவதில் சில பெற்றோர்கள் வேண்டத்தகாத சிரமங்களை அறிந்தும் அறியாமலும் எதிர்நோக்குகிறார்கள். பிள்ளைகளுக்கான பாடசாலைகளைத் தெரிவு செய்வதிலும், பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்காக வழங்கப்படும் அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் முறையாகப் பின்பற்றுவதிலுமே அச்சிரமங்கள் எதிர்நோக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது பொறுத்தமாகும்.

எல்லோருக்கும் எல்லா வாய்ப்புக்களும் கிடைப்பதில்லை. அவ்வாறே எல்லாப் பிள்ளைகளுக்கும் சகல வசதிகளும் நிறைந்த பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பமும் கிடைப்பதில்லை. அவ்வாறு வசதி வாய்ப்புக்கள் நிறைந்த பாடசாலைகளில் கல்வி கற்ற சகல பிள்ளைகளும் சாதனையாளர்களாக மிளிர்ந்ததாக வரலாறும் இல்லை.

இருப்பினும், ஒரு சில பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இந்நாட்டிலுள்ள வசதிகள் நிறைந்த பிரபல்ய பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனா. இப்பிரயத்தனங்களை கல்வி அமைசின் ஆய்வுத் தரவுகள் மூலம் அறிய முடிகிறது.

கல்வி அமைச்சின் ஆய்வின் பிரகாரம்,பொதுமக்களுக்கான தினத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கல்வி அமைச்சுக்கு வருகை தருவோரில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் பிள்ளைகளை பிரபல்ய பாடசாலைகளில் இணைத்துக்கொள்வதற்காகவே வருகை தருவதாக அறியப்பட்டுள்ளது.

இவ்வாறு பிள்ளைகளை பிரபல்ய பாடசாலைகளில் இணைப்பதற்கான அனுமதியினைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றவர்கள் அவர்களின் முயற்சிகள் கைகூடாதபோது, முறையற்ற வழிகளிலும் பிள்ளைகளை அப்பாடசாலைகளில் இணைத்துக்கொள்வதற்கு ஆர்வப்படுவதையும் அதில் ஒரு சில பிரபல்ய பாடசாலைகளின் அதிபர்கள் சிக்கிக் கொள்ளவதையும் கடந்த காலங்களில் நிகழ்ந்த அசிங்கமான நிகழ்வுள் படம் போடுகின்றன.


இந்நிழகழ்வுகள் நடந்தேறாது சகல மாணவர்களும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளில் கற்பதற்கான சூழல்கள் ஏற்படுத்தப்படுகின்றபோது இந்த பிரபல்ய பாடசாலை என்ற மோகம் பெற்றோர்களிடமிருந்து அகன்றுவிடும். அதற்கான முயற்சிகள் ஒவ்வொரு ஆட்சிக் காலங்களிலும் மேற்கொள்ளப்படு

# யுத்த வெற்றியின் சொந்தக்காரர் மஹிந்த

## கருணா அம்மானின் சிறப்புப் பேட்டி

எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு முன்னாள் அமைச்சரும், புலிகள் இயக்க தளபதிகளில் ஒருவருமான கருணா அம்மான் வழங்கிய செவ்வியின் முழு விவரம்



**கே: நீங்கள் ஏன் புலிகள் இயக்கத்தில் இணைந்தீர்கள்?**

**ப:** 83 ஆண்டு ஜூலைக் கலவரம்தான் அதற்கு காரணம்.கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் அந்தக் கலவரம் காரணமாக அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். அதிகமானவர்கள் இடம் பெயர்ந்தனர். அப்போது இது பெரும் பிரச்சினையாக இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தை புலிகள் பயன்படுத்தத் தொடங்கினர். தங்களுக்கென்று தனி நாடு ஒன்று இருந்தால்தான் தம்மால் நிம்மதியாக வாழ முடியும் என்றும் ஆயுதப் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று புலிகள் பிரச்சாரம் செய்தனர்.

அப்போது உயர் தர பரீட்சை எழுதிவிட்டு பல்கலைக்கழகம் செல்வதற்கு எதிர்பார்த்துக்கொண்டு நின்றேன். புலிகளின் இந்தப் பிரசாரத்தால் ஈர்க்கப்பட்டு படிப்பைத் தூக்கி வீசிவிட்டு புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்டேன்.அது பக்குவமில்லாத வயதில் நிகழ்ந்தது.

**கே: 83 இல் இந்தியாவுக்குச் சென்றது ஏன் ?**

**ப:** இந்தியா புலிகளுக்கு உதவியது.ஆயுதப் பயிற்சி வழங்கியது.புலிகளுக்கு மாத்திரமன்றி அப்போது இயங்கி வந்த புளொட் மற்றும் ஈபிஆர்எல்எப் போன்ற அமைப்புகளுக்கும் இந்தியாவே உதவியது.இந்த அமைப்புகளுக்கு வெவ்வேறு இடங்களில் ஆயுதப் பயிட்சிகளை வழங்கியது.

**கே: உங்களுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி வழங்கியது யார்?**

**ப:** இந்திய இராணுவம்தான் வழங்கியது.அப்போது பிரதமராக இருந்தவர் இந்திரா காந்தி.அவரின் தலைமையின்கீழ் தான் இது இடம்பெற்றது.

அப்போது தமிழக முதல்வராக இருந்த எம்.ஜீ.ஆர் புலிகளுக்கு அதிகம் உதவினார்.அவர்தான் இந்திய மத்திய அரசிடம் இருந்து ஆயுதப் பயிற்சியை பெற்றுத் தந்தார்.

**கே: எவ்வாறான பயிற்சிகள் வழங்கப் பட்டன?**

**ப:** சுடுதல் மற்றும் குண்டு தயாரித்தல் என அனைத்தும்.நாம் 300 பேர். நூறு நூறு பேராக மூன்று குழுக்களாகப் பிரிக்கப் பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**கே: இதற்கு பின்னால் இந்திய புலனாய்வுப் பிரிவான RAW இருந்ததா ?**

**ப:** அது எனக்கு நேரடியாகத் தெரியாது. இருந்தும்,அவர்களின் கண்காணிப்பு இல்லாமல் அது முடியாது.

**கே : இந்தப் பயிற்சியில் சிறந்த புலனாய்வு உறுப்பினராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டது எப்படி?**

**ப:** அடிப்படை பயிற்சி முடிந்ததும் 12 பேர் புலனாய்வு பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.அவர்களுள் நானும் ஒருவன்.பின்பு எனக்கு புலனாய்வு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**கே: இதன் காரணமாகவா நீங்கள் பிரபாகரனின் மெய்ப் பாதுகாப்பாளராக நியமிக்கப்பட்டீர்களா?**

**ப:** ஆம். அவர் சென்னையில் இருந்தபோதுதான் நான் அவரது மெய்ப் பாதுகாப்பாளராக நியமிக்கப்பட்டேன்.புலனாய்வு பயிற்சி முடிந்ததும் எனக்கு கிடைத்த முதல் பணி அது தான்.

**கே: நீங்கள் தளபதியாக நியமிக்கப்பட்டது எப்படி?**

**ப:** அப்போது மட்டக்களப்புக்குத் தளபதியாக இருந்தவர் குமரப்பா அருணா.1985 இல் அவர் விபத்துக்குள்ளாகி காயமடைந்தார்.அப்போதுதான் அவருக்கு பதிலாக பிரபாகரன் என்னை மட்டக்களப்புக்கு தளபதியாக நியமித்தார்.

**கே: 83 இல் புலிகள் இயக்கத்தில் இணைந்து 85 இல் ஒரு மாவட்டத்துக்கு தளபதியாக நியமிக்கப்பட்டது எப்படி?இரண்டு வருடங்களுக்குள் எப்படி உங்களால் உயர் பதவிக்கு வர முடிந்தது?**

**ப :** புலிகள் இயக்கம் ஆரம்பத்தில் மிகவும் ஒழுக்கமான இயக்கமாக இருந்தது. அதுதான் இயக்கத்தின் பலம்.புகைக்க முடியாது;மது அருந்த முடியாது.இவ்வாறு ஏராளமான விடயங்களை செய்ய முடியாது.பிரபாகரனின் அருகில் இருக்கும்போது இவை உட்பட பல விடயங்களை நான் கற்றுக்கொண்டேன்.அவரால் நான் விரும்பப்பட்டேன்.அதுதான் நான் உயர் பதவிக்கு வரக் கரணம்.

**கே: 1987 இல் இடம்பெற்ற வடமராட்சி போரில் புலிகள் கடும் தோல்வியை தழுவினர்.இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகள் இந்தியாவின் உதவியைக் கூறினரா?**

**ப:** leap forwar என்ற அந்த நெல்லியடி போரின்போது இராணுவம் வடமராட்சியை கைப்பற்றியது.இந்தியா இலங்கைக்குள் நுழைவதற்கு வாய்ப்பு ஒன்றை எதிர்பார்த்திருந்தது.இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது.இந்திய அமைதிப் படை என்ற பெயரில் இந்தியா அதன் இராணுவத்தை இலங்கைக்குள் அனுப்பியது.

தமிழருக்கு உண்மையாகவே உதவும் திட்டம் அவர்களுக்கு இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் எல்லா தமிழ் இயக்கங்களுக்கும் அவர்கள் உதவி இருக்கமாட்டார்கள்.அவர்கள் எல்லா தமிழ் இயக்கங்களுக்கும் உதவி செய்து அவர்களை ஒன்றோடொன்று மோதவிட்டனர்.

இந்தியா தமிழர்களுக்கு உதவுவதற்கு விரும்பி இருந்தால் ஏதாவது ஓர் இயக்கத்துக்குத்தான் உதவி இருக்கும். ஆனால்,அப்படிச் செய்யாது எல்லா இயக்கங்களுக்கும் உதவி அவர்களை மோத விட்டது.இதன்மூலம் இந்தியா நன்மை அடைந்தது.அத்தோடு,விமானங்கள்மூலம் உணவுப் பொருட்களையும் போட்டது.

**கே: உணவு விமானங்கள் வந்ததுபோல் இந்தியாவின் யுத்த விமானங்களும் வந்தன அல்லவா?**

**ப:** அப்போது இரண்டு பிரச்சினைகளை இலங்கை அரசு எதிர்கொண்டது. வடக்கில் புலிகளின் பிரச்சினை.தெற்கில் ஜே.வி.பி பிரச்சினை.இந்த இரண்டையும் சமாளிக்கக்கூடிய ஆற்றல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கு இருக்கவில்லை.

இதனால் புலிகளை அழிக்கும் பணியை அவர் இந்தியாவிடம் ஒப்படைத்துவிட்டு ஜேவிபியை அழிக்கும் பொறுப்பை ஜே.ஆர்.ஏற்றுக்கொண்டார்.அந்த அடிப்படையில்தான் இந்தியா யுத்த விமானம்,இராணுவம் சகிதம் இலங்கைக்குள் நுழைந்தது.

**கே: பிரபாகரன் திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளத் தீர்மானித்தது சாமாதானத்தை அடைவதற்காகவா அல்லது தந்திரோபாய ரீதியாகவா?**

**ப:** உண்மையில்,பிரபாகரனுக்கு சாமாணத்தில் நாட்டமில்லை.ஏனைய இயக்கங்களை இல்லாமல் செய்து அவர் மட்டும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.அவர் திம்புப் பேச்சுவார்த்தைக்குச் சென்றது அழுத்தம் காரணமாகவே.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு இணங்காவிட்டால் இந்தியாவில் இருக்க முடியாது. இலங்கைக்குப் போக வேண்டி வரும்

> **கே: பிரபாகரனிடம் நீங்கள் கண்ட பலவீனம் என்ன?**
> **ப: அறிவாளிகள் அவரின் அருகில் இருப்பதை அவர் விரும்பமாட்டார்.எவரும் அறிவுரை கூற முடியாது. அவ்வாறு கூறினால் அவரது கதையை முடித்துவிடுவார்.இதனால்,அவருக்கு நல்ல அறிவுரை வழங்குவதற்கு அவருக்கு அருகில் எவரும் இருக்கவில்லை. பல யுத்த வெற்றிகளை புலிகள் தொடர்ச்சியாக பெற்று வந்ததால் அவருக்கு தலைக்கனம் அதிகரித்தது.என்னைவிட தலைவன் யாருமில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டார். இதுபற்றி நான் அவருக்கு எடுத்துக் கூறியுள்ளேன். நான் அவருடன் அச்சமின்றிப் பேசுவேன்.என்னைப் போல் கடற்புலிகளின் தளபதி சூசையும் அவருடன் பேசுவார்.இரண்டு பேர்மீதும் பிரபாகரனுக்கு விருப்பம் அதிகம். எம்முடன் தாராளமாகப் பேசுவார்.**

என்று இந்தியா பிரபாகரனுக்கு அழுத்தம் கொடுத்தது.இதனால்தான் அவர் அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார்.

**கே: புலிகளுக்கு இந்தியாவில் வைத்து ஆயுதப் பயிற்சிகளை வழங்கிவிட்டு இலங்கைக்கு வந்து புலிகளை அழிப்பதற்கு இந்தியா முயற்சித்தது ஏன்?**

**ப :** உண்மையில், புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கையுடன் இந்தியா உடன்படவில்லை.இந்தியாவின் தேவையெல்லாம் இலங்கையில் செல்வாக்குச் செலுத்த வேண்டும் என்பதுதான். அதற்கு இலங்கையில் பிரச்சினை ஒன்று இருக்க வேண்டும். அதற்காகவே அவர்கள் புலிகளுக்கு உதவினர்.

மாகாண சபை முறைமையை அறிமுகப்படுத்தி அதை ஏற்றுக்கொள்ளுமாறு இந்தியா பிரபாகரனுக்கு அழுத்தம் கொடுத்தது.பிரபாகரன் அதை ஏற்கவில்லை.தனிநாடே வேண்டும் என்று நின்றார்.தனிநாட்டுக் கொள்கைக்கு உதவ முடியாது என்று இந்தியா கூறியது.அதன் பிறகு இந்திய அமைதிப் படைக்கு எதிராக புலிகள் போர் தொடுக்கும் நிலை ஏற்பட்டது.

**கே: அரந்தலாவை பிக்குகள் கொலை,தலதாமாளிகைத் தாக்குதல் மற்றும் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உங்கள்மீது சுமத்தப்படுகின்றது. இதற்கு உங்களின் பதில் என்ன?**

**ப:** புலிகள்தான் இதைச் செய்தனர் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.பிரபாகரனுடன் எனக்கு முரண்பாடு ஏற்படுவதற்கு இந்தப் பிரச்சினைகள்தான் காரணமாக இருந்தன.சிவிலியன்கள் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை.

அரநாயக்க சம்பவத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.அப்போது குமரப்பன்தான் அந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருந்தார்.இது எனக்கும் தெரியாது;பிரபாகரனுக்கும் தெரியாது.இந்தச் சம்பவத்துடன் ஈடுபட்ட புலிகளுக்கு பிரபாகரன் தண்டனையும் வழங்கினார்.

பொட்டு அம்மன் மற்றும் நியூட்டன் போன்றவர்களை அழைத்து பிரபாகரன் தண்டனை வழங்கினார். ஆறு மாதமளவில் அவர்கள் தண்டனை அனுபவித்தனர். அரந்தலாவை சம்பவமானது திட்டமிட்டுச் செய்யப்பட்டது அல்ல. வேறு ஒரு தாக்குதலுக்குச் செல்லும்போதுதான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேபோல், காத்தான்குடி பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தியது நியூட்டன் தலைமையிலான குழுவாகும். அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை.

இவ்வாறான விடயங்களுடன் நான் உடன்படவில்லை. சிவிலியன்களை கொல்லுமாறு பிரபாகரன் எங்களுக்கு கூறவில்லை. இராணுவத்துடன் சண்டை போடுவது பற்றியே அறிவுறுத்தப்பட்டோம்.ஆனால்,சில தளபதிகள் சிவிலியன்களை கொலை செய்வதை விரும்பினர்.

அன்டன் பாலசிங்கம், தமிழ் செல்வன் சூசை போன்றவர்கள் இவ்வாறு சிவிலியன்கள் கொல்லப்படுவதை விரும்பவில்லை.துரோகிகள் என்ற பெயரில் தமிழர்களும் கொல்லப்பட்டார்கள்.அதையும் அவர்கள் விரும்பவில்லை.

இவ்வாறு செய்ய வேண்டாம் என்று நாங்கள் பிரபாகரனிடம் கூறினோம்.புலிகளின் வீழ்ச்சி இந்தச் சம்பவங்களில் இருந்துதான் ஆரம்பமானது. வீழ்ச்சிக்கு இதுவே அடிப்படைக் காரணம்.

ஆரம்பத்தில் பிரபாகரன் நல்ல நிலைப்பாட்டில்தான் இருந்தார்.பின்பு அவர் மெல்ல மெல்ல மாறத் தொடங்கினார்.யுத்த தந்திரோபாயமாகவே அவர் இதைச் செய்தார். இதன்மூலம் இராணுவத்தை நாடுபூராகவும் கலைக்க வேண்டும் என்ற திட்டத்துடனேயே அவர் இந்தத் தந்திரோபாயத்தைக் கையாண்டார்.

நாட்டின் பல இடங்களில் தாக்குதல் நடத்தும்போது இராணுவத்தால் வடக்கு-கிழக்கில் மாத்திரம் குவிந்து கிடக்க முடியாது.அங்கு இராணுவக் குறைப்பு இடம்பெற்று அவர்கள் நாட்டின் வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவர்.

இவ்வாறு நினைத்துக்கொண்டுதான் அவர் சிவிலியன்கள்மீது தாக்குதல் நடத்தினார்.அது பிழைத்துப் போய் புலிகளின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துவிட்டது. இவ்வாறான தாக்குதல்களின் பின்தான் உலகம் புலிகளை தடை செய்யத் தொடங்கியது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியை கொலை செய்ததன் பின்னர் இந்தியா புலிகளைத் தடை செய்தது.இலங்கையில் இந்திய இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையில் சண்டை இடப்பெற்றபோதுகூட புலிகளை இந்தியா தடை செய்யவில்லை. இந்தியாவில் புலிகள் இருந்தனர்.

**கே: ராஜிவ் கொலையானது புலிகளின் பிழையான தீர்மானம் இல்லையா?**

**ப:** இலங்கை இராணுவத்தை விடவும் இந்திய இராணுவம் தமிழருக்கு இழைத்த அநீதி அதிகம்.அதிகமான தமிழ் பெண்களை அவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர்.இலங்கை இராணுவம் பெண்களை மதித்தது.பௌத்த மதமும் இந்து மதமும் ஒன்று என்றே இலங்கை இராணுவம் பார்த்தது.ஆனால்,இந்திய இராணுவம் அப்படியல்ல. இதனால் ஆத்திரமுற்ற பிரபாகரன் ராஜிவ் காந்தியை கொலை செய்யும் தீர்மானத்தை எடுத்தார்.

**கே: காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்துக்கு யார் காரணம்?**

**ப:** இந்தச் சம்பவத்தை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.நான் இதை எதிர்க்கின்றேன். இதைச் செய்தவர் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் நியூட்டனாகும்.

இந்த சம்பவம் தொடர்பில் நான் இப்போதுதான் வருத்தப்படுகிறேன்.

அப்போது என்னால் இதற்கு எதிராகக் குரல் எழுப்ப முடியவில்லை.புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியே வந்த பிறகுதான் எம்மால் இதைப் பேச முடிகிறது. ஆனால்,இவ்வாறான வேலைகளை செய்ய வேண்டாம் என்று நாங்கள் அப்போது பிரபாகரனிடம் கூறினோம்.

**கே: எல்லைக் கிராமங்களில் இருந்த சிங்கள மக்களுக்கு துரோகிகள் என்ற பட்டம்சூட்டி அவர்களை புலிகள் கொலை செய்தமை சரியா?**

**ப:** தமிழீழம் என்ற வட்டத்துக்குள் தமிழர்களைத் தவிர எவரும் இருக்கக்கூடாது என்று பிரபாகரன் விரும்பினார். இதனால்தான் அவர் ஏனைய இன மக்களைக் கொலை செய்தார்.

அதேபோல், ஆரம்ப காலத்தில் புலிகள் ஒரு கட்டுகோப்புக்குள் இருக்கவில்லை. அந்தந்த பகுதி தளபதிகள் நினைத்ததைச் செய்து வந்தனர். அதுவும் இந்தச் சம்பவங்களுக்கு காரணமாகும். இந்திய இராணுவம் வந்த பின் இது குறைந்தது. 86 இற்குப் பிறகுதான் புலிகள் இயக்கம் நன்றாகக் கட்டியெழுப்பப்பட்டது.

**கே: பிரபாகரனிடம் நீங்கள் கண்ட பலவீனம் என்ன?**

**ப:** அறிவாளிகள் அவரின் அருகில் இருப்பதை அவர் விரும்பமாட்டார்.எவரும் அறிவுரை கூற முடியாது.அவ்வாறு கூறினால் அவரது கதையை முடித்துவிடுவார்.இதனால்,அவருக்கு நல்ல அறிவுரை வழங்குவதற்கு அவருக்கு அருகில் எவரும் இருக்கவில்லை.

பல யுத்த வெற்றிகளை புலிகள் தொடர்ச்சியாக பெற்று வந்ததால் அவருக்கு தலைக்கனம் அதிகரித்தது.என்னைவிட தலைவன் யாருமில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டார்.இதுபற்றி நான் அவருக்கு எடுத்துக் கூறியுள்ளேன்.

நான் அவருடன் அச்சமின்றிப் பேசுவேன்.என்னைப்போல் கடற்புலிகளின் தளபதி சூசையும் அவருடன் பேசுவார். இரண்டு பேர்மீதும் பிரபாகரனுக்கு விருப்பம் அதிகம்.எம்முடன் தாராளமாகப் பேசுவார்.

**கே : அவர் எந்தச் சமயத்தைப் பின்பற்றினார்?எந்த தெய்வத்தை வணங்கினார்?**

**ப:** இல்லை. சமயங்களின்மீது அவருக்கு விருப்பம் இருக்கவில்லை. அவர் கோயிலுக்குச் செல்லவும்மாட்டார்; எந்தவொரு தெய்வத்தையும் வணங்கவும் மாட்டார். அதற்காக அவர் சமயங்களை எதிர்க்கவும் மாட்டார். வணங்குபவர்களை தடுக்கமாட்டார்.

**கே: நீங்கள் புலிகளின் தளபதியாக இருந்து அந்த இயக்கத்துக்குப் பெற்றுக் கொடுத்த வெற்றி என்ன?**

**ப:** பூநகரி முகாமைத் தாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டபோது பிரபாகரன் என்னை அழைத்தார்.நான் 1700 புலிகளுடன் சென்று பூநகரி முகாமைத் தாக்கி வெற்றிகொண்டோம்.அதுதான் எமக்கு முதல் வெற்றி.

அந்த யுத்தத்துக்கான தளபதியாக இருந்தவர் கேணல் சொர்ணமாகும்.எனது பகுதியில் இருந்த முகாமை ஒரே இரவில் நான் கைப்பற்றினேன்.அந்தத் தாக்குதலின் பின்தான் பிரபாகரன் அதிகமான தாக்குதல்களை என்னிடம் ஒப்படைத்தார்.

மூன்று விடயங்கள் சரியாக இருந்தால் யுத்தத்தை இலகுவாக வெற்றிகொள்ளலாம்.முதலில் தீர்மானமெடுத்தல் இரண்டாவது திட்டமிடல் மூன்றாவது நடைமுறைப்படுத்தல்.இவை மூன்றும் சரியாக இருந்தால் போரை இலகுவாக வெற்றிகொள்ளலாம்.

புலிகளின் தாக்குதல்கள் எல்லாம் இரவில்தான் நடத்தப்பட்டன.ஆனால்,படையினர் பகலில்தான் தாக்குதல்களைத் தொடங்குவர்.இரவில் தாக்குதல் நடத்தப்பட்டால் எதிரியால் அதைக் கட்டுப்படுத்துவது கஷ்டம்.நாம் அதிக வெற்றியைப் பெற்றது இரவில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மூலம்தான்.

அடுத்தது இலங்கை இராணுவத்தின் யுத்த தந்திரோபாயம் பிழையானது.போரில் size and technology என்று ஒன்று உள்ளது. size என்பது இராணுவத்தின் எண்ணிக்கையை குறிப்பது. technology என்பது ஆயுதங்களின் எண்ணிக்கையைக் குறிப்பது.

இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக இருந்தால் ஆயுதங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். ஆயுதங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டால் இராணுவத்தின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

artilery இருக்கும்போது அது பாரிய உதவியாக இருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத்தின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். இல்லையென்றால் ஒரு shell வந்து வீழ்ந்தால் 20 இராணுவம் இறந்துவிடுவர். ஆயுதங்கள் அதிகம் இருக்கும்போது ஆட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பது இதற்காகத்தான்.

இராணுவத்தைப் பொறுத்தவரை சரத் பொன்சேகா நல்ல தளபதி. அவருடன் பல தடவைகள் நேருக்கு நேர் சண்டை பிடித்துள்ளோம். அவர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தப்பிவிட்டார்.

**கே : 2009 இல் அரசுக்கு வெற்றி கிடைத்தது. இந்த வெற்றியின் சொந்தக்காரர் யார்? மஹிந்தவா? கோட்டபேயா? சரத் பொன்சேகாவா ?**

**ப:** மஹிந்தவுக்குத்தான் அது செல்லும். அவர்தான் தீர்மானமெடுத்தார் புலிகளை அழிப்பதற்கு. சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்தும்கூட அவர் நிறுத்தவில்லை.நாம் பல ஜனாதிபதிகள் ஆட்சியின் கீழ் யுத்தம் செய்துள்ளோம். அவர்களால் புலிகளை தோற்கடிக்க முடியவில்லை.

சந்திரிகாவின் காலத்தில் யுத்தம் இடம்பெற்றபோதெல்லாம் அவர் புலிகளுடன் பேச்சு நடத்துவார். அந்தக் காலப் பகுதியில் அவர் இராணுவத்தின் பலத்தை அதிகரித்துக்கொள்வார்.அது பிழை. ஆனால்,மஹிந்த அவ்வாறு செய்யவில்லை. தொடர்ச்சியாக நடத்திச் சென்று போரை முடிவுக்கு கொண்டு வந்தார். வெற்றியைப் பெற்றார்.

**கே: பொன்சேகாவால்தான் புலிகளை வெற்றிகொள்ள முடிந்தது என்று சொல்லப்படுகின்றதே?**

**ப:** நான் புலிகளில் இருந்தபோது சரத் பொன்சேகா யுத்தம் செய்தார்தானே. அவரால் வெற்றிகொள்ள முடியவில்லை. உண்மையில்,இந்த வெற்றி மஹிந்தவுக்குத்தான் செல்ல வேண்டும்.

**கே: யுத்த வெற்றியின் ஒரு பகுதி உங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறதே. இதில் உங்களின் பங்கு என்ன?**

**ப:** புலிகளின் பலமே கிழக்கு புலிகள் தான்.ஜெயந்தன் மற்றும் சாள்ஸ் அன்டனி என்ற இரண்டு படையணிகள் இருந்தன. இவை மிகவும் பலமிக்க படையணிகள். சாள்ஸ் அன்டனி வடக்கைச் சேர்ந்தது. ஜெயந்தன் அணி கிழக்கைச் சேர்ந்தது.

நான் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகிய பிறகு 6000 கிழக்கு புலிகளை நான் பெற்றோர்களிடம் ஒப்படைத்தேன். இதனால் புலிகளின் பலம் குறைந்தது. பிறகு நான் இந்தியாவில் போய் இருந்தேன்.

அப்போது கோட்டாபே ராஜபக்ஷவும் லக்ஷ்மன் ஹுலுகல்லவும் என்னை வந்து சந்தித்து மஹிந்த என்னை வரச் சொன்னதாகச் சொன்னார்கள். அதன்பிறகுதான் நான் இலங்கைக்கு வந்தேன்.

(தொடரும்)

# ஹோரப்பொல ஜும்ஆ பள்ளியின் மீள் நிர்மாண அங்குரார்ப்பணம்





(குருநாகல் இக்பால் அலி)

மிகவும் பழைமை வாய்ந்த ஹோராப்பொல ஜும்ஆப் பள்ளிவாசலின் புதிய மீள் நிர்மாணப் பணிகளுக்காக அங்குரார்ப்பண வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையுடன் இடம்பெற்றது.

3 கோடி 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தப் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு பள்ளிவாசலின் பரிபாலன சபைத் தலைவர் அஸ்வர் ஜமாலுத்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுத் தலைவர் அஷ்ஷெய்க் என். பீ. எம். அபூபக்கர் சித்தீக் மதனி அவர்களுடன் கௌரவ அதிதியாக ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுச் செயலாளர் ஏ. எல் கலிலுர் ரஹ்மான மற்றும் கலாநிதி அம்ஜத் ராசிக் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் அநுராதபுரம் மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் சலாம் கெகிராவை முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் அஷ்ஷெய்க் ரபீக் உள்ளிட்ட முன்னாள் பள்ளி பரிபாலன சபைத் தலைவர் ஏ. எச். மாஹிர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊர்மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் பள்ளிவாசலுடன் இமாமுக்கான வீடு, குர்ஆன் மத்ராஸா, கடைத்தொகுதி, நீர் விநியோகம் போன்ற சகல வளங்களுடன் இந்தப் புதிய கட்டட நிர்மாணப்பணிகள் அமைக்கப்படவுள்ளன.

# தேசிய ஜனநாயக மனித உரிமைகட்சி அரசியல் கட்சிகளை சாடாது

## ஸ்தாபகர் மொஹிடீன் பாவா



தேசிய ஜனநாயக மனித உரிமைகள் கட்சி எந்த அரசியல் கட்சியினையும் சாடுவதற்காகவோ எந்த ஓர் அரசியல் கட்சியின் பிண்ணனியிலோ தொடங்கப்பட வில்லை. நாட்டின் பொருளாதாரத்தினை மேன்மைப்படுத்தவே நாம் முயற்சி செய்கிறோம் இவ்வாறு கட்சி ஸ்தாபகர் மொஹிடீன் பாவா கூறினார்.

நம் இலங்கை ஒரு விவசாய நாடு. அது நம்மில் யாருக்காவது நினைவிருக்கிறதா. எந்த ஒரு குழந்தையை கேட்டாலும் பிற்காலத்தில் மருத்துவர் அல்லது பொறியியளாளர் ஆகவேண்டும் என்றே கூறுகின்றார்கள். எந்த ஒரு குழந்தையாவது நான் நம் நாட்டு மக்களுக்கு உணவு படைக்கும் விவசாயி ஆவேன் என்று கூறுகின்றனரா? என்ன வளம் இல்லை இந்த நாட்டில். ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்.

உற்பத்தி இருந்தால்தானே நாட்டின் ஏற்றுமதி பெருகி இறக்குமதி குறையும். படித்து முடித்த கையோடு ஒரு சிலர் கணனி முன்பு அமர்ந்து வெளிநாட்டு நிறுவனங்களுக்காக வேலை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இன்னும் சிலர் வெளிநாட்டில் படிக்க சென்று அங்கேயே வேலை செய்து அங்கேயே குடியுரிமையும் வாங்கி அங்கேயே தங்கிவிடுகின்றனர்.இன்னும் சிலர் இங்கே நம் நாட்டில் கிடைக்கும் ஏதோ குறைந்த சம்பளத்தில் வாழ்க்கையை ஓட்ட ஏதோ ஒரு வேலையை பார்க்கின்றனர். மீதம் இருக்கும் பெரும்பாலான இளைய சமூகம் வீணாகவே இருந்து பொழுதை கழிக்கின்றனர்.

இங்கே அவர்களை சரிவர கையாள தெரியவில்லை இன்றைய அரசுக்கு. இருக்கும் விவசாய நிலங்களை தங்களுக்கு கிடைக்கும் கோடிக்கணக்கான பணத்திற்காக வெளிநாட்டு பணக்கார முதலீட்டார்களுக்கு விற்று விடுகின்றனர். கேட்க எவரும் இல்லை என்கிற தைரியம் தான் இவர்களை இப்படி செய்ய தூண்டுகிறது. ஆட்சியே நம்மிடம் இருக்கிறது. நம்மை யார் கேட்பார்கள் என்கிற துணிவுதான் இவர்களை இப்படி நடக்க செய்கிறது. இந்த தைரியமே இவர்கள் செய்யும் அனைத்து தவறுகளுக்கும் காரணம்.நம் நாட்டில் குவிந்து கிடக்கும் நில வளங்களையும் மனித வளங்களையும் சரிவர கையாள தெரியாமலும் தங்கள் சுயநலத்திற்காக அவைகளை உபயோகப்படுத்திக்கொண்டும் இன்றைய அரசியல் கட்சிகளும் இன்றைய அரகம் நடத்தி வரும் நாடகங்களுக்கு இன்றே ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா?

அரசியல் கட்சிகளின் அடிபிடிக்குப் பின்னால் காலத்தை வீணாக்கும் முஸ்லிம் சமூகம். இது நமது சமூகத்துக்கு பின்னடைவேயன்றி பிரதி பலன் ஒன்றும்

# தினேஷை போன்று அமைச்சர்கள் மீதும் நடவடிக்கை எடுங்கள்



ஒழுக்கயீனமாக செயற்பட்டமைக்காக தினேஸ் குணவர்தனவுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை போன்று ஒழுக்கயீனமாக செயற்படும் ஏனையவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என துறைமுக மற்றும் கடற்றொழில் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றம் மற்றும் பொதுமக்களின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கடமைப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் நடவடிக்கைகள் அவ்வளவு நல்ல நிலையில் இல்லை.

மக்கள் பிரதிநிதியாக இருக்கும் அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார்.

## ஒலுவில் மீனவர்களின் கவனயீர்ப்பு போராட்டம்

(அட்டாளைச்சேனை றியாஸ் ஆதம்)

ஒலுவில் துறைமுகத்தின் நுழைவாயில் கடந்த சில மாதங்களாக கடல் மண்ணினால் மூடப்பட்டுள்ளதால் மீன்பிடித் தொழில் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

காலை 7மணிக்கு ஒலுவில் துறைமுக நுழைவாயிலுக்கு முன்பாக நடைபெறவுள்ள இப்போராட்டத்தில் மீனவர்கள்,பொது மக்களையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கல்முனை மாவட்ட சங்க ஒன்றுகூடலும், நிர்வாகத்தெரிவும்



ஐ.எம்.ஹம்தான்,
அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் 2017ஆம் ஆண்டுக்கான ஒன்று கூடல் நிகழ்வும் நிருவாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை அக்கரைப்பற்று டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண ஆணையாளர் எஸ்.செய்னுலாப்தீன் பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளரும் அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் தலைவருமான ஏ.எல்.எம்.ஹாசிம், உதவி மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை உட்பட உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள் சாரண குழுத் தலைவர்கள்,சாரண சங்க உறுப்பினர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது இவ்வாண்டிற்கான அக்கரைப்பற்று கல்முனை சாரணர் சங்கத்தின் நிருவாகத் தெரிவொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹஸனலி, பஷீர் தேசியப்பட்டியல் காய்ச்சல் இப்போது அதாஉல்லாவுக்கும் தொற்றியுள்ளது

## மாகாண சபை உறுப்பினர் தவம்




(றியாஸ் இஸ்மாயில்)

முன்னாள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகத்திற்கு மூன்று முறை தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டதோடு சகல அதிகாரங்களும் கொண்ட செயலாளர் நாயகமாகவும் பல வருடங்கள் இருந்து வந்துள்ளார். அவர் பதவி வகித்த காலத்தினுள் எமது சமூகத்திற்கு எதைப் பெற்றுத் தந்துள்ளார் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் விவகார வேலைவாயப்புத் துறை இணைப்பாளரும்,கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.தவம் கேள்வி எழுப்பினர்.

அக்கரைப்பற்று காதிரியா பிரதேசத்திலுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு மற்றும் அடுப்புகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இங்கு கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் மு.காவின் செயலாளர் நாயகம் பத்திரிகைகளுக்கு அறிக்கை எழுதுவதிலே தனது காலத்தை கடத்தினார்.சாத்தியமான எந்த திட்டத்தையும் அவர் அக்காலம் முன் வைக்கவில்லை கரையோர மாவட்டம் பற்றி அடிக்கடி அவர் குறிப்பிடுவார் கரையோர மாவட்டத்தின் எல்லைகள் மற்றும் அதனைச் சார்ந்த ஆவணங்கள் தொடர்பாக ஒரு பக்க தாள் துண்டு கூட அவர் வைத்திருக்கவில்லை. காணிப் பிரச்சினைகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டங்களை பல வருட காலமாக செய்து வருகின்றனர்.அந்த பாதிக்கப்பட்ட மக்களை அவர் எப்போதாவது சந்தித்து கலந்துரையாடியுள்ளாரா?

பொத்துவில் காணிகள் வட்டமடு ஏன் அவரின் சொந்த ஊரிலுள்ள சர்ச்சைக்குரிய காணிகளையாவது களத்துக்கு சென்று பார்வையிட்டாரா?இது விடயமாக நடவடிக்கை மேற்கொண்டிருப்பாரா?இங்கே அறிக்கையால் எல்லாவற்றையும் சாதித்து விட்டதாக அவர் கூறுகின்றார். எதுவுமே நடக்கவில்லை அவரிடம் அதிகாரம் இருந்த போது பெற்றுத்தராத விடயங்களை இப்போது பெற்றுத் தருவதாக கூறுகிறார்.தேசியப்பட்டியல் தனக்கு கிடைக்கவில்லை என்பதற்காக கட்சியை புனிதப்படுத்த புறப்பட்டுள்ளேன் என்று கூறுகிறார். ஹஸனலிக்கும் பஷீருக்கும் பிடித்துள்ள தேசியப்பட்டியல் காய்ச்சல் இன்று முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லாவுக்கும் தொற்றியுள்ளதால் இவர்கள் ஜனாதிபதியின் வீட்டுக் கதவை தினமும் தட்ட ஆரம்பித்துள்ளதாக தெரியவருகின்றது என்றார்.

# மத்திய மாகாணத்தில் டெங்கு பரவும் அபாயம்

## மாகாண சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு

(வத்துகாமம் நிருபர்)

மத்திய மாகாணத்தில் அடைமழை ஆரம்பித்துடன் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குடியிருப்பாளர்கள் தமது சூழல் தொடர்பாக மிக அவதானமாக இருக்கும் படி மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சாந்தி சமரசிங்ஹ தெரிவித்தார்.கண்டியிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து மாகாணத்தில் டெங்கின் நிலைமை பற்றி வினவிய போது அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

மத்திய மாகாணத்தில் மழை ஆரம்பித்துள்ளதன் காரணமாக மாகாணத்தில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இறுதியில் கண்டி மாவட்டத்தில் 542 டெங்கு நோயாளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 245 டெங்கு நோயாளர்களும், நுவரெலிய மாவட்டத்தில் 50நோயாளர்களும் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இருந்த போதும் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் எட்டு பிரதேச செயலகபிரிவுகள் அதிக அபாய பிரதேசங்களாக இனம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவற்றுள் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர, கண்டி நகரம்,குண்டசாலை, ஹாரிஸ்பத்துவ, கம்பளை, கங்கவட்ட கோரலய , மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை, மாத்தளை நகரம் ஆகிய பிரதேசங்கள் அதி அபாயப் பிரதேசமாகவும் அபாய பிரதேசங்களாக கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி, உடுநுவரை,அக்குறணை, வத்தேகம மாத்தளை மாவட்டத்தில் கலேவெல பிரதேசமும் இனம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். எவ்வாறாயினும் டெங்கு நோயாளிகள் பதிவாகும் பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்துவதாகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்த அவர் இதனை முன்னெடுப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு தேவை எனவும் அவர் தெரிவித்தார்.




# வேலையற்ற பட்டதாரிகளின் கண்ணீர் கதைகள்

அ.கா.சித்தி சர்ஜுனா
சாய்ந்தமருது

பட்டதாரிகள் பட்டமரமோ மாடுகளோ அல்ல உணர்வுகளும் கல்வியறிவும் மிகுந்த இளைஞர் யுவதிகள் என்றவகையிலும் பாதிப்புற்ற பட்டதாரி என்ற வகையிலும் இன்று தெருக்கொட்டில்களில் வேலையற்ற பட்டதாரிகளில் ஒருவராய் அம்பாறை மாவட்டத்தில் ஆர்ப்பாட்ட பேரணியில் உற்கார்ந்து கொண்டு தவிக்கும் இளைஞர் யுவதிகளின் கண்ணீர் காவியங் களில் சில அந்தவகையில், பல்கலைக்கழகம் நுழைந்தது பட்டப்படிப்பினை உள்ளக ரீதியாக பூர்த்தி செய்து தந்தை உழைப்பில் தண்டமாக உட்கார்ந்து வாடிப் போய் மரத்திலிருந்து உதிர்ந்த மலர்களாய் வாடும் வேலையில்லாப் பட்டதாரிகள் பலரின் கருத்துக்கள் கண்கள் கலங்கவே வைக்கின்றது.

தந்தை கடற்றொழில் புரிபவராக கடலில் கிடந்து தன் உயிரை பணயம் வைத்து அரும்பாடு பட்டு அவர் கல்வியறிவு அற்றிருப்பினும் என்குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்போல் அன்றி அரச பதவி புரிய வேண்டும் என்ற பல கனவுகளோடு தன் உதிரத்தை சிந்தி மாணவர்களின் கல்விக்காக செலவு செய்கின்றார்கள்.

பல கனவுகளினைச் சுமந்து பல்லைக்கழகத்திற்கு நுழைந்து இன்னும் தொழில் இன்றிய வேலையில்லாப்பட்டதாரியாக கண்ணீர் வடிக்கும் பட்டதாரி மாணவர்கள் உழைத்து தோய்ந்து போன என்தந்தைக்கு ஒய்வு கொடுப்பதை விடுத்து இன்றும் சுமையாகவே இருந்து கொண்டிருக்கின்றோம் என்று கூறுகையில் அவர்களின் நிலைகண்டு மனங்கள் பதறவே செய்கின்றன.

இந்தபோராட்டத்தின் நடுவினில் நான் சத்தித்த பெண்ணின் கண்ணீர்க் கதையினை கூற முற்படுகின்றேன் இம் மாணவி தன் கருத்தினை கண்ணீர் மல்க... நான் பல்கலைக்கழகம் நுழைந்தது 2010 ஆம் ஆண்டு இதன்பின்னர் 2015 ஜுலை 14 ஆம் ஆண்டு என்னுடைய பட்டப்படிப்பினை உள்ளக ரீதியாக விசேடமாக பூர்த்தி செய்த மாணவியாவேன்.

என்னுடைய தந்தை கடற்றொழில் புரிபவராக கடலில் கிடந்து தன் உயிரை பணயம் வைத்து என்னை அரும்பாடுபட்டு அவர் கல்வியறிவு அற்றிருப்பினும் என்குழந்தைகள் கல்வி கற்க வேண்டும்.என்போல் கஷ்டப்பாடமல் அரச பதவி புரிய வேண்டும் என்ற பல கனவுகளோடு தன் உதிரத்தை சிந்தி என் கல்விக்காக செலவும் செய்தார்.நானும் பல கனவுகளினைச் சுமர்ந்து பல்லைக்கழகத்திற்கு நுழைந்தேன்.பல்லைக்கழகம் நுழைந்து சுமார் இதுவரை 7 வருடங்கள் கடந்து விட்டன.இன்னும் தொழில் இன்றி பட்டதாரியாகிய நான் உழைத்து தோய்ந்து போன என்தந்தைக்கு ஒய்வு கொடுப்பதை விடுத்து இன்றும் சுமையாகவே இருந்து கொண்டிருக்கின்றேன்.

இவ்வாறு வேலையற்று இருக்க விரும்பாத நான் பல தனியார் நிறுவனங்களுக்கு தொழில் நாடிச் சென்றேன்.பல நேர்முகப் பரீட்சைக்கு தோற்றினேன்.இருப்பினும் நேர்முகப்பரீட்சையின் போது அவர்கள் 3 கேள்விகளினை வினாவாக தொடுத்து என்னை நிராகரிப்பதனைக் கண்டேன்.

1) நீங்கள் உள்ளக ரீதியாக பட்டப்படிப்பினைப்பூர்த்தி செய்த மாணவி அரசாங்கம் தொழில் வழங்கினால் இதனை விட்டுச் சென்று விடுவீர்களா?

2) தூர இடத்திலிருந்து வருகை தந்து எங்ஙனம் பணியாற்றமுடியும்? பெண்பிள்ளையல்லவா?

3) நீங்களோ உள்ளக ரீதியாக பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்தவர் திருமணம் செய்துவிட்டால் கணவர் தனியார் தொழிலுக்கு செல்ல விடுவாரா?முஸ்லிம் ஆக இருக்கின்றீர்கள் என்கின்றனர். இவ்வாறு அவர்கள் எங்களிடம் கேட்கும் வினாக்கள் நியாயமானவை என்று ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைமையே ஏற்பட்டது. எனக்கு தொழில் ஒன்றினைப்பெற்று) செய்ய வேண்டும் மேற்கொண்டு கற்க வேண்டும் என்ற அவாவும் காணப்பட்டது.எவ்வாறாவது நான் எனது மேற்படிப்படிப்பினைத் தொடர வேண்டும் என எண்ணினேன்.இதனால் ஒரு நிறுவனம் ஒன்றில் IFA யினை 10 ஆம் தர மாணவர்களுக்கு 1 வருட காலம் கற்பித்தேன் இருப்பினும் அவர்கள் தரும் 5000 ரூபாய் போக்குவரத்துக்கே போதுமானதாகவிருந்தது.இதனால் அதனை நான் தொடர முடியாமல் போனது.

அதன் பின்னர் எனது வீட்டின் அருகே உள்ள நிறுவனம் ஒன்றிற்கு சென்று என் நிலைமையினை எடுத்துரைத்தேன்.அந் நிறுவனப் பொறுப்பதிகாரி; மனிதாபிமானம் கொண்டவர் என்பதனாலும் நான் வேலையினை சிறப்பாக செய்துமுடிப்பவர் என்றவகையிலும் என்னை கனணி இயக்குனர் பயிற்சியாளராக கடமை புரியுங்கள் நாள் சம்பளம் கிடைக்கும் என்று கூறினார். இதன் கீழ் 6 மாதகாலம் கடமை புரிந்தேன். அதன் மூலம் 50.000 ரூபாய் கிடைத்தது.இதனைக் கொண்டு என்னால் எனது மேற்படிப்பினைத் தொடரமுடியாமல் போனது அதன் பின்னர் நிலையப்பொறுப்பதிகாரியிடம் தொடர்ந்து பேசினேன். அவர் அவ்வாறு பணியாற்ற முடியாது 6 மாதகாலமே பணியாற்ற முடியும் என்றார். அதன் பின்னர் 120 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் பாதிப்புற்ற நான் இடைவிட்டு செல்கின்றேன் 15 நாட்கள் உழைத்து தொழில் புரிந்தும் சம்பளம்பெறாமல் 15 நாட்கள் கழித்து தொழில் புரிகின்றேன் என்றேன். அவர் தலைமைக்காரியாலயத்தில் இதனைக் அறிவித்தார். அவ்வாறு செய்யமுடியாது என தலைமைக் காரியாலயத்திலிருந்து கடிதம் வந்தது.

நான் விடவில்லை மீண்டும் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கெஞ்சினேன். அவர் பெருமனம் கொண்டு தலைமைக்காரியலாயம் சென்று என்நிலைமையினை எடுத்துக் கூறி மீண்டும் அனுமதிக்கடிதம் ஒன்றினைப் பெற்றுவந்து என்னை கடமையாற்றும்படி உதவி புரிந்த நல்லுள்ளம் கொண்ட மனிதரானார். அவர் போன்ற நல்லுளளம் கொண்ட மனிதருக்கு நான் என்றும் கடமைப் பட்டவளாவேன்.

இருப்பினும் 2016 ஜுலை இருந்து டிசம்பர் வரையிலான காலகட்டப்பகுதியில் கடமையாற்றிய கொடுப்பனவினை 2 கட்டங்களாகப் பிரித்து 2017.03.01 ஆம் திகதி 34,000 ரூபாவினைப் பெற்றேன் மிகுதி 24,000 ரூபாய் பணத்தினை 2017 ஏப்ரல் மாதம் தருவோம் என்று கூறியுள்ளனர்.

இதைக்கிடையில் நான் சந்தித்த இன்னொரு பெண்ணின் நிலை கவலையளிக்கிறது. கடற்கரைப்பிரதேசத்தில் கல்வியறிவின்றி தரம் 10 வரை கூட சீராக கற்காமல் திருமணம் என்ற பந்தத்தில் இணைந்து வாழும் சூழலில் பிறந்து எனது தெருவிலே நான் மட்டுமே கல்வி கற்று பல்லைக்கழகம் நுழைந்தேன்.என் கனவு நான் கலைமாணி முடித்துவிட்டு தொழில் ஒன்றினை பெற்று முதுமாணியினையும் முடிக்க வேண்டும். இதன் பின்னர் குடும்பம் கணவன் குழந்தை என்ற பந்தத்திற்குள் நுழைய வேண்டும் என பல கனவுகளை என்னுள் சுமந்தேன்.

என்னை மட்டும் விட்டுவைக்குமா என் சமூகம்,தொழில் தேடி அழையும் என்னைப் பார்த்து ஏளனமும் பின்னால் போகவிட்டு என்ன எவ்வாறு பேசினர் தெரியுமா? படித்துப் படித்து இருக்கின்றாவே இன்னும் தொழில் கிடைக்க வில்லை.என்னை விடாதவர்கள் என் அம்மாவினை மட்டும் விட்டுவிடுவார்களா? குமரு முத்தி குரங்கு ஆகுது இன்னும் திருமணம் செய்து வைக்க வில்லை ' என்று தீப்பொறி வீசலாயினர்.

இதனைக் கேட்டு அடிகள் பல வாங்கியும் மாறி அடிக்கவோ பேசவோ முடியாத என் அப்பாவி பெற்றோரின் கண்களின் கண்ணீர் கண்டு என் கனவினையும் என் இலட்சியத்தினையும் சற்று தளர்த்தலானேன்.

என்னால் என் தாய் தந்தை ஏன் தெருவில் உள்ளவர்களின் தூற்றலுக்கு உற்பட வேண்டும். பெற்றோரின் கண்ணீரில் எனக்கு இலட்சியமா வேண்டும் என்று என் உள்மனம் எனக்கே அறிவுரை கூறியது. இதற்கிணங்க என் பெற்றோரிடம் நீங்கள் பார்க்கும் ஆண்மகன் யாராக இருப்பினும் திருமணம் செய்கின்றேன் பாருங்கள் என்றேன்.

இதனையடுத்து நான் இன்னுமொரு சங்கடத்தை சந்திக்கலானேன். பெண் பேசுகையில் பெண் அழகாக இருக்கிறாள்,குடும்பமும் பிரச்சினையில்லை எல்லாம் சரி பெண்ணுக்கு தொழில் இல்லை அடுத்த சுனாமி வந்தால் முதலில் வந்து ஏறுவது உங்களின் வீட்டுமுற்றத்தில்தான் என்ற காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. பெண்பார்க்கும் சம்பிரதாயம் என்ற பெயரில் வீடுகளில் வேடிக்கை காட்சிப் பொருளாக ஆக்கப்பட்டேன்... இக்காரணங்களினை பெண்பார்க்க வருபவர்கள் அறியாதிருப்பினும் தெருவில் கூறி நின்று வெட்டிக்கதைகள் பேசி ஒரு கணவன் போதாமல் பல ஆடவர்களின் ரசிப்பிற்கு உற்பட எண்ணி காலையிலும் மாலையிலும் தெருவில் மேக்கப் செய்து நிற்கும் பெண்களும்,கடற்கரையில் தேநீர் கடையில் பெண்கள் போன்று வெட்டிக்கதைகள் பேசித்திரியும் ஆண்களும் அரச தொழில் புரியும் மகனை சுனாமிப் பிரதேசத்திலா திருமணம் செய்து வைப்பது என அறிவுரை என்ற பெயரில் என் வாழ்க்கையினை சீரழித்து வசைபாடவே முற்பட்டனர்.

இதனையும் தாண்டி ஏழைவயிற்றில் பிறந்து கடலலை எட்டிப்பார்க்கும் பிரதேசத்தில் வசித்து வேலையில்லாத பட்டதாரி என்ற பெயரினை சுமந்து நிற்கும் எமக்கு திருமணம்தான் கேடு என்ற விரக்திக்கும் உற்பட்டேன்.அச்சமயம் "தலைஎழுத்து உள்ளவன் கடல்கள் பல தாண்டியும் தேடி வருவான் என்ற பெயரில் ஓர் ஆண்மகன் என்னைத் தேடிவரலானான். மனதிற்குள் என் கனவு என்ற குமுறல் இருப்பினும் என்பெற்றோருக்காக திருமணமும் ஒரு கிழமைக்குள் நடந்து முடிந்தது.அன்பான கணவனும் கிடைக்கலானான் என் கணவனிடம் முதலில் நான் பேசிய வார்த்தை எனக்கு தொழில் இல்லை சுனாமி பிரதேசத்தில் வீடு இவ்வாறிருக்கையில் எதனை வைத்து என்னை திருமணம் செய்ய விரும்பினீர்கள் என்று கேட்டேன் இதனையெல்லாம் ஏன் நினைத்து வருந்துகின்றீர் எனக்கு இதெல்லாம் தேவையில்லை என்றார். என் உள்ளமும் குளிர்ந்தது..

இவ்வாறான நிலையில் நான் திருமணம் முடித்து இரண்டு கிழமைகளின் பின்னர் கிழக்குமாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை எழுதினேன்.இதன்படி உளச்சார்பில் 42 புள்ளியினையும் பொதுஅறிவுப்பரீட்சையில் 38யினையும் பெற்று உள்ளக ரீதியாக விசேடபட்டம் முடித்தும் ஆசிரியராக கூட கற்பிக்க முடியாத பட்டியலின் கீழ் தகுதியற்றவளானேன். வறிய மீனவக்குடும்பத்தில் பிறந்தவாளான நான் உள்ளக ரீதியாக பட்டத்தினைப்பூர்த்தி செய்திருப்பினும் தொழிலின்றி பல இன்னல்களினை எதிர்நோக்கி வாழ்வதுதான் நிலைமையாகிவிட்டது.தற்போது வயிற்றில் மூன்று மாதகால குழந்தையினை சுமந்து கொண்டு தெருவில் வேலைதேடி போராடிக் கொண்டிருக்கின்றேன்.

பிறக்கப்போகும் என் குழந்தையின் வாழ்வினை எண்ணி கவலையடைகின்றேன்.சுனாமிப் பிரதேசம் என்ற பெயரில் என் குழந்தையின் வாழ்வு எங்கோ துன்பத்தில் ஆழ்ந்து விடுமோ என்றும் கவலையடைகின்றேன் இதற்காகவே இன்றுதொழில் வேண்டிப் போராடி நிற்கின்றேன் என்று கூறும் போதே அவள் கண்களிலிருந்து கண்ணீர் பாய்வதனைக் கண்டேன்.

கடலில் போராடி சளைத்துப்போன என் தந்தையின் கரங்களுக்கு ஓய்வினை வழங்கமுடியவில்லை.அடுப்பங்கரையில் அடுப்பூதும் என் அம்மாவிற்கு புடவை ஒன்றேனும் வாங்கிக் கொடுக்க முடியவில்லை.

மூப்படிப்படையில் தொழில் வழங்குவோம் என்றால் க.பொ.தர உயர்தரப்பரீட்சையில் அரசாங்கம் விடுத்த வெட்டுப்புள்ளியின் கீழ் பல்கலைக்கழகம் நுழைந்து விசேடபட்டம் முடித்த என் நிலைதான் என்ன?இன்னும் எத்தனை வருடங்கள் நாங்கள் காத்திருக்க வேண்டும்? எங்களுடைய வேதனைகள் புரிகின்றதா?எங்களுடைய எண்ணக்குமுறலுக்கு என்ன பதில் கூறும் இந்த நல்லாட்சி அரசாங்கம்? போட்டிப்பரீட்சை என்ற விசமத்தினால் உள்ளக ரீதியாக பட்டம் முடித்தது விட்டு பாதிப்புற்று கனவுகளினைத் துளைத்து தவிக்கும் என் போன்ற வேலையில்லாப்பட்டதாரிகளின் நிலைமைதான் என்ன? என்போல் பல கனவுகளினை சுமந்து தெருக்கொட்டகைகளில் இன்னலுறும் மாணவர்களுக்கு என்ன பதில் ? பல்கலைக்கழகத்திற்கு உள்ளக ரீதியாக நுழைந்தும் தொழில்வாய்ப்பின்றி அழையும் என்போன்ற மாணவர்களின் நிலைதான் என்ன? எனக்கு கூறும் பதில்தான் என்ன? ஏன் எங்களின் வயிற்றில் அடிக்கின்றீர்கள் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவனின் குழந்தை குப்பைதான் புறக்க வேண்டுமா?இவைகள் இலங்கை அரசாங்கத்தினை நோக்கி நான் தொடுக்கும் வினா. காத்திருக்கின்றாள் அவள் தொழில் ஒன்றினை வேண்டி சத்தியாக்கிரக போராட்டத்தில் இவ்வாறான மாணவிகளின் கண்ணீர் என்று தீரும் எப்படி தீரும் நானும் எதிர்பார்த்து காத்துநிற்கின்றேன் விடியலை நோக்கி.







சூரி ரத்னபால

# அரசியலமைப்பு அரசாங்கத்தின்

## நிறுவனம் சார்ந்த நிலைமை

**(நேற்றைய தொடர்ச்சி...)**

மிக முக்கியமானது என்னவெனில், அரசியலமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் விதிகளின் நிலைமை தொடர்பான ஒழுங்கீனம் சமூக ஒழுங்கினமாகும். விதிகள் அவதானத்தின் மூலம் நிலைத்துள்ளன. நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ்துறை ஆகியவற்றின் வலுக்கட்டாய அதிகாரத்தின் மூலம் சட்ட ஆட்சி மற்றும் அரசியலமைப்பு அரசாங்கம் நிலைத்து நிற்பதற்கு சட்டமாக்கப்படுவதுடன் பேணப்பட வேண்டுமென நினைப்பது தீங்கான தவறாகும். முக்கியமான எழுத்து மூலமற்ற விதிகள் உட்பட அநேக மக்கள் சமூக ஒழுங்கின் விதிகளை அதிகளவு காலத்திற்கு அவதானிப்பதால் சட்ட ஆட்சி மற்றும் அரசியலமைப்பு அரசாங்கத்திற்கான நிபந்தனைகள் தொடர்ந்து நிலைத்துள்ளன. முறைமையில் உள்ள ஏனையவற்றை பாதிக்காது சில விதிகளை செயற்பாடற்றதாக்குவதென்பது முடியாத காரியமாகும். விதிகள் அவதானிக்கப் படாமை மூலமாக சீர்குலைவதானால், மக்கள் அதைக் கணக்கெடுப்பதில்லை. மக்களின் நம்பிக்கையீனம் நிறுவனங்களின் நம்பிக்கையீனமாக மாற்றியமைக்கப் படுகிறது. மக்கள் ஏனைய முன்னெச்சரிக் கைகளை மேற்கொள்கின்றனர். அவர்கள் தமது இல்லங்களைப் போசித்து, பொது மக்கள் பூங்காக்களிற்கு தமது பிள்ளைகள் செல்வதை நிறுத்தி, தமது அயலவரை முழுமையாகப் புறக்கணித்து (மேலும் சட்டமற்ற நிலைக்குத் தள்ளப் படுகிறது) காப்புறுதி நிவாரணத்தை அதிகரித்து மக்களைப் பந்தோபஸ்து ரீதியில் உருவாக்கும் நம்பிக்கை அல்லது சிந்தனையை உருவாக்குகின்றனர். நியமங்கள் சரியத் தொடங்கியவுடன் அரசாங்கத்தில் ஊழல் பரவ ஆரம்பிக்கும். அத்தகைய ஒழுங்கீனத்தின் பொருளாதாரக் கிரயத்தை (செலவினத்தை) கணிக்க முடியாததோடு அரசியலமைப்பு அரசாங்கத்தில் உள்ள நிறுவனம்சார் நிலைமையின் இறுதிக்கணக்கெடுப்பாக அமைகிறது. திறந்த சமூகங்களின் சுயசீராக்கல் மூலமாக மேற்கத்திய சனநாயகங்களில் ஏற்பட்டுள்ள நிறுவனம்சார் மீட்டெடுப்பிற்கு நாங்கள் சாட்சியமளிக்கலாம்.

குற்றச்செயல், விவாகரத்து மற்றும் சட்டமுறைமையற்ற சம்பவங்கள் ஆகியவற்றின் வீதம் 1990 ஆம் ஆண்டுகளிலிருந்து மந்தகதியில் செல்வதுடன் (Fukuyama 2000, 271) அவற்றின் குறைவடைதல் தொடர்பில் கவலையைத் தெரிவிக்கும் வலது சாரிகளின் மரபுரீதியான குரல் எழுப்புதலுடன் இணையும் இடதுசாரிகளின் அதிகளவு குரல் எழுப்புதலுடன் பொதுமக்கள் விவாதங்களில் வெளிப்படையாக தற்போது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய தனிப்பட்ட பொறுப்புடைமையின் முக்கியத்துவம் உணரப்படுகிறது.

(தொடரும்)

# பேருவளை ஜாமிஆ நளீமியாவின் 10ஆவது பட்டமளிப்பு விழா

(பேருவளை பி.எம். முக்தார்)

பேருவனை ஜாமியா நளீமியா கலாபீடத்தின் 10ஆவது பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை கலாபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜாமியா நளீமியா கலாபீட நிகழ்வாக சபை தலைவர் யாகூத் நளீம் தலைமையில் நடைபெற்ற இவ்விழவில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இஸ்லாமிய கலாச ாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் தோரணம் அமைக்கப்பட்டிருந்ததோடு ஜாமியா நளீமியா இஸ்லாமிய வளாகம் விழாக் கோலம் பூண்டு காணப்பட்டது. அமைச்சர் உள்ளிட்ட பிரமுகர்களுக்கு இஸ்லாமிய முறைப்படி இங்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. கலாபீட நிர்வாக சபைத்தலைவர் யாகூத் நளீம் வரவேற்புரை நிகழ்த்தியதோடு கலாபீட பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி பட்டமளிப்பு பேருரையை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் கடந்த 2013,2014,2015 மற்றும் 2016 கல்வி ஆண்டுகளில் கற்கை நெறியை பூர்த்தி செய்த 122 பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது. வெளிநாட்டு இஸ்லாமிய அறிஞர்கள், முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் தேசிய ஊடக மத்திய நிலைய தலைவருமான இம்தியாஸ் பாகிர் மாக்கார், பிரதி அமைச்சர் பைசல் காசிம், பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான், மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜமீல், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸலம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எம். அம்ஜாத், சீனன்கோட்டை பள்ளிச்ச ங்கத் தலைவர் ராமிஸ் ஏ. கபூர், கலாபீட பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளீமி) உட்பட விரிவுரையாளர்கள் , பழைய மாணவர்கள் உட்பட பெரும்பாலானோர் விழாவில் பங்குபற்றினர். மர்ஹும் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியாரினால் ஸ்தாபிக்கப்பட்ட இக் கலாபீடம் கடந்த பல தசாப்தகாலமாக பெரும்பாலான பட்டதாரிகளை சமூகத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.















## டிரம்ப்பை கொல்ல சதியா?: மர்மப் பையுடன் நுழைந்தவர் கைது

அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையின் மதில் சுவரை தாண்டி குதித்து உள்ளே நுழைந்த நபரை அந்நாட்டு உளவுப்படை அதிகாரிகள் மடக்கிப் பிடித்து கைது செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெள்ளை மாளிகையில் அதிகாரிகளுடன் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தி கொண்டிருந்தார். சரியாக 11.38 மணியளவில் வெள்ளை மாளிகை வளாகத்தின் தெற்கு பகுதியில் உள்ள மதில் சுவரை தாண்டி குதித்த ஒரு மர்ம உருவம் முன்னேறி செல்வதை தொலைநோக்கி வழியாக கண்டு, பதற்றம் அடைந்த ஜனாதிபதியின் சிறப்பு பாதுகாப்பு அதிகாரிகளும் தேசிய உளவுப்படையினரும் விரைந்து சென்று அந்நபரை உடனடியாக கைது செய்தனர்.

பிடிபட்டவர் ஜோனாத்தன் என்ற 26 வயது வாலிபர் என்றும் கலிபோர்னியா மாநிலத்தை சேர்ந்தவர் என்பதும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு நிறைந்த வெள்ளை மாளிகையின் மதில் சுவரை தாண்டி குதித்து உள்ளே நுழைந்த அந்த வாலிபரை கைது செய்த உளவுப்படை அதிகாரிகளை ஜனாதிபதி டிரம்ப் பாராட்டியுள்ளார்.

# உலகச் செய்திகள்

## டிரம்பின் புதிய உத்தரவுக்கு உடனடி தடை இல்லை:
## அமெரிக்க நீதிமன்றம் கைவிரிப்பு

ஆறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் நுழைய தடை விதித்து டிரம்ப் பிறப்பித்துள்ள புதிய உத்தரவுக்கு தடை விதிக்க அமெரிக்க நீதிமன்றம் மறுத்து விட்டது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் டொனால்ட் டிரம்ப் அதிரடியாக ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சே ாமாலியா, சூடான், யெமன் ஆகிய 7 நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் நுழைவதற்கு 3 மாத கால தடை விதித்து உத்தரவிட்டார்.

இது அமெரிக்காவில் மட்டுமல்லாது சர்வதேச அளவில் பெரும் போராட்டங்களுக்கு வழி வகுத்தது. இதற்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டன.

சியாட்டில் மத்திய நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் ராபர்ட், டிரம்பின் உத்தரவுக்கு நாடு முழுவதும் தடை விதித்தார். இதை டிரம்ப் கடுமையாக சாடினார்.

இதற்கிடையே பயணத் தடை விதிக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் இருந்து ஈராக்கை விலக்க வேண்டும் என்று டிரம்ப் நிர்வாகத்துக்கு உள்நாட்டில் கோரிக்கை வலுத்தது.

இந்த நிலையில் டிரம்ப், கடந்த சில தினங்களுக்கு முன் புதிய பயண தடை உத்தரவு ஒன்றில் கையெழுத்திட்டார்.



இந்த பயண தடை ஆணையில் ஈராக் தப்பியது. முதலில் தடை விதிக்கப்பட்ட பிற 6 நாடுகளும் தடை பட்டியலில் தொடர்கின்றன. இந்த புதிய தடை உத்தரவு, எதிர்வரும் 16-ந் தேதி அமுலுக்கு வருகிறது. குடியுரிமை பெற்றவர்கள் (கிரீன்கார்டுதாரர்கள்), செல்லத்தக்க விசா வைத்திருப்பவர்களுக்கு இந்த பயண தடையில் இருந்து விலக்கு கிடைத்துள்ளது.

இருந்தபோதிலும் டிரம்பின் புதிய பயண தடை உத்தரவுக்கு எதிராக அமெரிக்காவில் பல்வேறு மாகாணங்கள் போர்க்கொடி தூக்கி உள்ளன. நீதிமன்றங்களிலும் வழக்குகள் தொடரப்படுகின்றன.

டிரம்பின் புதிய பயண தடை உத்தரவுக்கு சியாட்டில் நீதிமன்றம் தடை விதிக்க மறுத்திருப்பது, அமெரிக்க அரசு க்கு சாதகமாக அமைந்துள்ளது.

## தமஸ்கஸ் தாக்குதலில் 59 பேர் பலி



சிரியாவின் தலைநகரான தமஸ்கஸ் பகுதியில் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் ஈராக்கை சேர்ந்த 47 பக்தர்களும் 12 சிரியாவை சேர்ந்த அரச வீரர்களும் உயிரிழந்தனர். ஒரு வெடிகுண்டு பேருந்திலும் மற்றொரு வெடிகுண்டினை தற்கொலை படையை சேர்ந்தவர் வெடிக்க செய்ததாகவும் ஆய்வு மைய தலைவர் ரமி அப்துல் ரகுமான் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலானோர் இந்த தாக்குதலில் காயமுற்றிருப்பதாகவும் அவர்களில் பலர் தீவிர காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சிரிய நாட்டு செய்திகளின் படி இரட்டை வெடிகுண்டு தாக்குதலில் 40க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகவும் 120 பேர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் வெடிகுண்டு வெடித்ததும் மக்கள் கூடியதைத் தொடர்ந்து இரண்டாவது வெடிகுண்டு வெடிக்க செய்யப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தமஸ்கஸ் தாக்குதலுக்கு சிரிய நாட்டு வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## மொசூல் சிறை அருகே 500 பேரின் பிணக்குழி



ஈராக்கின் மிகப் பெரிய இரண்டாவது நகரமான மொசூல் கடந்த 2014-ம் ஆண்டு ஐ.எஸ். தீவிரவாதிகளால் கைப்பற்றப் பட்டது. அதை அமெரிக்க கூட்டு படையின் உதவியுடன் ஈராக் இராணுவம் சமீபத்தில் கைப்பற்றியது.

மொசூல் அருகே படோஸ் என்ற இடத்தில் மத்திய சிறைச் சாலை உள்ளது. அதன் அருகே ஒரே இடத்தில் பலர் புதைக்கப்பட்ட மிகப் பெரிய பிணக்குழி கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் 500 பேர் கொன்று புதைக்கப்பட்டுள்ளனர். 2014-ம் ஆண்டு மொசூல் பகுதியை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். அப்போது படோஸ் சிறையில் 1500 பேர் அடைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரையும் லொரிகளில் ஏற்றிய தீவிரவாதிகள் 2 கி.மீட்டர் தொலைவில் உள்ள மலை பள்ளத்தாக்கு பகுதிக்கு கொண்டு சென்றனர். அங்கு ஷியா பிரிவினரை மட்டும் தனியாக பிரித்து அவர்களை ஓடவிட்டும் கைகளை கட்டி தலையிலும் முதுகிலும் சுட்டுக் கொன்றனர்.

பின்னர் அவர்கள் அனைவரும் ஒரே குழியில் போட்டு புதைக்கப்பட்டனர் என்று ஷியா பிரிவினரின் ஹ ஷத் கல்-ஷாபி படை பிரிவினர் தெரிவித்துள்ளனர். இத்தகவலை ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து தப்பியவர்களிடம் இருந்து தெரியவந்ததாக கூறினார்.

## மத அவமதிப்புக்காக இரு பௌத்தர்களுக்கு பிரம்படி



முஸ்லிம் நாடான இந்தோனேசியாவில் 'ஷரிபர்' எனப்படும் இஸ்லாமிய சட்டம் கடை பிடிக்கப்படுகிறது. மது குடித்தல், சூதாட்டம், கற்பழிப்பு, ஓரினச்சேர்க்கை உள்ளிட்டவை குற்றமாக கருதப்படுகிறது.

மேற்கண்ட குற்றங்களில் ஈடுபடும் முஸ்லிம்கள் பொதுமக்கள் முன்னிலையில் பிரம்பு அடி மூலம் தண்டிக்கப்படுகிறார்கள்.

ஆனால் முதன் முறையாக ஆக் மாகாணத்தில் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அத்தகைய தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இஸ்லாமிய சட்டத்தை மீறியதாக ஜந்தோ நகரை சேர்ந்த ஆலம் பின் அகிம் (60) ஆகிய 2 பேர் பொதுமக்கள் முன்னிலையில் பிரம்பு அடி தண்டனை பெற்றனர்.

இதற்கு முன்பு முஸ்லிம்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட இத்தண்டனை 2015-ம் ஆண்டு முதல் ஆக் மாகாணத்தில் வாழும் அனைத்து மதத்தினருக்கும் வழங்கப்படுகிறது. இச்ச ட்டம் அனைவருக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளதே அதற்கு காரணமாகும்.

# ஐ.நா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சமாதானப் பேரவையின் தலைவருமான ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

அதேநேரம், இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்று இத்தீர்மானத்தில் வழங்கப்பட்டிருக்கும் இரண்டுவருட கால அவகாசத்தை அரசு உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இலங்கை விவகாரம் தொடர்பில் இலங்கை அரசின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணங்க, 2017 மார்ச்சில் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது இலங்கை அரசானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் அதுவரைக் காலமும் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

எனினும், இந்நடவடிக்கைகள் இன்னும் பூரணமாக்கப்படாதமையினால் தமக்கு கால அவகாசத்தை ஐ.நா. வழங்க வேண்டும் என்று இம்முறை இடம்பெற்ற 34 ஆவது மனித உரிமைகள் கூட்டத்தொடரின்போது கொழும்பு அரசு சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், இலங்கை தொடர்பில் எதிர்வரும் 23 ஆம் திகதி அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவால் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தில் அரசுக்கு கடுமையான அழுத்தங்கள் விடுக்கப்படும்; என அரசியல் விமர்சகர்களால் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், இத்தீர்மானத்தில் கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு விசேடமாக வலியுறுத்தப்பட்டிருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

எனவே, இதுவிவகாரம் தொடர்பில் நவமணிக்கு விளக்கமளிக்கையிலேயே ஜெஹான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார். அதாவது, கடந்த அரசை விட இந்த அரசின் மீது ஐ.நா. மட்டுமன்றி ஒட்டுமொத்த சர்வதேசமும் மிகுந்த நம்பிக்கைக் கொண்டுள்ளதை எம்மால் அவதானிக்கக் கூடியவாறு இருந்தது.

யுத்தக் காலத் தவறுகளை சரிசெய்துக் கொள்ள இந்த அரசுக்கு சற்று கால அவகாசம் செல்கின்றது எனும் குறையைத் தவிர வேறு எந்தக் குறையையும் அவர்கள் இலங்கை அரசு மீது காணவில்லை என்பதே உண்மையாகும். அதேநேரம், அப்பிழைகளை சரிசெய்வது அவ்வளவு எளிதானக் காரியமல்ல என்பதையும் சர்வதேசம் உணர்ந்துள்ளது.

இந்த அரசானது சிறுபான்மையினத்தை பாதிக்காத அரசு எனும் வகையில், இதன் ஊடாகத் தான் யுத்தக்காலத் தவறுகளை சரிசெய்ய முடியும் என ஐ.நா. நம்புகின்றது. அதற்கு அமைவாகவும், இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்றும் தான் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கானத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது.

இது இலங்கைக்கு ஒருபோதும் பாதிப்பாக அமையாது என்பதே எமது நிலைப்பாடாகும். ஏனெனில் இதில் இலங்கைக்கு நிபந்தனைகளுடன் கூடிய இரண்டு வருடக் கால அவகாசம் வழங்கப்படவுள்ளதுடன், அதற்கான ஒத்துழைப்புக்களை சர்வதேசத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றபடி இதில் கலப்பு நீதிமன்ற விசாரணை தொடர்பில் எல்லாம் வலியுறுத்தப்பட்டிருக்க மாட்டாது என்றே தெரியவந்துள்ளது.

ஆகவே, இதனை இலங்கை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏற்கனவே, இரண்டு வருடங்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டள்ள நிலையிலேயே தற்போது மீண்டும் 2 வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதிலும், ஐ.நா.வின் கோரிக்கைகளை இலங்கை அரசு ஏற்காவிடின் அது சர்வதேச ரீதியாக இலங்கைக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்றார்.

# ஹசனலி மீதான...

(04ஆம் பக்க தொடர்...)

இத்தகைய எந்த முறைமைகளும் நியமங்களும் தோற்றுவிக்கப்படாத நிலையில் ஹஸனலியை அப்பதவியை ஏற்றுக்கொள்ளச் சொல்வது முறையான ஒன்றெனக் கருதமுடியாது. இது தலைவர் தனக்கு அடுத்த பதவியான தவிசாளர் பதவியை வழங்கியும் ஹஸனலி ஏற்காது மறுத்துவிட்டார் என்ற கதையாடலை மக்கள் மயப்படுத்தி ஏற்கெனவே ஹஸனலிக்கு தலைமைத்துவத்தால் வழங்கப்பட்டிருந்த முற்கட்டிக்காட்டிய இரண்டு விடயங்களின் உறுதிமொழிகளையும் அவர் நிறைவேற்றிக் கொடுக்காதிருந்தமையை சூசகமாக மறைக்கச் செய்யும் முயற்சியாகும்.

ஹஸனலி தலைவரின் சொல்லைக் கேளாத ஒருவர் போன்ற ஒரு தோற்றத்தை சமூகத்தின் மத்தியில் அதிலும் குறிப்பாக அம்பாரை மாவட்ட மக்கள் மத்தியில் ஏற்படுத்த எடுத்த ஒரு முயற்சியாக இதனைப் பார்க்கலாம். எது எப்படி இருந்தாலும் ஹஸனலிக்கு மு.காவும் அதன் தலைமைத்துவமும் செய்திருப்பது பெரும் அநீதி என்பதை மக்கள் மத்தியில் பரவச் செய்திருக்கின்றது.இதனுடைய சாதக, பாதகங்கள் உடனடியாக வெளிப்படும் ஒன்றல்ல. மாறாக ஒரு தேர்தலின் போதுதான் இது வெளிப்படும்.தேர்தல் இன்று உடனடியாக வரும் சாத்தியக்கூறு இல்லை.மாறாக தேர்தல் ஒன்றை நாம் சந்திக்க இன்னும் சில மாதங்களாவது குறைந்தபட்சம் காத்திருக்க வேண்டும்.அதுவரையான காலப்பகுதியில் ஹஸனலியின் பக்கம் வீசுகின்ற அனுதாப அலைகள் படிப்படியாக குறைந்து செல்லும் என்ற ஒரு கணக்கை தலைவர் போட்டுவைத்திருக்கவும் கூடும்.

தலைமைத்துவத்தின் கணக்குக்கு மக்களின் பதில் கணக்கு இசைவாக அமையுமா முரணாக அமையுமா என்பது இன்றைய நிலையில் அறுதியிட்டுக் கூற முடியாத போதும் ஹஸனலியின் மக்கள் மன்றின் முன்னாள் செய்யப்படுகின்ற முறையிடு தொடரும்பட்சத்தில் அதன் பின்னாலும் மக்கள் திரட்சி கூடுவது சாத்தியப்படும் என்பதில் சந்தேகமில்லை. இதனை ஒரு சாதாரண நிகழ்வாகப் பார்ப்பது விவேகம் நிறைந்த அரசியல் அணுகுமுறை அல்ல வென்றே குறிப்பிட வேண்டும்.

எது எவ்வாறிருந்தாலும் தலைமைத்துவத்தின் மீது கடந்த 11.02.2017 இல் நடைபெற்ற கட்டாய உயர்பீடக் கூட்டம் வரை ஹஸனலி நம்பிக்கை இழந்திருக்கவில்லை என்பதை அவரது செயற்பாடுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. இதனை இன்னும் உறுதிப்படுத்துவதாகவே அன்றைய நிகழ்வில் தலைமைத்துவப் பதவிக்கு ரவூப் ஹக்கீமின் பெயரை ஹஸனலியே முன்மொழிந்திருப்பது எடுத்துக்காட்டுகின்றது.அதேநேரம் ஹஸனலிக்கு தலைவர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்தும் அநீதி இழைத்தார் என்பதை அண்மையில் ஹக்கீம் ஹஸனலி வேதனையில் இருக்கிறார்.அவர் கூட்டம் நடத்துவதை நாங்கள் ஆமோதிக்கிறோம் என்று தெரிவித்திருப்பதிலிருந்து புரிந்துகொள்ளமுடிகின்றது.

மு.காவின் முன்னாள் செயலாளர் ஹஸனலியின் இன்றைய மக்கள் நீதிமன்றின் முன் முறையிடும் செயற்பாட்டை கட்சிக்கு எதிரானதென்றோ பதவியில் ஆசைப்பட்டோ முன்வைக்கின்றார் என நாம் நோக்காது கிழக்குக்கும் ஓர் அரசியல் பலம் இருக்க வேண்டும் என்கின்ற அவசியமான எண்ணத்தின் வெளிப்பாடென்று நாம் புரிந்துகொள்வதில்தான் இந்த முன்னெடுப்பின் வெற்றி தங்கியிருக்கின்றது.

# கிண்ணியாவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வந்த கிண்ணியா, 4ஆம் வட்டாரத்தைச் பாத்திமா சனா (06) என்ற சிறுமி மற்றும் கிண்ணியா மாஞ்சோலைச்சேனையைச் சேர்ந்த பாத்திமா நிஸ்வானா (38) என்ற நான்கு பிள்ளைகளின் தாயுமே இவ்வாறு மரணமானவராவார்.

இவருடன் கிண்ணியாவில் டெங்கு காய்ச்சலினால் 8 பேர் பலியாகியுள்ளனர். இதில் மூன்று ஆண்களும் ஐந்து பெண்களுமாவார். இவர்களில் மூவர் மாணவர்களாகும். ஜனவரி 1ஆம் திகதியில் இருந்து மார்ச் 11 ஆம் திகதி வரையும் 988 பேர் டெங்கு தாக்கத்திற்குள்ளாகி கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள் என்றும் சிகிச்சைக்காக வருகின்றவர்களின் தொகை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு வருவதாகவும் பைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை டெங்கு காய்ச்சலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் பொருட்டு தீவிர பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு கின்றது. கிண்ணியாவில் உள்ள சகல சமூக அமைப்புக்களும் பல்வேறு தியாகங்களைச் செய்து வருகின்றன. கடற்படையினர், இராணுவத்தினரும் இதில் இணைந்துள்ளனர். தொடர்ந்து 12 நாட்களாக பல்வேறு சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு இவர்கள் வருகின்றனர். கிண்ணியா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்த தட்டுப்பாட்டை இயன்றளவு நீக்கும் பொருட்டு, இளைஞர்கள் ஒவ்வொரு நாளும் இரத்தத்தை தானம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கிண்ணியா தள வைத்தியசாலையில், இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒரு கட்டிலில் இருவர் இருந்து சிகிச்சை பெற்று வருவதோடு, தரையிலும் படுத்தும் சிகிச்சை பெற்று வருகின்றன். அத்தோடு மேலதிக சிகிச்சைக்காக கந்தளாய் மூதூர் வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

# ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜேவிபியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டகல இது தொடர்பில் கூறுகையில்;

தகவல் அறியும் சட்டம் நடைமுறைக்கு வந்து ஒரு மாதம் கடந்துவிட்டது.இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்கள் தகவல்களை பெற வேண்டும்.இது மக்களின் சட்டம்.அந்த உரிமையை இழந்துவிடக்கூடாது.மக்களின் பணத்துக்கு என்ன நடக்கின்றது;இந்தப் பணத்தை அரசியல்வாதிகள் திருடி இருக்கின்றார்களா என்று மக்கள் அறிய வேண்டும்.

ஜனாதிபதி,அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள்,மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தங்களது சொத்துக்களின் விபரங்களை வெளியிட வேண்டும். தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி தனது சொத்து விபரங்கள் கோரப்படுகின்றன என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.உண்மையில்,இது நல்ல கோரிக்கை.இந்தக் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி உடனடியாக அவரது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்.பஸாரில் சிறிய வாகனம் ஒன்றை வைத்துக்கொண்டு தொழில் செய்யும் ஒருவர் திடீரென பிரதேச சபை உறுப்பினராக ஆகின்றார்.ஐந்து வருட முடிவில் பிராடோ வாகனம் வாங்கி ஓட்டுகின்றார்.45ஆயிரம் ஏக்கரில் தென்னந்தோட்டம் வாங்குகிறார்.இது எப்படிச் சாத்தியம்?.இதற்குப் பின்னால் ஊழல்,மோசடி இருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

இவற்றையெல்லாம் அறியும் உரிமை மக்களுக்கு உண்டு.அவர்கள் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்.இல்லையென்றால் மக்கள் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக அறிவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.என்றார்.

# பாதிப்பான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான பரிந்துரைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தோடு, ஐ.நா. தீர்மானத்தை செயற்படுத்துமாறு எத்தரப்பினராலும் அரசை பலவந்தப்படுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நாவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் அது நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது இருந்தால் மட்டுமே ஜனாதிபதி அதனை நிறைவேற்றுவார்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை நாட்டுக்கு பாதிப்பான எக்காரியத்தையும் மேற்கொள்ள தயாராக இல்லை என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியும்.

மேலும், தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அவர்களின் அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக இவ்வாறான நிகழ்ச்சி நிரல்களை செயற்படுத்த முயற்சிக்கிறார்கள். எனவே, தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று யாராலும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என்றார்.

# காத்தான்குடியில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மார்க்கப் பிரச்சாரமாநாட்டினை நடாத்துவதற்கானசகலஅனுமதிகளையும் உரியமுறையில் பெற்றிருந்ததாகவும் அறியமுடிகின்றது.

இதேவேளைதேசியதௌஹீத் ஜமாஅத்தினரால் மாநாடுநடாத்தஏற்பாடுசெய்யப்பட்டிருந்தகுறித்த இடமானது(அலியார் சந்தி) என்பதுஅப்தூர் றவூப் மௌலவியின் ஆதவாளர்கள் அதிகம் வாழும் பகுதிஎன்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

மேலும் குறிப்பிட்டபடிமாலை 5.30 மணியளவில் தேசியதௌஹீத் ஜமாஅத்தினரின் மாநாடு ஆரம்பமாகிசற்றுநேரத்தின் பின் மாநாட்டினைகுழப்பும் நோக்குடன் இனந்தெரியாதவர்கள் பட்டாசுகளைகொழுத்திவீசிமாநாட்டினைகுழப்பிதடைகளைஏற்படுத்தியதாகவும் அதன் பின்னர் மாநாடுதடைப்பட்டதுடன் அங்குபதட்டமானசூழ்நிலைஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இருதரப்பினரும் குழுக்களாகபிரிந்துவாய்ப்பேச்சும்,கல்லெறியும்,வாள் வெட்டுமெனதங்களுக்குள் மோதிக் கொண்டதாகவும் தகவல் அறிந்த பொலிசார் ஸ்தளத்துக்குவிரைந்துநிலைமையினைகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் தெரிவித்தனர்.

மேலும் கல்வீச்சுமற்றும் வாள் வெட்டுக்கு இலக்காகிபடுகாயமடைந்தஅப்தூர் றவூப் மௌலவியின் ஆதரவாளர் எனக் கருதப்படும் அபூபக்கர் முஹம்மது முஸப்பிர் என்பவர் மட்டக்களப்புபோதனாவைத்தியசாலையில் அவசரபரிவில் அனுமதிக்கப்பட்டுதற்போதுசிகிச்சைபெற்றுவருவதுடன் படுகாயமடைந்தஅபூசாலி பஹ்மிகாத்தான்குடிதளவைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம் பெற்றவேளைபொலிசாரினால் இருவர்கைதுசெய்யப்பட்டுதடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன் படுகாயமடைந்துவைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருபவர்கள் கொடுத்தவாக்குமூலத்தின் அடிப்படையில் இதுவரை 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் கைதுசெய்யப்படலாம் என்றும் தெரிவருகின்றது.

இதேவேளைகுறித்தஅலியார் சந்தியில் பெற்றோல் குண்டுகள் 2 மீட்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் பொலிசார் பல்வேறுகோணத்திலும் தீவிரவிசாரனைகளைமேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தனர்.

# நளீமிய்யா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இன்று (13) 10 மணிக்கு பேருவளை சீனன் கோட்டை பாசியா பெரிய பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

பல தசாப்த காலமாக கல்வி, ஆன்மீக, சமூகப்பணிகள் செய்த இவரது மறைவு குறித்த ஜாமிஆ நளீமிய்யா கலாபீட நிர்வாக சபைத்தலைவர் யாகூத் நளீம், கலாபீட பணிப்பாளர்கள் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி ஆகியோர் அனுதாபங்களை தெரிவித்தனர்.

இவரின் மறைவு ஜாமியா நளீமிய்யா கலாபீடம் மாத்திரமின்றி முஸ்லிம் சமூகத்திற்கு பேரிழப்பாகும்.

சூடான் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ பட்டம் பெற்றுள்ள இவர் சிறந்த கவிஞரும் நூலாசிரியருமாவார். மிகச்சிறந்த நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஜி.பீ.எஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மீனவர்களை குறுகிய காலத்தில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் ஒருபோதும் அவர்களின் படகுகள் விடுவிக்கப்படமாட்டாது எனவும் அவர் மீண்டும் சுட்டிக்காட்டினார்.

# இந்திய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிலையிலேயே இவ்வாறு நேர்ந்தது.

அத்தோடு, தமிழ் நாட்டு மீனவர்களின் இந்த கலந்துகொள்ளாமையானது தமக்கு வருத்தமளிக்கின்றது என்று கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜய குணரத்னவினால் தெரிவிக்கவும்பட்டது.

கச்சத்தீவு புனித அந்தோணியார் திருவிழா திருப்பலி பூஜையில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து 6 ஆயிரத்து 600 பக்தர்கள் இம்முறை கச்சதீவுக்கு சென்றிருந்தனர். திருவிழாவின் நேற்றைய தின பூஜைகள், யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரத்தினம் யோசவதாஸ் தலைமையில் நடைபெற்றதுடன் அருட்தந்தை நேசன், அருட்தந்தை ஜோஜின், அருட்தந்தை டேவிட், அருட்தந்தை மங்கலம் ஆகியோரினால் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட அருட்தந்தையர் மற்றும் அருட் சகோதரிகள் பங்கேற்றிருந்தனர். மேற்படித் திருவிழா ஏற்பாடுகளை நெடுந்தீவு பங்குத்தந்தை ஜெயரஞ்சன் மேட்கொண்டிருந்தார்.

மேலும், நேற்றைய தின திருப்பலி நிகழ்வில் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுனரத்ன, யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மகேஷ் சேனாரத்ன, யாழ். அரச அதிபர் வேதநாயகம் உள்ளிட்ட பிரகமுகர்களும் கலந்து கொண்டனர் என்பதுடன் திருவிழாவிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து சேவைகளை இலங்கை கடற்படையினரும் சிவில் பாதுகாப்பை பொலிஸாரும் வழங்கியிருந்தனர்.

பக்தர்களுக்கான உதவு, குடிநீர் மற்றும் அடிப்படை வசதி, மருத்துவ சேவை என அனைத்தையும் பாதுகாப்புத் தரப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். அத்தோடு, நேற்று மற்றும் நேற்று முன்தினம் ஆகிய இரண்டு நாட்களும் கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்ள இலங்கையில் நெடுந்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், நீர்கொழும்பு உள்ளிட்ட பகுதிகளின் மீனவர்களும் தெற்கின் சிங்கள மக்களும் கலந்துகொண்டனர்.

ஆனால், கடந்த திங்களன்று இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையைக் கண்டிக்கும் வகையில் முதன்முறையாக நேற்றைய தினம் கச்சத்தீவு ஆலயத்துக்கு எந்தவொரு இந்திய மீனவர்களும் வருகைத் தரவில்லை. இம்முறை இந்தியாவில் இருந்து 5015 ஆயிரம் பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் இராமேஸ்வரம் பகுதியில் இருந்து 2000 ஆயிரம் பக்தர்கள் பங்குகொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீனவர்கள் இந்த புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

மேற்படித் துப்பாக்கி சூட்டு பிரயோகமானது இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கும் தமிழ் நாட்டு மீனவர்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையிலேயே கச்சத்தீவு திருவிழாவைப் புறக்கணிததனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

யுத்த காலத்தில் எமது படையினர் எவ்வளவு தூரம் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டார்கள் என்று இந்த உலகத்துக்குத் தெரியாது.தெரிந்தாலும் தெரியாததுபோல் நடிக்கிறது.திட்டமிட்ட அடிப்படையில் படையினரை பழிவாங்குவதற்கு இந்த சர்வதேசம் புலி ஆதரவாளர்களுடன்-புலம்பெயர் தமிழர்களுடன் கைகோத்துச் செயற்படுகின்றது.

போர்க் குற்றச்ச்சாட்டுக்களை சுமத்தி படையினரைத் தண்டிப்பதற்கு சர்வதேசம் முற்படுகிறது.யுத்த காலத்தில் எமது படையினர் தமிழர்களை காப்பாற்றினார்கள்;உணவு வழங்கினார்கள்.மக்களையும் பயங்கரவாதிகளையும் இரண்டாகப் பிரித்து பயங்கரவாதிகள்மீது மாத்திரம் படையினர் தாக்குதல் நடத்தினர்.மக்களை புலிகளின் பிடியில் இருந்து காப்பாற்றி பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தனர்.எமது படையினர் புலிகளிடம் சிக்கினால் புலிகள் அதிக சித்திரவதை செய்தே விடுதலை செய்வர். ஆனால்,எம்மிடம் புலிகள் சிக்கினால் அவர்களுக்கு நன்றாக சாப்பிடக் கொடுத்து எதுவித கொடுமையும் செய்யாமல் நீதிமன்றத்தில் ஒப்படைப்போம்.இப்படித்தான் நாம் மனித உரிமைகளை பாதுகாத்தோம். ஆனால்,புலிகள் அப்பாவி மக்களையெல்லாம் கொன்றுகுவித்தனர்.அப்பாவி முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் கொலை செய்தனர்.

இவைபற்றி இந்த சர்வதேசத்துக்கு அக்கறை இல்லை.காத்தான்குடி பள்ளிவாசலில் அப்பாவி முஸ்லிம்கள் தொழுதுகொண்டிருக்கும்போது அவர்களை புலிகள் சுட்டுக்கொன்றனர்.இது இந்த சர்வதேசத்துக்கு தெரியவில்லையா?ஏன் இதை அவர்கள் கண்டிப்பதில்லை கண்டுகொள்வதில்லை?சர்வதேசம் திட்டமிட்ட அடிப்படையில் எமது படையினருக்கு எதிராகக் காய் நகர்த்துகின்றது என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

எமது படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபாடிவில்லை என்பதையும் புலிகள்தான் அவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டனர் என்பதையும் நாம் சர்வதேசத்துக்கு ஆதாரங்களுடன் முன்வைப்போம். என்றார்.

# பிரதி பொலிஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எந்தப் பிரிவினைவாதத்துக்கு எதிராக எமது படையினர் போராடினார்களோ அந்தப் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும்-அதற்கு அடிபணியும் ஓர் அரசுதான் நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த அரசு.எமது படையினர் ஆயிரக்கணக்கில் உயிர்களை தியாகம் செய்து புலிகளிடமிருந்து மீட்டெடுத்த இந்த நாட்டை இந்த மிக இலகுவாக மீண்டும் புலிகளிடமே ஒப்படைக்கப் பாக்கின்றது.நாட்டில் மூன்றில் ஒரு பகுதி நிலத்தை புலிகள் 30 வருடங்களாக கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.அந்த இடங்களை சொற்ப காலத்துக்குள் புலி ஆதரவாளர்களிடம் கொடுப்பதற்கு அரசு திட்டமிடுகின்றது. நாட்டை மீட்டெடுத்த படையினரை இந்த அரசு அவமதிக்கின்றது.அவர்களுக்கு எதிராக ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி படையினரைக் காட்டிக் கொடுத்துவிட்டது.இந்த முறை இடம்பெறும் ஜெனீவா மாநாட்டிலாவது அந்தப் பிரேரணையை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.அதை மேலும் பலப்படுத்தும் வேலையையே செய்கிறது.புலிகளின் இலக்கான தமிழீழத்தை அமைப்பதற்கு ஏதுவாக காணி.பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.பிரதி பொலிஸ்மா அதிபர்களின் கீழ் இந்த பொலிஸ் அதிகாரம் வழங்கப்படும்.

பொலிஸ்மா அதிபர் அதிகாரமற்ற பேரளவிலான ஓர் அதிபராக மாற்றப்படுவார். அரசின் இந்த செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்கு நாம் இன்றே கள்மிங்க வேண்டும்.-என்றார்.

# பேருவளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கலந்துகொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இந்த மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்தார்.

கலாபீட நிர்வாக சபைத்தலைவர் யாகூத் நளீம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 122 பட்டதாரிகளுக்கு நளீமி பட்டம் வழங்கப்பட்டது. கலாபீட பணிப்பாளர்கள் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.ஸி அகார் முஹம்மத் (நளீமி) ஆகியோரும் இங்கு பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது,

உத்தேச புதிய அரசியலமைப்பு நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையுமென்றும் இந்த அரசியலமைப்புக்குழுவில் எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் பங்கு கொண்டு இதனைத் தயாரித்திருக்கிறார்கள். காலம் சென்ற எஸ்.டபிள்யு.யு.ஆர்.டி பண்டாரநாயக்க ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோர் காலத்தில் அரசியலமைப்பு மாற்றத்திற்கு தமிழ்க்கட்சிகள் எதிர்த்த வரலாறும் உண்டு.

ஆனால் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் கட்சிகள் இந்த அரசியலமைப்புக்கு ஆதரவு தெரிவித்ததன் மூலம் இலங்கை அரசியல் வரலாற்றில் புதிய திருப்பமொன்று ஏற்பட்டுள்ளது. அத்தோடு மக்கள் விருப்பத்தை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் மக்களுக்கு வழங்காமல் அதனை ஒருபோதும் அமுல் செய்ய மாட்டோம்.

இலங்கையில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் முதலில் நாட்டு மக்களிடையே இன மத சமய பேதங்களை ஒழித்துக்கட்டி எல்லோரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

சர்வதேசத்தில் பொருளாதாரத்துறையில் வளர்ச்சி கண்டுள்ள மலேசியா, சிங்கப்பூர் நாடுகளை முன்மாதிரியாக காட்டிய அமைச்சர் கிரியெல்ல இலங்கைக்கு பின்னர் அந்த நாடுகள் சுதந்திரமடைந்த போது இன ஒற்றுமை விடா முயற்சியோடு செயல்பட்டமையினால் இந்த நாடுகளுக்கு முன்னர் சுதந்திரம் பெற்ற இலங்கையை விட முன்னேற்றம் கண்டுள்ளது. நாங்களோ இன சமய அரசியல் பேதங்களை வளர்த்துக் கொண்டு இந்த இலக்கை அடையமுடியாது தத்தளித்துகொண்டிருக்கிறோம்.

ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரினால் வழிநடத்தப்படுகின்ற இந்த நல்லிணக்க அரசாங்கம் பேதங்களை மறந்த ஒரு சமூகத்தை உருவாக்கி நாட்டை பொருளாதாரத்துறையில் முன்னேற்றுவதற்கான ஏற்பாடுகளை செயல்படுத்துகின்றன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் குறிப்பாக 30 வருட காலமாக இடம்பெற்ற சிவில் யுத்தம் எமது பொருளாதாரத்தின் வளர்ச்சியை தடை செய்தது மட்டுமல்லாமல் மக்களையும் பிரிவினைக்குள்ளாக்கியது. ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர் சர்வதேச நாடுகளில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சிக்கு ஆங்கில மொழியூட்டல் சிறந்த பிரதிபலனை நல்கியிருப்பதை கடந்த கால வரலாற்றின் மூலம் நாங்கள் அறிகின்றோம்.

எமது அண்மைய நாடான இந்தியாவிலே 130 கோடி சனத்தொகையும் கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட மொழிகளையும் பேசுகிறார்கள். இந்தியாவின் பல பிராந்தியங்களில் கிட்டத்தட்ட 40 வீதமானோர் ஆங்கிலத்தில் பேசுகின்றனர். அத்தோடு தமது தாய் மொழியையும் வளர்த்துக்கொள்கிறார்கள். இந்நிலை இலங்கையிலும் உருவாகவேண்டும். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழியை வளர்ப்பதில் அரசாங்கம் கரிசனை னாட்டி வருகிறது. அங்கிலத்தை ஒரு பொதுவான மொழியாக எல்லா இன மக்களும் சேர்ந்து கற்கும் போது அங்கு பல்வேற இன மாணவர்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளம் இடப்படுகிறது. தனத பள்ளி வாழ்க்கைகளை உதாரணம் காட்டி அமைச்சர் 1960 களில் தாம் ரோயல் கல்லூரி மாணவனாக இருந்தபோது அங்கு போதனா மொழி ஆங்கிலமாகவே இருந்தது. தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாக ஒரே வகுப்பில் கற்றோம். இதன் போது தாணகவே ட அங்க இன ஒற்றுமை பரஸ்பர புரிந்துணர்வு வளர்ந்தது.

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் ஸ்தாபகர் மர்ஹூம் நளீம் ஹாஜியாரை ஞாபகமூட்டி அவர் இந்த கலாபீடத்தை உருவாக்கி அன்னார் செய்துள்ள இந்தப்பணி சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும். அந்நேரத்தில் நாட்டினதும் சமூகத்தினதும் காலத்தின் தேவையாக உருவாக்கிய இக்கலாபீடத்தை வளர்த்துக் காப்பது இன்றைய சமூகத்தின் தலையாய கடமையாகும். 40 வருடத்திற்கு முன்னர் அன்னாரின் உள்ளத்தில் எழுந்து உருவாகி வளர்ச்சியடைந்துளன்ள இக்கலையகம் இன்னும் பலநூறு ஆண்டுகள் நிலைத்து கல்வி சமூக அன்மீக பணியை செய்ய வேண்டும் என்றும் இக்கலாபீடம் நாட்டின் ஒரு தேசிய சின்னமாக மிளிர வேண்டும். இப்படியான ஒரு அறிய சந்தர்ப்த்தை எனகளிப்பதில் முன்னின்றவர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார். அவரின் அழைப்பினை என்னால் ஒருபோதும் மறுக்க முடியாது. கருமவீரரான பல்லின ஒற்றுமைக்காக பாலமாக இருப்பவருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மீண்டம் அரசியலில் கதித்து கட்டாயமாக பாராளுமன்றம் பிரவேசிக்க வேண்டும் இது அனைவரதும் விருப்பமாகும். என்றும் அமைச்சர் கிரியல்ல கூறினார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



**இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர்:**

## சாதனை படைத்தார் ஹேரத் வங்கத்தை வென்றது இலங்கை

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் ரங்கன ஹேரத்தின் உலக சாதனையுடன் இலங்கை அணி 259 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, இளம் வீரர் குசல் மெண்டிஸின் சதத்துடன் முதல் இன்னிங்ஸில் 494 ஓட்டங்களையும், பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 312 ஓட்டங்களையும் எடுத்தது. இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி உபுல் தரங்கவின் சதத்தின் மூலம் 6 விக்கெட் இழப்பிற்கு 274 ஓட்டங்கள் எடுத்த போது டிக்ளேயார் செய்தது.

இதனால் பங்களாதேஷ் அணி 457 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது. ஆனால் இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சை தாக்குபிடிக்க முடியாமல் பங்களாதேஷ் வீரர்கள் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி தலைவர் ரங்கன ஹேரத் 6 விக்கட்டுகளை கைப்பற்றியதுடன், அதிகூடிய விக்கட்டுகளை கைப்பற்றிய இடதுகை சுழல் பந்துவீச்சாளர் என்ற சாதனையையும் நிகழ்த்தியுள்ளார். தனது 79 டெஸ்ட் போட்டியில் களம் கண்ட ஹேரத், இரண்டு இன்னிங்ஸிலும் 9 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதன் மூலம் மொத்தமாக 366 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ள ஹேரத், இடக்கை சுழற்பந்துவீச்சாளர் ஒருவர் பெற்ற அதிகபட்ச விக்கெட் எண்ணிக்கையாக தனது சாதனையை முத்திரை பதித்தார். இதற்கு முன்னதாக நியூசிலாந்து அணியின் இடக்கை சுழற்பந்து வீச்சாளர் டேனியல் வெட்டோரி 113 டெஸ்ட் போட்டிகளில் 362 விக்கெட்டுக்கள் வீழ்த்தியிருந்ததே இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ஒருவர் பெற்ற அதிகபட்ச விக்கெட் எண்ணிக்கையாக இருந்தது. அதை தற்போது ரங்கன ஹேரத் தகர்த்தியுள்ளார்.

போட்டியின் ஆட்டநாயகனாக குசல் மெண்டிஸ் தெரிவானார். இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி பி.சரவணமுத்து மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## 400 விக்கெட்டுகளே எனது அடுத்த இலக்கு

கிரிக்கெட் சாதனை புத்தகத்தில், இடக்கை சுழற்பந்துவீச்சாளர் ஒருவர் பெற்ற அதிகபட்ச விக்கெட் எண்ணிக்கையாக, தனது சாதனையை முத்திரை பதித்துள்ள, இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத், டெஸ்ட் அரங்கில் 400 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதே தனது அடுத்த இலக்கு என இலங்கை அணியின் தலைவர் ரங்கன ஹேரத் தெரிவித்தார். இச் சாதனை குறித்து ஹேரத் கூறுகையில், இது ஒரு மிகப்பெரிய சாதனை என்றே கூறுவேன். நான் இதுவரை 79 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி பெற்றுக்கொண்ட அடைவுமட்டம் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இலங்கை அணிக்காக எவ்வளவு காலம் விளையாடுவேன் என்று என்னால் கூறமுடியாது. ஆனால் டெஸ்ட் அரங்கில் 400 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதே எனது அடுத்த இலக்காகும். ஆனால், இந்த விக்கெட்டுக்களை வீழ்த்த எனக்கு ஆதரவு அளித்த ஒவ்வொருவருக்கும் நான் கட்டாயம் நன்றி சொல்லியாக வேண்டும் என கூறினார்.



கல்முனை கல்வி வலயத்திலுள்ள காரைதீவு இராம கிருஷ்ண மிசன் பெண்கள் பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டி பாடசாலை அதிபர் திரு.எஸ்.மணிமாறன் அவர்களின் தலைமையில் காரைதீவு கானகரெத்தினம் விளையாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வு மூன்று இல்லங்கள் தாகூர்மணி இல்லம் 175புள்ளிகள் (மஞ்சள்) பெற்று முதலிடத்தையும், சாரதாமணி இல்லம் 152 புள்ளிகளுடன்(பச்சை) 2ஆவது இடத்தையும், காதாம்பரி இல்லம் 140 புள்ளிகளுடன்(நீலம்) 3ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டன. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் திரு.தவராசா கலையரசன். கல்முனை வலயஉடற்பயிற்சிகல்வி அதிகாரி கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல். வைத்தியர்கள், பாடசாலை அதிபர்கள், அரச அதிகாரிகள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கு வெற்றிக்கிண்ணம் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. **(காரைதீவு நிருபர்)**

## வீராங்கனைகளுக்கு நைக் ஹிஜாப் அறிமுகம்



முஸ்லிம் விளையாட்டு வீராங்கனைக்களுக்கான சர்வதேச தரத்திலான ஹிஜாப் ஆடையை நைக் நிறுவனம் அடுத்த வருடம் அறிமுகப்படுத்தவுள்ளது. விளையாட்டு வீராங்கனைகளுக்கான இந்த ஹிஜாப் ஆடை, பாரம்பரிய இஸ்லாமிய நடைமுறையின்படி தலைமூடிய வடிவில் உருவாக்கப்பட்டதுடன் விளையாட்டு வீராங்கனைகளுக்கு சவுகரியமான வடிவிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நைக் தரப்பில், குறைந்த அளவிலான எடையுடன் இந்த ஆடை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆடைகள் அடுத்த வருடம் சந்தைகளிலுள்ள அலுமாரியை அலங்கரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

## ஆஸி. அணியில் கம்மின்ஸ் இணைவு

இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரிலிருந்து காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக விலகியுள்ள அவுஸ்ரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டாக்கிற்கு பதிலாக, மற்றுமொரு வேகப்பந்து வீச்சாளரான பேட் கம்மின்ஸ் அணியில் இணைத்துக்கொள்ளப் பட்டுள்ளார்.

இந்திய அணியை சொந்த மண்ணில் வீழ்த்த, மிட்செல் ஸ்டார்க்கை கொண்டு அவுஸ்ரேலிய அணி வகுத்திருந்த திட்டங்கள் தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், அந்த இடத்தை பேட் கம்மின்ஸ் மீள் நிரப்புவாரா என்ற கேள்வி, ரசிகர்கள் மத்தியில் தற்போது எழுந்துள்ளது.

மிட்செல் ஸ்டார்க்கின் இழப்பு அவுஸ்ரேலிய அணிக்கு கடும் பின்னடைவை ஏற்படுத்தும் என முன்னாள் வீரர்களால் எதிர்வு கூறப்படுகின்ற நிலையில், இவ் அனைத்தும் தவிடுபொடியாக்க தேர்வுக்குழு தலைவர் டிரெவோர் ஹென்ஸ் பேட் கும்மின்சை அணியில் சேர்த்துள்ளார். சொந்த மண்ணில் ஆதிக்கம் செலுத்தும் இந்தியா, பேட் கம்மின்ஸின் வேகத்துக்கு வழிவிடுமா என பொறுத்திருந்து பார்ப்போம்.

கம்மின்ஸ், இதுவரை ஒரே ஒரு டெஸ்டில் மட்டும் விளையாடி உள்ளார். கடந்த 2011ல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் விளையாடினார். இதில் இரண்டாவது இன்னிங்சில் 6 விக்கெட் கைப்பற்றி வெற்றிக்கு வித்திட்டார். இந்நிலையில், இந்திய அணிக்கெதிரான எஞ்சிய இரு டெஸ்ட் போட்டிகளில் இருந்தும், அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரரான மிட்செல் மார்ஷ் விலகியுள்ளார். தோள் பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் விலகியுள்ளார். அவருக்கு பதிலாக மார்கஸ் ஸ்டோனிஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஆசிய தடகளப் போட்டிகள் ரஞ்சியிலிருந்து இடமாற்றம்

### போட்டிகள் நடைபெறுவதில் சிக்கல்

பீ.எப்.எம் றிஷாட்

இந்தியாவின் ரஞ்சியில் எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதியிலிருந்து 4ஆம் திகதி வரை நடைபெறவிருந்த 22ஆவது ஆசிய தடகளப் போட்டிகளை திட்டமிட்டபடி நடத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த போட்டித் தொடரை நடத்துவதற்கு தேவையான வசதிகளை ரஞ்சி மாநில அரசு வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளமை இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இப்போட்டித் தொடரை இந்தியாவின் மற்றுமொரு மாநிலமான ஒடிசாவில் நடத்துவதற்கான ஆரம்ப கட்ட வேலைகளை இந்திய தடகள சம்மேளனம் ஆரம்பித்துள்ளது.




இதன்படி குறித்த போட்டித் தொடர் நடைபெறும் தினம் பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். ஆனால் இதுவரை எந்தவொரு உத்தியோக பூர்வ அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

45 ஆசிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 800 வீர, வீராங்கனைகள் பங்கேற்கும் 22ஆவது ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் ஒடிசா மாநிலத்தில் உள்ள காலிங்கா விளையாட்டு மைதானத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், இங்கிலாந்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுளள் உலக மெய்வல்லுனர் போட்டிகளுக்கு முன்னதாக இப்போட்டித் தொடரை நடத்துவதற்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இம்முறை போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணியின் வீரர்கள், தற்போது தமது பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்றதுடன், இதற்கான தகுதிகாண் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பி

## 16 வயதிற்குட்பட்ட தெற்காசிய கால்பந்தாட்டம்: பலமிக்க ஜப்பானிடம் தோற்றது இலங்கை

பீ.எப்.எம் றிஷாட்



ஜப்பான் கால்பந்து சம்மேளனத்தால் ஏற்பாடு செய்துள்ள தெற்காசிய 16 வயதிற்கு உட்பட்ட 4 நாடுகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட கிண்ணத்தில், பிரபல ஜப்பான் அணியானது இலங்கை அணியை 3-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டி அசத்தியது. மறுமுனையில் நேபாள அணியுடன் 7-1 என்ற கோல்கள் அடிப்படையில் பூட்டான் அணி தோல்வியுற்றது.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை அணியானது பலம் மிக்க ஜப்பான் அணியை எதிர்கொண்டது. எதிர்பார்க்கப்பட்டது போலவே ஜப்பான் அணியானது போட்டியில் ஆதிக்கம் செலுத்தி முதல் 20 நிமிடங்களுக்குள் 2 கோல்களை பெற்றுக் கொண்டது. இலங்கை அணிக்கு 40ஆவது நிமிடத்தில் கோல் அடிப்பதற்கு வாய்ப்பு ஒன்று கிடைத்த பொழுதும், அவ்வாய்ப்பை அது தவறவிட்டது. எனவே ஜப்பான் அணியானது ஆதிக்கம் செலுத்தி மீண்டும் ஒரு கோல் அடித்து 3-0 என்ற கோல்கள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. எனினும் போட்டியை விட்டுக்கொடுக்காத இளம் இலங்கை அணி வீரர்கள், முதற் பாதி முடிவடைவதற்கு முன்னராக ஒரு கோல் அடித்தனர். சிறப்பாக செயற்பட்ட மொஹமட் முர்ஷித் முதல் கோலை அடித்து இலங்கை அணிக்கு நம்பிக்கை வழங்கினார். முதற் பாதியில் பலம் மிக்க ஜப்பான் அணிக்கு 3 கோல்கள் அடிக்க இலங்கை அணி வழியமைத்த பொழுதும், இரண்டாம் பாதியில் சிறப்பாக விளையாடியது. இரண்டாம் பாதியில் சிறப்பாக தடுத்து விளையாடிய இலங்கை அணியானது ஜப்பான் அணிக்கு எந்த ஒரு கோலையும் அடிக்கவிடாதது ஜப்பான் அணிக்கு ஏமாற்றத்தையும், இலங்கை அணி ரசிகர்களுக்கு மகிழ்ச்சியையும் அளித்தது. எனினும் இலங்கை அணியினாலும் இரண்டாம் பாதியில் எந்த ஒரு கோலையும் போடா முடியவில்லை. இரண்டு அணிகளுக்கும் பல வாய்ப்புகள் கிடைத்தாலும் இரண்டு அணிகளும் அவற்றை சரிவர பயன்படுத்தவில்லை. இறுதியில் ஜப்பான் வெற்றி பெற்றது.

## கரீபியன் தொடரில் சங்கா - மாலிங்க

2017 ஆம் ஆண்டுக்கான கரிபியின் பிரிமியர் லீக் தொடருக்கான வீரர்கள் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த வீரர்கள் தெரிவில் இலங்கையைச் சேர்ந்த இரண்டு முன்னணி வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கை அணியின் முன்னணி வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் லசித் மலிங்க ஆகியோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குமார் சங்கக்கார ஜமைக்கா டளவாஸ் அணிக்கு விளையாடவுள்ளதுடன், லசித் மலிங்க சென் லூசியர் ஸ்டார்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார். குறித்த அணிகள் சங்கக்கார மற்றும் மலிங்கவை தலா ஒரு இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு (இலங்கை பணத்தில் சுமார் 1.9 கோடி) வாங்கியுள்ளன.

இதேவேளை, கரிபியன் பிரிமியர் லீக் தொடரில் இம்முறை, மேற்கிந்திய தீவுகளின் லெண்டில் சிம்மன்சை அதிகபட்சமாக ஒரு லட்சத்து 60 ஆயிரம் டொலருக்கு ஜமைக்கா தல்லாவாஸ் அணி ஏலம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், கரிபயின் பிரிமியர் லீக் தொடர், எதிர்வரும் ஜூன் 29 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## பயிற்சியாளராகிறார் டிராவிட்?

இந்திய ஏ அணியின் பயிற்சியாராக இருந்துவரும் அணியின் முன்னாள் தலைவரான ராகுல் டிராவிட், இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்படக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது பயிற்சியாளராக பணியாற்றிவரும் அனில் கும்ப்ளேவுக்கு பதவி உயர்வு அளிக்கும் விதமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், அனில் கும்ப்ளே இந்திய அணியின் இயக்குநராக பணியமர்த்தப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் சபையை நிர்வகிக்க உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் குழு இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கூறப்படுகிறது.

இது உண்மையாகும் பட்சத்தில் தற்போது நடைபெற்று வரும் அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடர்தான் அனில் கும்ப்ளே கடைசியாக பயிற்சியாளராக பணியாற்றும் தொடராக இருக்கும் எனவும் அவர் தனது புதிய பணியை ஏப்ரல் 14ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளார்.



மூதூர் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் (11) பாடசாலை அதிபர் ஏ.எச்.எம்.பஸீர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர், ஆர்.எம்.அன்வர், மூதூர் பிரதேச சபையின் செயலாளர் ஏ.டபிள்யு.எம்.ஹில்மி, உடற்கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.டபிள்யு.எம். ஜவாத், மூதூர் மின் அத்தியட்சகர் என்.சிவக்குமார் உள்ளிட்ட பல அதிதிகளும் கலந்து கொண்டனர். இக்பால் (நீலம்) இல்லம் 298 புள்ளிகளைப் பெற்று 2017ஆம் ஆண்டின் சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது. இதன்போது விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸூக்கு பாடசாலை அதிபர் மற்றும் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

**(றியாத் ஏ. மஜீத்)**

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 13TH MARCH 2017